Stay Connected with:
Uthayan.com

வன்னி : ரூபா.20
யாழ். : ரூபா.20
கொழும்பு : ரூபா.30

உதயன்

UTHAYAN - A Lively National Tamil Daily




மழைக்கான சாத்தியம் உண்டு.

27°C 26°C

பக்கம் 24 ■ சுடர்: 28 ■ கதிர்: 310 ■ வள்ளுவர் ஆண்டு: 2044 | புரட்டாதி 17, வியாழன் 03.10.2013

# வெளிநாட்டு அழுத்தங்களால் தேவையற்ற எதிர்விளைவுகள்

### ஐ.நாவிடம் கூறினார் பீரிஸ்



கொழும்பு, ஒக்.3
இலங்கை மீது அவசியமற்ற முறையில் வெளிநாடுகள் அழுத்தங்களைப் பிரயோகிப்பதானது உள்நாட்டிலும் வேறு வகையிலும் தேவையற்ற எதிர் விளைவுகளை உருவாக்கும் என்று வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் ஐ.நா சபையிடம் தெரிவித்துள்ளார்.
ஐ.நா. சபையானது இலங்கையின் பிரச்சினைகளின் சிக்கல்கள் மற்றும் வேறுபாடுகளைப் புரிந்து கொண்டு அதனுடன் இணைந்து செயல்பட முன்வர வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

21

# வடக்கு அமைச்சர் பதவிகளுக்கு கோரப்பட்டுள்ளன விண்ணப்பங்கள்

### நேற்று அறிவித்தார் சம்பந்தன்


யாழ்ப்பாணம், ஒக்.3
வடக்கு மாகாண சபைக்கான அமைச்சர்களை நியமிப்பதில் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் கட்சிகள் இடையே இழுபறி நிலை நீடித்து வருகிறது. இதனை அடுத்து அமைச்சர் பதவிகளை வகிக்கவிரும்பும் உறுப்பினர்கள் அதற்காக விண்ணப்பங்களை அனுப்பிவைக்குமாறும் அது குறித்து கட்சியின் உயர்பீடம் இறுதி முடிவு எடுக்கும் என்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் கூறியுள்ளார்.
வடக்குமாகாண சபையைக் கைப்பற்றிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மாகாண சபை அமைச்சுக்களை வழங்குவது தொடர்பில் தொடர்ச்சியாக அங்கத்துவக் கட்சிகளிடையே கலந்துரையாடல்

21

# வடக்குக்கு அதிக அதிகாரம்; இந்தியா முழுக் கரிசனை

## ஐ.நாவில் சந்திப்புக்கு மஹிந்த அழைப்பு விடுத்தது உண்மையே என்கிறார் பிரதமர் மன்மோகன் சிங்

சென்னை, ஒக்.3
வடக்கு மாகாண சபையைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கைப் பற் றியுள்ள நிலையில், மாகாண சபைக்கு அதிகாரப் பகிர்வும் அதிக அதிகாரங்களும் வழங்கப் பட வேண்டும். இதில் இந்தியா முழுக் கரிசனையாக உள்ளது என்று இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் தெரிவித்துள்ளார்.
இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தன்னைச் சந்திப்பதற்கு நேரம் ஒதுக்கும்படி கேட்டிருந்தார் எனவும் மன் மோகன் கூறினார்.
ஐ.நா. பொதுச் சபைக் கூட்டத்தில் பங்கேற்றுவிட்டு புதுடில்லி திரும்பும் வழியில் விமானத்தில் வைத்து இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் செய்தியாளர்களைச் சந்தித்தார்.
இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உங்களைச் சந்திப்பதற்கு விரும்பியதாகவும் நீங்கள் அந்தச் சந்திப்பைத் தவிர்த்து விட்டதாகவும் கூறப்படுகின்றதே என இந்தியப் பிரதமரிடம் கேள்வி எழுப்பினார் ஊடகவியலாளர் ஒருவர்.



இதற்குப் பதிலளித்த மன்மோகன் சிங், "இலங்கை ஜனாதிபதி என்னிடம் கடந்த மாதம் 24 ஆம் திகதிக்கும் 27 ஆம் திகதிக்கும் இடையில் ஐ.நா. வரும் போது சந்திக்க நேரம் ஒதுக்கித் தருமாறு கேட்டிருந்தார்.
ஆனால் 27 ஆம் திகதி மாலையில் நான் நியூயோர்க் சென்றடைந்தேன். இதனால் அவரைச் சந்திக்க முடியவில்லை" என்று பதிலளித்தார்.
"வடக்கு - கிழக்கு மாகாணங்களுக்கு அதிகாரப் பகிர்வும் அதிக அதிகாரங்களும் வழங்கப்பட வேண்டும் என்பதை இந்தியா, ஆரம்பத்திலிருந்தே வலியுறுத்தி வந்திருக்கின்றது. இப்போதும் அதையே வலியுறுத்துகின்றோம். இந்தியாவின் முழுமுனைப்பும் அதற் கானதாகவே இருக்கும்" என்றும் மன்மோகன் சிங் அங்கு கூறினார். (த-5)

### மாந்தை மேற்கு பிரதேச செயலர் பிரிவில்

# 2 ஆயிரம் ஏக்கர் காணியை தனியார் அபகரிக்க முயற்சி

மன்னார், ஒக்.3
மன்னார் மாந்தை மேற்கு பிரதேச செயலர் பிரிவில் உள்ள பரப்புக் கடந்தான், கொக்கு மோட்டைப் பகுதியில் பொது மக்களுக்குச் சொந்தமான 2,000 ஏக்கர் வரையான காணியை மன்னார் நகர்ப்பகுதியை சேர்ந்த மூன்று தனி நபர்கள் கையகப்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டுள்ளதாகவும், இதற்கு மாந்தை மேற்குப் பிரதேச செயலரும் உடந்தையாக இருப்பதாகவும் பொது அமைப்புக்கள் குற்றம் சாட்டியுள்ளன.
எனினும், இந்தக் குற்றச்சாட்டை மறுத்திருக்கிறார் மாந்தை மேற்கு

21


# இலங்கை பொறுப்புக்கூறாவிடின் அனைத்துலக விசாரணை தான்

### நவியின் அறிக்கையை ஆமோதிக்கிறது அமெ.

நியூயோர்க்,ஒக் 03
ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இலங்கை தொடர்பில் ஆணையாளர் நவநீதம்பிள்ளை சமர்ப்பித்த வாய்மூல அறிக்கை மற்றும் கருத்துக்கு அமெரிக்கா ஆதரவு தெரிவித்துள்ளது.
போருக்குப் பிந்திய பொறுப்புக் கூறும் நடவடிக்கைகளில் அர்த்தமுள்ள முன்னேற்றம் காணப்படாவிட்டால், அனைத்துலக விசாரணை அழைப்புகள் தொடரும் என்றும் அது கூறியுள்ளது.
ஐ.நா. மனித உரிமைகள் சபையின் 24ஆவது அமர்வு கடந்த வாரம் முடிவுக்கு வந்துள்ள நிலையில், இந்த அமர்வு குறித்து அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் பேச்சாளர் பணியகத்தினால் அறிக்கை ஒன்று வெளியிடப்பட்டுள்ளது.
இதில், சிரியா, சூடான், கொங்கோ, மத்திய ஆபிரிக்க குடியரசு, சோமாலியா, சிறிலங்கா ஆகிய நாடுகளின் மனிதஉரிமைகள் நிலை குறித்து, ஐ.நா மனித உரிமைகள் சபையில் அமெரிக்கா வெளிப்படுத்திய கரிசனை குறித்துச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.
இந்த அறிக்கையில், இலங்கை தொடர்பான அமெரிக்காவின்

21

# சம்பந்தன் வரவேற்பு



கொழும்பு, ஒக். 3
அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தைப் பலப்படுத்துவது தொடர்பான பிரேரணை கிழக்கு மாகாண சபையில் வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டதை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் வரவேற்றுள்ளார்.
"சிறுபான்மையின மக்களுக்கு அதிகூடிய அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டும் என்பதை பெரும்பான்மையினச் சிங்கள உறுப்பினர்களும் விரும்புகின்றனர் என்பது இந்தப் பிரேரணை நிறைவேற்றத்தின் ஊடாக நிரூபணமாகின்றது" என்றும் அவர் தெரிவித்தார்.
கிழக்கு மாகாணசபையில் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ், சமர்ப்பித்த 13 ஆவது திருத்தத்தைப் பலப்படுத்துவது தொடர்பான

21

# மாநகர சபையில் மோசடி ஒப்புக்கொண்டார் முதல்வர்

### சக உறுப்பினர் விஜயகாந்த் மீதும் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், ஒக்.3
தனது நிர்வாகத்தின் கீழ் உள்ள யாழ். மாநகர சபையில் மோசடிகள் இடம்பெற்றுள்ளதை யாழ். மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா ஒத்துக்கொண்டார்.
அது குறித்து முக்கிய ஆதாரங்கள் தன்னிடம் இருப்பதாகவும் அவர் நேற்று பகிரங்கமாகக் கூறினார்.
யாழ். மாநகர சபை தற்காலிக ஊழியர்கள் தம்மை நிரந்தரமாக்குமாறு உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதற்கு யாழ்.மாநகர சபை ஆளுந்தரப்பு உறுப்பினர் சுதர்சிங் விஜயகாந்த் தலைமை தாங்கினார்.
இது குறித்து முதல்வர் யோகேஸ்வரி நேற்று ஊடகவியலாளர் சந்திப்பில் தெரி வித்ததாவது:
அதேபோல தற்போது எமது சபையின் சுகாதார குழு தலைவரான சுதர்சிங் விஜயகாந்த் பல ஊழியர்களிடம் நிரந்தரம் ஆக்குகின்றேன் என கூறி பணம் பெற்றுள்ளதாக எமக்கு முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்று உள்ளன.
அவ்வாறு அவர்களிடம் பணம் பெற்றவரே

21

# தேர்தல் விஞ்ஞாபன வழக்கு ஒத்திவைப்பு

கொழும்பு, ஒக்.3
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனம் குறித்த வழக்கு மீண்டும் ஒத்திவைக்கப்பட்டுள்ளது. 2ஆவது தடவையாக நேற்றுப் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போதே நீதிமன்றம் இந்த

21

# சிங்களவரிடம் பொய் கூறி பிழைக்கும் இனவாதிகள்

### மனோ கணேசன் காட்டம்

கொழும்பு, ஒக்.03
மாகாண சபை முறைமை, அதிகாரப் பகிர்வுக்கொள்கை தொடர்பில் சிங்கள மக்களிடம் பொய்யான தகவல்களை, சட்டத்தில் இல்லாததைச் சொல்லித் திரியும் சிங்கள இனவாதக் கூட்டமைப்பினர் அதனை நிறுத்த வேண்டும் என்று ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன் எச்சரித்துள்ளார்.
அதிகாரத்தைப் பகிர்ந்து ஐக்கியப்படும் இயக்கத்தின் ஊடக மாநாடு கொழும்பில் நேற்று புதன்கிழமை இடம்பெற்றது. இதில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் அங்கு மேலும் கூறியதாவது
13ஆவது திருத்தம், மாகாண சபை முறைமை, அதிகாரப்

21

# ஜனாதிபதித் தேர்தலில் அனோமா பொன்சேகா?

கொழும்பு.ஒக் 03
ஜனநாயகக் கட்சியின் தலைவர் சரத் பொன்சேகாவின் மனைவியான அனோமா பொன்சேகாவை எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட வைப்பது தொடர்பில் அந்தக் கட்சி கவனம் செலுத்தி வருவதாகத் தெரியவருகிறது.
மேல் மாகாண சபைத் தேர்தலில் முதலமைச்சர் வேட்பாளராக அனோமா பொன்சேகாவைப் போட்டியிட வைப்பதென முன்னர் தீர்மானிக்கப்பட்டிருந்ததாகத் தகவல்கள் வெளியாகி இருந்தன.
இந்த நிலையில் அதற்குப் பதிலாக ஜனாதிபதித் தேர்தலில் அவரைக் களமிறக்க ஜனநாயகக் கட்சி தீர்மானித்துள்ளதாகத் தெரியவருகிறது.
இதேவேளை அனோமா பொன்சேகாவை ஜனாதிபதித் தேர்தலில் பொதுவேட்பாளராக நிறுத்த ஆதரவு வழங்குமாறு ஜனநாயகக் கட்சியின் பிரதித் தலைவர் ஜயந்த கொட்டகொட ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலரிடம் கோரிக்கை விடுத்துள்ளதாகவும் கூறப்படுகிறது. (த)

# வட மாகாண சபை மூலம் மீனவர் பிரச்சினைக்கு தீர்வு

## பெறப்பட வேண்டும் என்கிறார் கடற்றொழில் சமாசத் தலைவர்

யாழ்ப்பாணம். ஒக்.03
இந்திய இழுவைப் படகுகளின் வருகை, சீனப் படகுகளின் வருகை, தென்னிலங்கை மீனவர்களின் வருகை இவற்றுக்கு மேலாக அவர்கள் பயன்படுத்தும் தடை செய்யப்பட்ட மீன்பிடி உபகரணப் பாவனையால் வட மாகாண கடற் றொழிலாளர்களின் வாழ்வு தொடர்ந்தும் பாதிக்கப்படுகின்றது.
அமைகின்ற எமது மாகாண சபை மீனவர்களின் இந்தப் பிரச்சினை தொடர்பில் கூடிய அக்கறை எடுக்க வேண்டும் என்று வட மாகாண கடற்றொழிலாளர் கூட்டமைப்பின் தலைவர் என்.வி.சுப்பிரமணியம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.
இந்த அத்துமீறல்கள் மற்றும் தடை செய்யப்பட்ட உபகரணங்களைப் பயன்படுத்தி மீன்பிடியில் ஈடுபடுதல் தொடர்பில், இலங்கை அரசுக்கு பல வடிவங்களில் தெரியப்படுத்தியும் எந்த வித பலனும் கிடைக்கவில்லை.
எமது கடற்றொழிலாளர் பிரச்சினைக்கு தீர்வைத் தேடலாம் என்ற எண்ணத்தில் வட மாகாண சபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் போட்டியிட்டிருந்தேன். துரதிர்ஷ்டமாக என்னால் வெற்றிபெற முடியவில்லை. இருப்பினும் வாழ்வாதாரத்துக்கு கடற்றொழிலையே நம்பி வாழும் எமது சமூகத்தினர் இந்திய இழுவைப் படகுகளின் வருகை, சீனப் படகுகளின் வருகை, தென்னிலங்கை மீனவர்களின் வருகை இவர்களால் பயன்படுத்தப்படும் தடை செய்யப்பட்ட மீன்பிடி உபகரணப் பாவனை என்பவற்றால் ஏற்படுகின்ற கடல் வளங்கள் அழிப்பு மீன்பிடி வலைகள் அழிப்பு போன்றவற்றால் எமது மீனவர்கள் அல்லலுறுகின்றார்கள்.
இந்த துர்ப்பாக்கிய நிலையை கண்டும் காணாமலும்விட முடியாது. இந்த நிலைமை தொடருமானால் குறுகிய காலத்தில் கடற்றொழில் வளங்கள் அழிவடைந்து போகும் நிலை ஏற்படும்.



எனவே நான் தேர்தலில் பின்னடைவைச் சந்தித்திருப்பினும் கடற்றொழில் சமூகத்தின் பிரச்சினைக்கு முன்பு செயற்பட்டதை விட முனைப்புடன் பணியாற்றுவேன். இது தொடர்டபில் வட மாகாண முதலமைச்சருடன் இணைந்து பணியாற்றுவேன் - என்று தெரிவித்தார். (ஜ-5)

# ராமேஸ்வரம் கடற்பரப்பில் ஈழத் தமிழர் நேற்றுக் கைது

ராமேஸ்வரம். ஒக்.03
ராமேஸ்வரம் கடற்பரப்பில் கடும் பாதுகாப்பை மீறி ராமேஸ்வரம் அருகே அதிவேகப் படகில் சென்று இறங்கிய ஈழத் தமிழர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று இந்தியச்செய்திகள் தெரிவிக்கின்றன.
இலங்கையில் இருந்து தீவிரவாதிகள் கடல்வழியே ஊடுருவித் தமிழகத்தில் தாக்குதல் நடத்தக் கூடும் என்று அண்மையில் தகவல்கள் வெளியானது.
இதைத் தொடர்ந்து கடற்பரப்பில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டது.
இந்நிலையில் அதிவேகப் படகு ஒன்றில் ராமேஸ்வரம் அருகே மர்ம நபர் ஒருவர் வந்திறங்கியதாகப் பொலிஸாருக்கு தகவல் கிடைத்தது. கடலில் ரோந்து பணியில் ஈடுபட்டிருக்கும் கடற்படைக்கும் கூடத் தெரியாமல் அதிவேகப் படகு ஊடுருவியது அதிர்வலைகளை ஏற்படுத்தியது.
இதைத் தொடர்ந்து அந்தப் பகுதியில் தீவிர தேடுதல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. அப்போது அங்கு பதுங்கியிருந்த மன்னார் பேசாலையைச் சேர்ந்த செல்லக் கிருஷ்ணன் என்பவர் கைது செய்யப்பட்டார். அவரிடம் நடத்தப்பட்ட விசாரணையில் தாம் திருச்சியில் தங்கியிருப்பதாகவும் அடிக்கடி இலங்கைக்குக் கடல்வழியே படகில் சென்று வந்ததாகவும் தெரிவித்துள்ளார். (த)

# அமைச்சுப் பதவிக்கு அடிபடவில்லை என்கிறார் மாகாண உறுப்பினர் அனந்தி

யாழ்ப்பாணம். ஒக்.03
அமைச்சுப் பதவிகளுக்காக முரண்பட்டுக் கொள்வது உன்னதமான இலக்கிற்காக எமக்கு மிகப் பெரும் வெற்றியைச் தந்த மக்களை சலிப்படையச் செய்துவிடும். அது மட்டுமல்ல மக்களிடமிருந்து நாம் அன்னியப்படுத்தப்படும்நிலையேஏற்படும். நான் கூட்டமைப்பால் புறக்கணிக்கப்படுவதாக வெளியாகும் செய்திகள் தவறானவை. எனவே மக்களுக்கு சேவை செய்யும் வகையில் அமைச்சுப் பதவிகள் பகிரப்படுவதே பொருத்தமானது. இவ்வாறு தெவித்தார்.
வட மாகாண சபை உறுப்பினர் திருமதி அனந்தி சசிதரன் இது தொடர்வில் அவர் விடுத்தள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது
ஒரு சில இணைய ஊடகங்களில் நாம் அமைச்சுப் பதவிக்கு அடிபடுவதாக செய்திகள் வெளியாகி இருந்தன. இத்தகைய திரிபுபடுத்தப்பட்ட செய்திகளை முற்றாக நிராகரிக்கிறேன்.
பெண் ஒருவரை அமைச்சர் ஆக்குவதனூடாக தமக்காக குரல் கொடுக்கும் சக்தி ஒன்று தொடர்பில் பெண்கள் அமைப்புகள் கொண்டுள்ள அக்கறையினை நன்றியுடன் புரிந்துகொள்கிறேன் என்றுள்ளது. (ஜ-5)



தமக்காக குரல் கொடுக்கும் சக்தி ஒன்று தொடர்பில் பெண்கள் அமைப்புகள் கொண்டுள்ள அக்கறையினை நன்றியுடன் புரிந்துகொள்கிறேன்

# ஐ.நா. சட்டக் குழுவில் இலங்கை கனேடிய அமைச்சர் அதிருப்தி

நியூயோர்க்.ஒக் 03
ஐ.நா. சபையின் 68 ஆவது பொதுச் சபையின் ஆறாவது சட்டக் குழுவுக்கு இலங்கை தெரிவுசெய்யப்பட்டுள்ளது.
நியூயோர்க்கில் நேற்றுமுன்தினம் அந்தக் குழு கூடியபோது ஐ.நாவுக்கான இலங்கையின் நிரந்தர வதிவிடப் பிரதிநிதி பாலித கோஹென்ன குழுவுக்குத் தெரிவு செய்யப்பட்டார்.
பொதுச் சபைக் கூட்டத்தில் முன்வைக்கப்படும்சட்டரீதியான கேள்விகள் குறித்து ஆராய்வதற்காக இந்த 6 ஆவது சட்டக் குழு ஏற்படுத்தப்பட்டது.
ஐ.நா. பொதுச் சபையில் உறுப்பு நாடுகள் அங்கம் வகிக்கும் குழுக்களில் இந்தச் சட்டக்குழுவானது முக்கியமான குழுவாகும்.
அதேவேளை இந்தக் குழுவுக்கு இலங்கை தெரிவு செய்யப்பட்டமை ஏமாற்றமளிப்பதாகக் கனடா தெரிவித்துள்ளது.
மனித உரிமை மீறல்கள் தொடர்பான குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டு வரும் நிலையில் இலங்கையை ஐ.நா. சட்டக் குழுவுக்குத் தெரிவு செய்தமை ஏமாற்றமளிப்பதாகக் கனேடிய வெளிவிவகார அமைச்சர் ஜோன் பயர்ட் தெரிவித்துள்ளார்.
ஐ.நாவின் 6ஆவது சட்டக் குழுவுக்குத் தெரிவு செய்யப்பட்ட முதல் இலங்கையின் பிரதிநிதி பாலித கோஹென்ன ஆவார்.
1958 ஆம் ஆண்டு அன்றைய இலங்கையின் பிரதிநிதி சேர் க்ளேட் சி கொரோயா ஐ.நாவின் 5ஆவது குழுவான வரவு செலவுக் குழுவில் இடம்பெற்றதுடன் 1960 ஆம் ஆண்டு முதல் குழுவான ஆயுத ஒழிப்புக் குழுவிலும் இடம்பெற்றிருந்தார்.
இதனையடுத்து 33 வருடங்களின் பின்னர் ஸ்டென்லி கல்பகே 1993 ஆம் ஆண்டு 4ஆவது குழுவான காலனித்துவத்துக்கு எதிரான குழுவில் அங்கம் வகித்தார்.
20 வருடங்களுக்கு பின்னர் தற்போது ஐ.நா. சட்டக் குழுவுக்கு இலங்கையின் பிரதிநிதி ஒருவர் தெரிவு செய்யப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (த)

# 70 சதவீதமானோர் சித்தி

கொழும்பு, ஒக்.03
ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சுமார் 70 சதவீதமானோர் சித்தியடைந்துள்ளனர் எனக் கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.
கடந்த ஒகஸ்ட் மாதம் நடைபெற்ற இந்தப் பரீட்சையில் 2,23,908 பேர் சித்தியடைந்துள்ளதாக அவர் குறிப்பிட்டார்.
இதேவேளை, இந்தப் பரீட்சை விடைத்தாள்கலை மீளத் திருத்துவதற்கு ஒக்ரோபர் 15ஆம் திகதிக்கு முன்னர் பாடசாலை அதிபர்களின் ஊடாக விண்ணப்பிக்குமாறு பரீட்சைகள் ஆணையாளர் அறிவித்துள்ளார். (த)

# மஹரகம மாநகர சபை உறுப்பினர் கைது

கொழும்பு. ஒக்.03
மஹரகம மாநகர சபை உறுப்பினர் நிசாந்த விமலசந்திர மஹரகம பொலிஸாரினால் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளார்.
மஹரகம பிரதேச செயலாளர் காரியாலயத்தில் திட்டமிடல் பணிப்பாளர் அமல் ரணவீரவை தாக்கிய குற்றஞ்சாட்டின் பேரிலேயே அவர் கைது செய்யப்பட்டுள்ளார். (த)

# நைஜீரிய பிரஜைகள் இருவருக்கு மறியல்

கொழும்பு.ஒக் 03
ஆபிரிக்க வங்கியொன்றின் அதிகாரிகள்போல நடித்து லொத்தர் மோசடியில் ஈடுபட்டனர் எனக் குற்றம் சாட்டப்பட்ட நைஜீரியப் பிரஜைகள் இருவரை ஒக்ரோபர் மாதம் 9 ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.
இரண்டு நைஜீரியர்களும் ஒரு இலங்கை வாலிபரிடம் 1600 அமெரிக்க டொலரை ஏமாற்றிப் பெற முயன்றனர் என குற்றஞ்சாட்டி கொழும்பு கோட்டை நீதிமன்றில் வழக்கொன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.
லொத்தர் ஒன்றில் 1.6 மில்லியன் ரூபாவைத் தான் வென்றுள்ளதாகவும் அந்தப் பரிசுத் தொகையைப் பெற 1600 அமெரிக்க டொலருடன் கொம்பனி வீதியிலுள்ள பிரபல ஹோட்டல் ஒன்றில் சந்திக்க வருமாறு தனக்கு மின் அஞ்சலும் குறுஞ் செய்தியும் அனுப்பப்பட்டதாக அந்த இலங்கையர் முறைப்பாடு செய்திருந்தார்.
இதைத் தொடர்ந்து ஒக்காரோ கெனித், கூகோ மத்தியூ அவுஸி ஆகிய இரு சந்தேக நபர்களையும் பொலிஸார் கைது செய்தனர்.
சந்தேக நபர்களை பொலிஸார் கொழும்பு கோட்டை நீதிவான் திலின கமகேயிடம் முற்படுத்தப்பட்டபோது அவர் ஒக்ரோபர் 9 ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (த)

# இலங்கையர் சென்னையில் கைது

சென்னை, ஒக்.03
போலி வசிப்பிட ஆவணங்களை கொடுத்து இந்தியக் கடவுச்சீட்டை பெற விண்ணப்பித்த இலங்கையர் ஒருவர் சென்னையில் நேற்றுக் கைதுசெய்யப்பட்டுள்ளார்.
இலங்கைத் தமிழரான 27 வயதான ஜீ. பிரகாஷ் என்ற இந்த நபர் வசிப்பதாக விண்ணப்பத்தில் குறிப்பிட்டிருந்த விலாசத்தில் அவர் இல்லை எனப் புலனாய்வு அதிகாரிகள் கடவுச்சீட்டு அலுவலகத்துக்கு அறிக்கை சமர்ப்பித்திருந்தனர்.
இலங்கையில் போர் நடைபெற்ற் காலத்தில் இந்தியாவுக்குச் சென்றிருந்த அவர் திருச்சிக்கு அருகில் உள்ள கொட்டாப்பட்டு முகாமில் வசித்து வந்துள்ளார்.
கனடாவுக்கு செல்லத் திட்டமிட்டு அவர் இந்தியக் கடவுச்சீட்டைப் பெற விண்ணப்பித்திருந்ததாகக் கூறப்படுகிறது.
விண்ணப்பத்தில் அவரது விலாசம் சென்னை ஆயிரம் விளக்கு பிரதேசத்தில் உள்ள குலாம் அப்பாஸ் அலிகான் வீதியில் இருப்பதாகக் குறிப்பிடப்பட்டிருந்தது.
இந்தியக் குடிவரவு குடியகல்வு திணைக்களம் ஆயிரம் விளக்கு பொலிஸில் செய்த முறைப்பாட்டை அடுத்துச் சந்தேக நபர் கைதுசெய்யப்பட்டுள்ளார். (த)

## 2014 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில்

# விலைவாசி குறைப்புக் கோரி தொழிற் சங்கப் போராட்டம்

யாழ்ப்பாணம், ஒக்.03
அடுத்த ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் எதிர்வரும் நவம்பர் மாதம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ள நிலையில் விலைவாசி குறைப்பு உட்பட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து தொழிற் சங்கப் போராட்டத்தில் ஈடுபடப் போவதாக இலங்கை ஆசிரியர் சங்கம் அறிவித்துள்ளது.
இது தொடர்பில் சங்கம் மேலும் தெரிவித்துள்ளதாவது:
தமக்கு ஏற்படும் அழுத்தங்கள், சுமைகளுக்கு எதிராக கிளர்ந்தெழுந்தால் அரசு இராணுவ பலத்தைப் பயன்படுத்தி மக்கள் போராட்டத்தை முறியடிப்பதை அண்மைய நிகழ்வுகளில் காண முடிகின்றது.
அரசு தமக்குச் சாதகமான முறையில் தேர்தல்களை நடத்தி அந்த வெற்றிகளை மிகைப்படுத்தி தனது ஜனநாயகச் செயற்பாடுகள் சம்பந்தமாக போலித்தனம் காட்டி வருகிறது.
இவ்வாறான அரசின் கபட நாடகங்களை வெளிக் கொண்டு வருவதற்கு எமது சங்கம் முயற்சிக்கின்றது. ஆனாலும் ஒரு துறை மட்டும் அரசுக்கு எதிராக கிளர்ந்தெழுவதில் பயனில்லை. எனவே கல்வித் துறை சார் சங்கங்கள் மட்டுமன்றி ஏனைய தொழிற்சங்கங்களும் எம்மோடு இணைந்து செயற்பட வேண்டும்.
நாம் தொழிற் சங்கப் பிரச்சினைகள் மட்டுமன்றி தொழிலாளர் விவசாயிகள் மாணவர் பிரிவினருக்காகவும் குரல் கொடுத்து வருகிறோம். அத்துடன் நீதித் துறையில் சுதந்திரத்துக்காகவும் சட்டத்தின் ஆட்சியினை பாதுகாக்கவும் இணைந்து செயற்பட்டு வருகிறோம். மின்சாரக் கட்டணங்கள் அதிகரிக்கப்பட்டபோது அதற்கு எதிராக தொழிற் சங்கங்களுடன் இணைந்து நாமும் போராடினோம். இது போன்று அடுத்த ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் அரச சேவை ஊதிய உயர்வு, விலை வாசி இறக்கம் உள்ளடக்கப்பட வேண்டுமென வலியுறுத்தி போராட்டத்தில் ஈடுபட தீர்மானித்துள்ளேம். எனவே ஏனைய தொழிற்சங்கங்களும் எம்மோடு இணைந்து போராட வேண்டும் என்றுள்ளது. (ஜ-4)

# மினிபஸ் தடம்புரண்டு ஏழுபேர் காயம்

வடமராட்சி, ஒக்.03
வேகக் கட்டுப்பாட்டை இழந்த மினிபஸ்தடம்புரண்டத்தில்சாரதி உட்பட 7 பேர் காயமடைந்தனர்.
இந்தச் சம்பவம் நேற்றுக் காலை 7 மணியளவில் வல்வை முனியப்பர் கோயிலடியில் நடைபெற்றுள்ளது.
பருத்தித்துறையில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி சென்ற மினிபஸ் திடீரென வேகக் கட்டுப்பாட்டை இழந்து வீதியின் மறு கரையில் தடம் புரண்டுள்ளது.
இச் சம்பவத்தில் சாரதி உட்பட ஏழுபேர் காயங்களுக்குள்ளானார்கள். காயமடைந்தவர்கள் பருத்தித்துறை அரசினர் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றனர். (ஜ-8)

## மாந்தை கிழக்கு வயல்வெளி வீதிகள் பயணிக்க முடியாத நிலையில்

வலி.தென்மேற்கு, ஒக்.3

மாந்தை கிழக்கு பிரதேசத்திலுள்ள வயல் வெளியூடாகச் செல்லும் நீர்ப்பாசனத் திணைக்களத்துக்குச் சொந்தமான பல வீதிகள் பல வருடங்களாகப் புனரமைக்கப்படாமல் இருப்பதனால் பொதுமக்கள் குறிப்பாக விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.


போர்க் காலச் சூழ்நிலை காரணமாகச் சேதமடைந்த நிலையிலிருந்த வீதிகள் மக்கள் குடியமர்த்தப்பட்டு நான்கு வருடங்களுக்கு மேலாகியும் புனரமைக்கப்படாததால் மக்களின் நடமாட்டத்துக்கும் வாகனப் போக்குவரத்துக்கும் இடையூறு ஏற்பட்டுள்ளது.

மாந்தை கிழக்கு பிரதேச செயலகத்துக்குச் செல்லும் சிவபுரம்-செல்வபுரம், சிவபுரம்-பாண்டியங்குளம் வீதி படுமோசமான நிலையிலுள்ளது. மழை காலங்களில் பயணம் செய்ய முடியாத நிலை ஏற்படுகிறது.

இதேவேளை கொல்லவிளாங்குளம், வன்னிவிளாங்குளம், பாலைநகர் ஆகிய இடங்களுக்கு வயல் வெளியூடாகச் செல்லும் வாய்க்கால்களுடன் இணைந்த வீதிகளும் சேதமடைந்துள்ளதால் குறிப்பாக விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

மாந்தை கிழக்கு பிரதேச செயலகத்தில் நடைபெறும் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களில் வீதிகளின் நிலை குறித்தும் புனரமைக்க வேண்டிய அவசியம் குறித்தும் பல தடவைகள் தெரிவிக்கப்பட்ட போதிலும் நிதியின்மையே இந்த நிலைக்குக் காரணம் எனத் தெரிவிக்கப்படுகிறது. (வ-115)






மகாத்மா காந்தியின் 144 ஆவது ஜெயந்தி தினத்தை முன்னிட்டு நேற்றுப் புதன்கிழமை யாழ்.ஆஸ்பத்திரிக்கு முன்பாகவுள்ள திருவுருவச் சிலைக்கு மலர் மாலை அணிவித்து கௌரவிக்கும் நிகழ்வு நடைபெற்றது. அகில இலங்கை காந்தி சேவா சங்க யாழ். மாவட்ட பணிமனையின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த நிகழ்வில் அகில இலங்கை காந்திசேவா நிலையத்தின் தலைவர் தி.இராசநாயகம், 'காந்தீயம்' நூலின் ஆசிரியர் உட்படப் பலர் திருவுருவச் சிலைக்கு மாலைகள் அணிவித்து மரியாதை செலுத்தினர். (ஒ-10-20)

# மாகாண சபையின் அனுமதியில் நியமனங்கள் வழங்கப்படும்

## மாநகர முதல்வர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஒக்.3

தகைமை குறைந்தவர்களை பணிக்கு உள்வாங்குவது தொடர்பில் மாகாண சபையிடம் முறையிடப்பட்டு அவர்களின் தீர்மானங்களின் அடிப்படையில் நியமனங்கள் வழங்கப்படும் என்று யாழ்.மாநகர சபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா தெரிவித்தார்.

மாநகர சபையில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாம் பதவிக்கு வரும் முன்னர் கடமையிலிருந்த ஆணையாளர்கள் அரசியல் காரணங்களுக்காக சுத்திகரிப்பு பணியாளர்களை உள்வாங்கியுள்ளதால் தான் பிரச்சினைகள் ஏற்பட்டன.

இவ்வாறு தெரிவித்தார் யாழ். மாநகர சபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா.

சேவைப் பிரமாண அடிப்படையில் பணியாளர்கள் நியமனம் தொடர்பில் பொதுச் சேவை ஆணைக்குழுவில் இருந்து 23.09.2013 இல் கடிதம் வந்துள்ளதாகவும் அதன் படி 1.1.2013 இல் இருந்து வயது அடிப்படையிலேயே உள்வாங்கப்படுவர்- என்றும் தெரிவித்தார். (வ-7)

# நிரந்தர மருத்துவர்கள் இல்லாத நட்டாங்கண்டல் மருத்துவமனை

## உடனே நியமிக்குமாறு மக்கள் வேண்டுகோள்

கிளிநொச்சி, ஒக்.3

முல்லைத்தீவு மாவட்டம் நட்டாங்கண்டல்மருத்துவமனைக்கு நிரந்தர வைத்தியர் ஒருவரை நியமிக்குமாறு இந்தப் பகுதி மக்கள் மீண்டும் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் மாந்தை கிழக்குப் பிரதேசத்தில் அமைந்துள்ள நட்டாங்கண்டல் மருத்துவமனைக்கு நிரந்தர மருத்துவர் நியமிக்கப்படாததால் இந்தப் பகுதி மக்கள் தமது மருத்துவத் தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியாத நிலையில் இடர்களுக்கு முகம்கொடுத்து வருகின்றனர்.

மாந்தை கிழக்குப் பிரதேசத்துக்கு உட்பட்ட மூன்று முறிப்பு, பாலைப்பாணி, கொம்பு வைத்த குளம், பனங்காமம், நட்டாங்கண்டல், பாட்டாளி புரம், கரும்புள்ளியான், பாண்டியன்குளம், பாலிநகர், சிவபுரம், செல்வபுரம் உள்ளிட்ட பகுதிகளைச் சேர்ந்த சுமார் 2300 வரையான குடும்பங்களும், ஏனைய வவுனியா மன்னார்மாவட்டத்தின் எல்லையோரக் கிராமங்களான சின்ன வலையன் கட்டு, விளாத்திக்குளம், மடத்து விளாங்குளம், குஞ்சுக்குளம், நவ்வி உள்ளிட்ட பகுதிகளைச் சேர்ந்த 450 இற்கும் மேற்பட்ட குடும்பங்களும் என 2750 வரையான குடும்பங்களைச் சேர்ந்த சுமார் 10 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்களின் மருத்துவ தேவைகளை நிறைவு செய்ய வேண்டிய நிலையில் இந்த மருத்துவமனை காணப்படுகின்றது.

ஆனால் இங்கு நிரந்தரமாக மருத்துவர்கள் நியமிக் கப்படாததால் இந்தப் பகுதி மக்கள் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

குறிப்பாக குறித்த மருத்துவமனைக்கு எடுத்து வரப்படும் அவசர நோயாளிகள் முதல் ஏனைய நோயாளிகள் வரை அங்கிருந்து ஒரு கிலோ மீற்றர் தொலைவில் உள்ள மல்லாவி வைத்தியசாலைச் செல்ல வேண்டிய நிலையே தற்போது காணப்படுகின்றது. ஆனால் இங்குள்ள வீதி மோசமான நிலையில் உள்ளதால் நோயாளர்களை ஏற்றிச் செல்லும் அம்புலன்ஸ் சில இடங்களில் பயணிக்க முடியாத நிலையே காணப்படுகின்றது.

எனவே இந்த மருத்துவமனைக்கு நிரந்தர மருத்துவர் ஒருவரை நியமிக்குமாறும் தமது மருத்துவ தேவைகளை நிறைவு செய்யுமாறும் இந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (க-6)

### வீதிப் புனரமைப்பின் இழுபறியால்

# இன்னல்களுக்கு உள்ளாகும் மக்கள்

பூநகரி, ஒக்.3

வீதிப் புனரமைப்புக்கு அதிக காலம் எடுப்பதால் பூநகரி முக்கொம்பன் பகுதிமக்கள் இன்னல்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

இங்கு அமைந்துள்ள 10 கிலோ மீற்றர் நீளமான வீதியைப் புனரமைப்பதற்கு மூன்று



ஆண்டுகளுக்கு மேலான காலம் எடுப்பதன் காரணமாகவே இந்தக் கிராம மக்களும் பாடசாலைகளுக்குச் செல்லும் ஆசிரியர்கள், மாணவர்களும் பெரும் போக்குவரத்து நெருக்கடிகளை எதிர்கொண்டு வருகின்றனர்.

கடந்த 2010 ஆம் ஆண்டு நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவினால் பூநகரியின் 10 ஆம் கட்டையில் இருந்து முக்கொம்பன் வரையான 10 கிலோ மீற்றர் நீளமான வீதியின் புனரமைப்பு வேலைகள் தொடக்கி வைக்கப்பட்டன.

இந்த வீதியில் குவிக்கப்பட்டிருந்த கிரவல் மண் ஓர் ஆண்டு காலத்துக்குப் பயன்படுத்தப்படாத நிலையில் காணப்பட்டது. மேலும் இந்த வீதியின் வேலைகள் பெரும் இழுபறிகளுக்கு மத்தியில் ஆரம்பிக்கப்பட்ட போதிலும் இன்னமும்நிறைவுபெறவில்லை.

இதனால் யாழ்ப்பாணத்தில் இருந்து அக்கராயன் வரை பயணிக்கும் அரச பஸ் கடந்த 10 நாள்களுக்கும் மேலாக சேவையில் ஈடுபடுவதில்லை. இதனால் முக்கொம்பன் அக்கராயன் ஆகிய இடங்களிலுள்ள பாடசாலைகளுக்கு வரும் ஆசிரியர்கள் கடுமையான சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

மேலும் முக்கொம்பனில் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்கள் பூநகரி 10 ஆம் கட்டையில் இருந்து நடந்து செல்கின்றனர்.

வீதி வேலையைப் பொறுப்பெடுத்த ஒப்பந்தகாரர்களும் ஒப்பந்தத்தை வழங்கிய அதிகாரிகளும் பொறுப்பற்ற முறையில் நடந்து கொள்வதாக இந்தப் பகுதி மக்கள் கடும் விசனம் வெளியிட்டுள்ளனர். (க-18)

# கரைச்சிப் பிரதேச செயலரின் ஏற்பாட்டில் காணி தொடர்பான நடமாடும் சேவைகள்

## இன்று தொடக்கம் டிசெம்பர் 24 வரை

கிளிநொச்சி, ஒக்.3

கிளிநொச்சியில் காணி தொடர்பான பதிவுகளை மேற் கொள்ளல் மற்றும் காணிப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணுதல் என்பனவற்றுக்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

கிளிநொச்சி மாவட்டம் கரைச்சிப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் கிராம அலுவலர் பிரிவுகள் தோறும் காணி தொடர்பான பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கும், காணிப் பதிவுகளை மேற்கொள்வதற்குமான நடமாடும் சேவைகள் இடம்பெறுவதற்கான ஏற்பாடுகளை பிரதேச செயலர் கோ.நாகேஸ்வரன் மேற்கொண்டுள்ளார்.

காணிப் பதிவுகள் வியாழக்கிழமை தொடக்கம் எதிர்வரும் டிசெம்பர் மாதம் 24 ஆம் திகதி வரை பிரதேச செயலக காணிப் பிரிவு உத்தியோகத்தர்களால் கிராம அலுவலர் பிரிவுகளில் நடத்தப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இதன் பிரகாரம் இன்று உதயநகர் மேற்கிலும் எதிர்வரும் 9 ஆம் திகதி செல்வா நகரிலும், 15 ஆம் திகதி திருவையாறு மேற்கிலும், 24 ஆம் திகதி தொண்டமான் நகரிலும், 29 ஆம் திகதி அம்பாள் கிராமத்திலும் இடம்பெறும்.

மேலும் நவம்பர் 5 ஆம் திகதி ஆனைவிழுந்தான் குளம், 14 ஆம் திகதி சிவநகர், 19 ஆம் திகதி கனகாம்பிகைக்குளம், 26 ஆம் திகதி கிளிநொச்சி நகரம், டிசெம்பர் 3 கிருஷ்ணபுரம், டிசெம்பர் 10 மாயவனூர், டிசெம்பர் 12 வட்டக்கச்சி, டிசெம்பர் 24 புதுமுறிப்பு என்ற அடிப்படையில் பதிவுகள் இடம்பெறவுள்ளன.

காணிப் பதிவுகளை மேற்கொள்வதற்குமான நடமாடும் சேவைகள் இடம்பெறுவதற்கான ஏற்பாடுகளை பிரதேச செயலர் கோ.நாகேஸ்வரன் மேற்கொண்டுள்ளார்.

அந்தந்தக் கிராம அலுவலர் பிரிவுகளில் காணிப் பிரிவினரால் நடத்தப்படும் நடமாடும் சேவையில் காணிகள் தொடர்பான பிணக்குகள் மற்றும் பதிவுகள் போன்றவற்றை மேற்கொள்ளுமாறும் பிரதேச செயலர் அறிவித்துள்ளார். (க-9)



சாவகச்சேரி நகரசபையின் மீசாலை பொதுநூலகத்தின் தேசிய வாசிப்பு மாதத்தையொட்டி நேற்று செவ்வாய்க்கிழமை நூலக வளாகத்தில் சிரமதானம் இடம்பெற்றது. சிரமதானத்தில் நகரசபை தலைவர், செயலாளர், உறுப்பினர், உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். (ஒ-9)

## முதலாம் ஆண்டு நீங்காத நினைவுகளாக

03.10.2013

**அமரர் தேசகீர்த்தி சின்னத்துரை**
**பொன்னம்பல வன்னிய**
**மாப்பாண கதிர்காம முதலியார் (ச.நீ)**



விவசாயிகளின் தந்தை
விவசாயிகளின் தோழன்
விவசாய மன்னன்
போன்ற பட்டங்களையும் - விருதுகளையும் பெற்று விவசாயிகளின் வளர்ச்சி அபிவிருத்திக்காக தன்னை அர்ப்பணித்து சேவையாற்றி கடந்த 14.10.2012 இல் அமரத்துவம் அடைந்த முதலியார் ஐயா அவர்களின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றேன்.

மகன்
ஓ.வ.க.முதலியார்
செந்தூரர் செல்வன் (சுவிஸ்)

e-mail- selvanfr@gmail.com

## தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சை - 2013
## முல்லை/விசுவநாதர் ஆரம்பப் பாடசாலை



இடமிருந்துவலம்:- கீழ் வரிசை:-
திருமதி தெ.வீரசிங்கம்(பிரதி அதிபர்), திரு.ப.சற்குணசீலன் (அதிபர்), செல்வி.இ.வீதுர்சியா (192 நிலை: 1), திரு.ப. சுதர்சன்(கற்பித்த ஆசிரியர்)

இடமிருந்து வலம்:- கீழ் வரிசை:-
செல்வி சி. விஸ்வரேக்கா(176 நிலை: 21), செல்வி ஞா. தனுசுஜா(159 நிலை:59), செல்வி அ. தனுசா(185 நிலை: 4), செல்வி. ச. தமிழினி (175 நிலை: 26), செல்வி. க. டிலக்சிகா(185 நிலை: 4), செல்வி. அ. நிதுசா(170 நிலை: 41), செல்வன். சி. ஜீவகன்(180 நிலை: 11), செல்வன். ஜெ. பவிதன்(171 நிலை: 37), செல்வன். வா. நர்த்தனன்(179 நிலை: 18), செல்வன்.ஜெ. விந்துசன் (182 நிலை: 9), செல்வன் சி. கிருசன்(186 நிலை: 2), செல்வன். தே. அனோஜன்(178 நிலை: 15), செல்வன் பி. றெஜினோட் (182 நிலை 9)

இடமிருந்து வலம்:- மேல்வரிசை:-
செல்வி.ஜெ. ரிசாந்தினி(154 நிலை: 111), செல்வி.சி.சிபானஜா(167 நிலை: 54), செல்வி த. ஜெகனிசா (184 நிலை 06), செல்வி வி. ஜசிகா(164 நிலை 59), செல்வி வி. டல்சிகா (176 நிலை 21), செல்வி. க. கரணிகா(164 நிலை 59), செல்வன் த. ஜெராலின் (188 நிலை 02), செல்வன் அ. அனோஜன்(184 நிலை:06), செல்வன் வி. விதுசாந்தன்(172 நிலை:32),செல்வன் ர.லதுசியன்(171 நிலை 37), செல்வன் ர. மருதிசன் (164 நிலை 59), செல்வன் ஆ. அபிநயன் (176 நிலை 21)

இப் பெறுபேற்றினை பெற்றுக்கொள்ள வழிகாட்டிய பாடசாலை அதிபருக்கும் மாணவர்கள் இப் பெறுபேற்றினைப் பெற்றுக்கொள்வதற்கு அயராது உழைத்த எமது பெருமைக்கும் மதிப்புக்கும் உரிய ஆசிரியர் ப. சுதர்சன் அவர்களுக்கும் எமது நன்றிகளையும் பராட்டுக்களையும் தெரிவிப்பதுடன் அவரது பணி தொடர வாழ்த்தி நிற்கும்.

**சின்னக்கண்ணன் கட்டடப்பொருள், உதிரிகள் வாணிபம்**
உரிமையாளர்கள், பணியாளர்கள்,
பரந்தன் சாலை , விசுவமடு

## இலங்கை மீனவர் ஐவர் தூத்துக்குடி சிறையில்

இந்திய எல்லையில் மீன் பிடித்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட் டுள்ள இலங்கை மீனவர்கள் ஐவரும் எதிர்வரும் 11 ஆம் திகதி வரை தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

நீர்க்கொழும்பைச் சேர்ந்த மீனவர் ஐந்து பேர், எல்லை தாண்டி மீன் பிடித்ததாக இந்திய கட லோர காவல் படையினரால் கைது செய்யப்பட்டனர்.

கடந்த செப்ரெம்பர் மாதம் 17ஆம் திகதி தூத்துக்குடி, தரவைக்குளம் கடலோரப் பாது காப்பு குழும பொலிஸா ரிடம் அவர்கள் ஒப்ப டைக்கப்பட்டனர்.

அதன்பின்னதாக கடந்த 18ஆம் திகதி ராமநாதபுரம் சி.ஜே.எம்., நீதிமன்றில் முன்னி லைப்படுத் தப்பட்டனர்.

இதன்போது கடந்த முதலாம் திகதி வரை அனைவரையும், தூத்துக்குடி சிறையில் தடுத்து வைக்கு மாறு நீதிமன்று உத்தரவிட்டது.

இந்நிலையில் நேற்று முன்தினம் ஐந்துபேரும் மீண்டும் இராமநாத புரம் நீதிமன்றில் முன் னிலைப்படுத்தப்பட்டனர்.

இதன்போது ஐவரையும் எதிர் வரும் 11ஆம் திகதி வரை சிறையில் தடுத்து வைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டார்.

(வ)

**VACANCY**
**FIELD STAFF**

**Northern Academic and Leadership Training Center (NALTC)**
நிறுவனத்திற்க Field Staff (ஆண்கள் தேவை)
சாவகச்சேரி, பருத்தித்துறை,
மானிப்பாய்,யாழ்ப்பாணம்.
தகைமை: A/L
தொடர்புகளுக்கு: 116, ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி.நேரில் சமுகம்தரவும்.
04.10.2013 - 10.00 மணிமுதல் - 12.00 மணிவரை

## கண்ணீர் அஞ்சலி

கடந்த 30.09.2013 அன்று காலமான
எமது வித்தியாலய மாணவி

**யோகேந்திரன் நதீஷா**


அவர்களின் பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் ஆத்மா சாந்தியடையவும் பிரார்த்திக்கின்றோம்.

கச்சாய் வீதி,
சாவகச்சேரி. (C/2755) (7.6)

பாடசாலைச் சமூகம்
யா/சக்தி அம்மன் த.க பாடசாலை

## மரண அறிவித்தல்

### இளையதம்பி ஐயாத்துரை



லோட்டஸ் வீதி, வண்ணார் பண்ணையை பிறப்பிடமாகவும் ஜேர்மனியை வசிப்பிடமாகவும் கொண்ட இளையதம்பி ஐயாத்துரை நேற்றுமுன்தினம் 01.10. 2013 செவ்வாய்க்கிழமை ஜேர்மனியில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இளையதம்பி- விசாலட்சி தம்பதியரின் அன்பு மகனும் சரஸ்வதியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான தளையசிங்கம், கௌரியம்மா, சற்குணவதி ஆகியோரின் அன்புச் சகோதரரும் கலாநிதி (ஜேர்மனி), சிறீதரன் (சுவிஸ்), தபோநிதி, தயாநிதி, சுதாநிதி (ஜேர்மனி), ரூபகி, மேனகா (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும் சரவண பவன், நந்தினி, வசந்தகுமார், புவிராஜ், கங்காதரன், மதிலூப், துசியந் தன் ஆகியோரின் அன்பு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் ஜேர்மனியில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும். (32254-23-14)

தகவல்
குடும்பத்தினர் (ஜேர்மனி)
004921735994645

**காணி விற்பனைக்கு**

பிறவுண் வீதியில் அமைந்துள்ள ஒரு பரப்பு 7 குழி காணி விசன் கெயர் (Vision Care) முன்பக்க ஒழுங்கையில் விற்பனைக்குண்டு.
0718475019
0213210427

**விற்பனைக்கு**

பருத்தித்துறை நகருக்கு அண்மையில் இயங்கிக் கொண்டிருக்கும் மிசின் கல் அரியும் உபகரணங்கள் விற்பனைக்குண்டு.
0774366704

## உள்ளத்தை உறைய வைத்தெம் உறவுகள் பறந்த பதின்மூன்றாமாண்டு நினைவலைகள்

அமரர்
**கணபதிப்பிள்ளை யோகலிங்கம்**
ஜனனம்:05-11-1948

திதி: சதுர்த்தசி





*அன்புத் தெய்வங்களே*
*அநியாய போர்ச் சூழலில்*
*ஷெல் எனும் அரக்கனின்*
*சீற்றத்தால் எமைப் பிரித்தீர்*
*ஆண்டுகள் பதின்மூன்று ஆனாலும்*
*உம் நினைவு எம்மனதை*
*என்றும் விட்டகலாது...*

**அஸ்தமனம்:26.09.2000**

செல்வி
**யோகலிங்கம் தமிழரசி**
ஜனனம்:23-05-1975

குடும்பத்தினர்
சந்தை வீதி, கொடிகாமம்.

## மரண அறிவித்தல்

### சவிரிமுத்து சிறில்



யாழ். ஆஸ்பத்திரி வீதியைப்பிறப்பிடமாக கொண்ட சவிரிமுத்து சிறில் நேற்று (02.10.2013) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சவிரிமுத்து-மரியம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான ஞானமுத்து - மாகிரட் தம்பதியரின் அன்பு மருமகனும், றீற்றம்மாவின் அன்புக் கணவரும், நிரு சன், யாழினி ஆகியோரின் அன்புத் தந்தையும், அம்மோன் தேக்ஷா, லிபோஷன், ஆகியோரின் பேரனும், சசிதரன், சுசி ஆகியோரின் மாமனும், அன்ரன் , ஞானேந்திரன், காலஞ்சென்ற நெல்சன், றூபி, றஞ்சன், றூபன் சுதா(கனடா) ஆகியோரின் சகோதரனும், காலஞ்சென்ற நாகேஸ்வரி மற் றும் புகனேஸ்வரி, பரமேஸ்வரி, ஈஸ்வரி, சேவியர், காலஞ்சென்ற உதய குமார் அகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று(03.10.2013) வியாழக்கிழமை பி.ப. 2.30 மணியளவில் யாழ்.புனித அடைக்கலநாயகி ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலை யில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

211, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

தகவல்: ச.ஞானேந்திரன்(சகோதரர்), நிருசன் (மகன்)

## மரண அறிவித்தல்

### கணபதி சுப்பிரமணியம்



கோப்பாய் மத்தி நீமாட்டித்தோட்டம் கோப்பாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கணபதி சுப்பிரமணியம் நேற்று(02.10.2013) புதன்கிழமை காலமானார்.

அன்னார் இராமமாவின் அன்புக் கணவரும், கனகலிங்கம் இந்திராதேவி(கனடா), புவிராசசிங்கம்(இந்தியா), நிர்மலா தேவன் (கிளி- கொழும்பு), கமல குமாரி, சுசிலாதேவி(கனடா), சந்திராதேவி(ஜேர்மன்), நிர்மலா தேவி(கனடா) ஆகியோரின் தந்தையும், சுப்பிரமணியம், குணரட்ணம், ரவீந்திரன், சிவபால கிருஷ்ணன், கமலாதேவி, ஜெயலட்சுமி, சாந்தி ஆகியோரின் மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(03.10.2013) வியாழக்கிழமை பி.ப. ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோப்பாய் கந்தன் காடு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லபபடும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

நீமாட்டித் தோட்டம், கோப்பாய் மத்தி.

தகவல்:
கனகலிங்கம்(மகன்)

## குரக்கன் ஒட்டுக்கு சந்தையில் கிராக்கி

சுழிபுரம், ஒக்.3
குரக்கன் ஒட்டுக்கு சுழிபுரம் சத்தியக்காட்டு சந்தையில் பெரும் கிராக்கி நிலவுகிறது. சந்தைக்கு விற்பனைக்காகக் கொண்டுவரும் கமக்காரர் களது குரக்கன் ஒட்டுகளை வட்டுக்கோட்டையில் இருந்து வந்து காத்திருந்து வாங்கிச் செல்கின்றனர். கால்நடைகளுக்குப் பச்சை உணவாக குரக்கன் ஒட்டுக்கள் பயன்படுத்தப்படுகின்றது. இதனால் வட்டுக்கோட்டை, மூளாய் கிராமங்களைச் சேர்ந்த கால்நடை வளர்ப்பாளர்கள் சுழிபுரத்துக்கு வந்து கொள்வனவு செய்கின்றனர். (ஒ-28)

## தென்னங் கன்றுகள் வழங்குவதற்கு விவரம் திரட்டல்

தென்மராட்சி, ஒக். 3
சாவகச்சேரி தென்னைப் பயிர்ச் செய்கையாளர் சங்க எல்லைப் பரப்பில் உள்ள பகுதியில் தென்னை மீள் நடுகைத் திட்டத்தின் கீழ் தென்னங்கன்றுகள் வழங்கப்படவுள்ளன. இதற்கான விண்ணப்பங்கள் சங்கத்தினால் கோரப்பட்டுள்ளன.
சங்க எல்லைப் பரப்பில் 2 ஏக்கருக்குக் குறைந்த பரப்பளவில் தென்னங்கன்றுகள் பயிரிட விரும்புவோர் தொடர்பு கொண்டு பெயர்களைப் பதிவு செய்யுமாறு சங்கத்தினர் அறிவித்துள்ளனர்.
சங்க எல்லைப் பரப்பில் 15 கிராம அலுவலர் பிரிவுகள் உள்ளமை குறிப்பிடத்தக்கது. இதேவேளை வீட்டுத் தோட்டமாக தென்னை பயிரிடவுள்ள நான்குக்கு உட்பட்ட பரப்பளவைக் கொண்ட காணி உரிமையாளர்களுக்கு தென்னம்பிள்ளைகள் வழங்கப்படவுள்ளதாகவும், தென்னம் பிள்ளைகள் தேவைப்படுவோர் சங்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது. (வ-9)

## தரம் 5 பரீட்சையில் சித்தியடைந்தோர் விவரம் திரட்டல்

தென்மராட்சி, ஒக். 3
சாவகச்சேரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினர் இந்த வருட ஐந்தாம் தரப் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற சங்கப் பணியாளர்கள், அங்கத்தவர்கள் ஆகியோரின் பிள்ளைகளை கௌரவிக்கத் தீர்மானித்துள்ளனர்.
பரீட்சையில் சித்தி பெற்ற மாணவர்களின் பெயர் விவரங்களை தங்களது சங்கக் கிளைகளில் அல்லது சங்கத்தின் தலைமை அலுவலகத்தில் ஒப்படைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.
சங்கத்தால் வருடாவருடம் ஐந்தாம் தரப் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி பெறும் மாணவர்கள் கௌரவிக்கப்படுவது வழக்கமாகும். (வ-9)



கிழக்கு அரியாலைக்குச் செல்லும் வீதி நாவலடிக்கு அப்பால் மிகவும் சேதமடைந்து போக்குவரத்துச் செய்ய முடியாத அளவுக்கு குன்றும் குழியுமாகக் காணப்படுகிறது. இந்தப் பகுதியில் குடியேறியுள்ள மக்களும் பெரும்போக நெற்செய்கையை மேற்கொள்ளும் விவசாயிகளும் பயன்படுத்தும் இவ்வீதியின் சீரின்மையால்தான் பல சிரமங்களை எதிர்கொள்வதாக அந்தப் பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர். (வ-135)

## அமைதிக்குப் பங்கம் ஏற்படுத்தும் நெசவு நிலையத்தில் பிரார்த்தனை

**பொதுமக்கள் முறைப்பாடு**

அச்சுவேலி, ஒக்.3
அச்சுவேலி மேற்கில் இராச வீதியில் அமைந்துள்ள அரச நெசவு நிலைய கட்டடத்தில் சமய வழிபாடு நடத்துவது குறித்தும் அங்கு பிரார்த்தனை நடைபெறும் நேரங்களில் எழுப்பப்படும் ஒலியால் அமைதிக்கு பங்கமும் தமது இயல்பு வாழ்க்கைக்கு இடையூறும் ஏற்படுவது தொடர்பாகவும் பொதுமக்கள் முறையீடு செய்துள்ளனர்.
அரச நெசவு நிலையத்தை உரிய நோக்கத்துக்கு பயன்படுத்தாமல் சமயப் பிரசார நடவடிக்கைக்கு பயன்படுத்துவதும் அங்கு பிரார்த்தனை செய்யும் வேளையில் அமைதிக்கு பங்கம் ஏற்படும் வகையில் செயற்படுவதாதாகவும் இதனால் சுற்றாடலில் வாழும் குடும்பங்களின் இயல்பு வாழ்க்கைக்கு இடையூறு ஏற்படுவதாகவும் இது தொடர்பாக இளைஞர்களுக்கிடையே முரண்பாடு ஏற்படுவதாகவும் கணிசமானோர் கையொப்பமிட்டு முறையீடு செய்துள்ளனர்.
முறையீட்டின் பிரதிகள் பிரதேச செயலருக்கும் மாவட்ட கைத்தொழில் துறை பணிப்பாளருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.
மாவட்ட கைத்தொழில் திணைக்களத்துக்குச் சொந்தமான இந்தக் கட் டடத்தில் கைத்தறி நெசவு சாலை செயற்பட்டு வந்தது. 40 நெசவுதறிகள் வரை செயற்பட்டன. அவற்றில் 50 இற்கு மேற்பட்ட யுவதிகள் பணிபுரிந்தனர்.
கடந்தகால போர் சூழ்நிலையில் இயல்பு நிலையில் நெசவுத் தறிகளை இயக்க முடியாத நிலை ஏற்பட்டதோடு நெசவு இயந்திர சாதனங்களும் சேதமடைந்தன. மீண்டும் நெசவு சாலை செயற்படும், எனவும் அதன் மூலம் பல யுவதிகளுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும் என பொதுமக்கள் எதிர்பார்த்துக் கொண்டிருந்த வேளையில் குறித்த சமயப் பிரிவின் பிரார்த்தனை மண்டபமாக இது செயற்படத் தொடங்கியுள்ளது.
இந்த வகையில் தமக்கு பல்வேறு வகையிலும் இடையூறுகள் ஏற்பட்டு வருவதாக அயலில் வசிப்போர் விசனம் தெரிவிக்கின்றனர். (வ-11)

கூட்டுறவாளர் தினத்தையொட்டி

## புதிதாக இணைந்த 509 அங்கத்தவர்கள்

யாழ்ப்பாணம், ஒக்.3
சர்வதேச கூட்டுறவாளர் தினத்தை முன்னிட்டு ஊர்காவற்றுறை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் புதிதாக 509 அங்கத்தவர்களை இணைத்துள்ளது.
கூட்டுறவாளர் தினத்தை முன்னிட்டு சங்கங்கள் புதிதாக அங்கத்தவர்களை இணைத்துக் கொள்வதற்கான வேலைத் திட்டம் ஒன்றை மேற் கொள்ளப்பட வேண்டும் என்று கூட்டுறவு திணைக்களம் கேட்டிருந்தது. இதன் அடிப்படையில் ஊர்காவற்றுறை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் அதிகமான உறுப்பினர்களை புதிதாக இணைத்துள்ளது.
ஏனைய சங்கங்கள் புதிதாக அங்கத்தவர்களை இணைப்பதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளாது அசமந்த நிலையில் உள்ளன.

**கூட்டுறவுத் துறையை அபிவி ருத்தி செய்யவும் அதன் செயற்பாடுகளை அதிகரிப்பதற்கும் புதிதாக அங்கத்தவர்களை இணைப்பதற்கும் சங்கங்கள் துரித நடவடிக்கை எடுக்க வேண்டும்**

கூட்டுறவுத் துறையை அபிவிருத்தி செய்யவும் அதன் செயற்பாடுகளை அதிகரிப்பதற்கும் புதிதாக அங்கத்தவர்களை இணைப்பதற்கும் சங்கங்கள் துரித நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் கூட்டுறவாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (வ-17)

## வாழ்வாதார அபிவிருத்திக்கு மானிய உதவி வழங்கல்



நயினாதீவு கடற்றொழிலாளர் குடும்பங்களைச் சேர்ந்த குடும்பத்தலைவிகள் ஐந்து பேருக்கு வாழ்வாதார அபிவிருத்திக்கென மானிய உதவியாக வழங்கப்பட்டது.

யாழ்ப்பாணம், ஒக்.3
சிறுவர் அபிவிருத்தி மகளிர் அபிவிருத்தி அமைச்சும் பெண்கள் பணியகமும் இணைந்து நயினாதீவு கடற்றொழிலாளர் குடும்பங்களைச் சேர்ந்த குடும்பத்தலைவிகள் ஐந்து பேருக்கு வாழ்வாதார அபிவிருத்திக்கென மானிய உதவியாக ரூபா 22,500 பெறுமதியான மீன்பிடி உபகரணங்களையும் சுகாதார முறையி லான கருவாடு பதனிடும் தொழி லுக்கான சாதனங்களையும் வழங்கினர்.
வாழ்வாதார உதவிகளை வேலணைப் பிரதேச செயலர் திருமதி மஞ்சுளாதேவி சதீஷன் திட்டமிடல் பணிப்பாளர் திருமதி மீரா திசைநாயகம் ஆகியோர் வழங்கினர். (வ-7)

## நுளம்புக் கட்டுப்பாட்டு வார நிகழ்வுகள் சண்டிலிப்பாயில்

வலி.தென்மேற்கு. ஒக். 3
அரசால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள நுளம்புக் கட்டுப்பாட்டு வாரத்தை முன்னிட்டு சண்டிலிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவு ஏழு வலயங்களாகப் பிரிக்கப்பட்டு நுளம்புக் கட்டுப்பாடு தொடர்பான வேலைத் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படவுள்ளன.
இதற்கான சகல ஒழுங்குகளையும் சண்டிலிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி மேற்கொண்டுள்ளார். எதிர்வரும் 7 ஆம் திகதியிலிருந்து ஆரம்பமாகவுள்ள இந்த வேலைத் திட்டம் 13 ஆம் திகதி வரை தொடர்ந்து இடம்பெறவுள்ளது.
இந்த வேலைத் திட்டத்தில் சுகாதார உத்தியோகத்தர்கள், சுகாதாரத் தொண்டர்கள், பொலிஸார் உட்படப் பலர் கலந்து கொள்ளவுள்ளனர்.
திகதி வாரியாக மேற்கொள்ளப்படவுள்ள வேலைத் திட்டங்கள் பற்றிய விவரம் பின்வருமாறு:-
சுதுமலையிலிருந்து 7 ஆம் திகதி ஆரம்பமாகும் இந்த வேலைத் திட்டம் 13 ஆம் திகதி வரை முறையே ஆனைக்கோட்டை, நவாலி, மானிப்பாய், சண்டிலிப்பாய், பண்டத் தரிப்பு, இளவாலை ஆகிய ஏழு இடங் களிலும் முன்னெடுக்கப்படும். (வ-115)



வேலணை மணிமாறன் வீதி புனரமைப்புப் பணிகளை வேலணை பிரதேச சபைத் தலைவர் எஸ்.சிவராஜா பார்வையிடுகின்றார். (வ-7)

## குப்பைகள் நிறைந்த நிலையில் மானிப்பாய் பட்டின வீதிகள்

வலி.தென்மேற்கு. ஒக்.3
வலி.தென்மேற்குப் பிரதேசத்தில் மானிப்பாய் பட்டினத்திலுள்ள பிரதான வீதி உட்பட சகல வீதிகளும் குப்பை கூளமாகக் காட்சியளிக்கின்றன.
நுளம்புக் கட்டுப்பாட்டு வாரம் அனுஷ்டிக்கப்படவுள்ள இந்த வேளையில் சுகாதாரத்துக்கு பங்கம் ஏற்படும் வகையில் வீதிகளின் இரு மருங்கிலும் குப்பைகள் செறிந்து கிடப்பது குறித்து விசனம் தெரிவித்துள்ள அந்தப் பகுதி மக்கள் அவை அகற்றப்பட்டாமை குறித்து குற்றஞ் சுமத்தியுள்ளனர்.
வலி.தென்மேற்குப் பிரதேசத்தில் மானிப்பாய் பட்டினம் முக்கிய நகரமாகப் பலராலும் கணிக்கப்படுகிறது. இந்தப் பட்டினப் பிரதேசத்தில் பிரபல்யமான பாடசாலைகள், தேவாலயங்கள், ஆலயங்கள், பொதுச்சந்தை, வங்கிகள், வர்த்தக நிலையங்கள், வைத்தியசாலைகள் என்பன அமைந்துள்ளன. அத்துடன் மக்கள் நடமாட்டமும் போக்குவரத்தும் மிகுந்த பகுதி இது.
இந்த நிலையில் வீதிகள் துப்புரவு செய்யப்படாமல் குப்பை கூளங்களாகக் காட்சியளிப்பது வரியிறுப்பாளர்களுக்கு சிரமத்தை ஏற்படுத்தியுள்ளது. இந்தக் குறைபாடு குறித்து வலி.தென்மேற்கு பிரதேச .சபை தவிசாளரிடம் வினவியபோது கழிவகற்றும் வேலைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டியிருப்பதே இந்த நிலைக்கு காரணமென்று தெரிவித்துள்ளார். (வ-115)

# பா.ஜ.கவினர் ஒருபோதும் தரம் தாழ்த்தி விமர்சிக்கார்

## கட்சித் தலைவர் ராஜ்நாத்சிங் கருத்து

புதுடில்லி, ஒக்.3
இந்தியப் பிரதமரை பாரதிய ஜனதா கட்சியினர் ஒருபோதும் தரம் தாழ்த்தி விமர்சிக்க வில்லை என்று அந்தக்கட்சி யின் தலைவர் ராஜ்நாத்சிங் தெரிவித்துள்ளார்.
கொல்கத்தாவில் செய்தியாளர் களிடம் பேசிய அவர்,
"காங்கிரசின் துணைத் தலை வரான ராகுல் காந்திதான் பிரதமரை விமர்சனம் செய்து உள்ளார். பாரதிய ஜனதா கட்சியினர் ஒருபோதும் தரம் தாழ்த்தி விமர்சிக்கவில்லை" என்று தெரிவித்துள்ளார்.
நேற்றுமுன்தினம் கர்நாடக மாநிலம் மாண்டியாவில் நடை பெற்ற காங்கிரஸ் பொதுக் கூட்டத்தில் உரையாற்றிய அந்த கட்சியின் தலைவர் சோனியாகாந்தி, "பிரதமரை அரசியல் கட்சிகளின் தலைவர் கள் தரம் தாழ்த்தி விமர்சனம் செய்யக்கூடாது" என்று தெரி வித்திருந்தார்.
அதற்குப் பதிலளிக்கும் வகை யிலேயே ராஜ்நாத்சிங் இவ் வாறு கருத்துத் தெரிவித்துள் ளார். (ற)

# பதவி விலக மாட்டேன்

## இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் திட்டவட்டம்



புதுடில்லி, ஒக்.3
பிரதமர் பதவியில் இருந்து விலகுவது குறித்த பேச்சுக்கே இடமில்லை என்று திட்டவட்ட மாகத் தெரிவித்துள்ளார் இந்தி யப் பிரதமர் மன்மோகன்சிங்.
அமெரிக்க சுற்றுப் பயணத்தை முடித்து நாடு திரும்பிய மன் மோகன் சிங், விமான நிலை யத்தில் செய்தியாளர்களைச் சந்தித்துப் பேசியபோதே இவ் வாறு தெரிவித்துள்ளார்.
இதுகுறித்து அவர் மேலும் கூறுகையில், "பிரதமர் பதவியிலி ருந்து விலகுவது என்ற கேள்விக்கே இடமி ல்லை. குற்ற வழக் குகளில், தண் டனை பெறும் நாடாளுமன்ற உறுப்பினர் களைக் காப்பாற்றும் வகை யில் அவசர சட்டத்தை நடை முறைப்படுத்த மத்திய அரசு முற்பட்டது. ஆனால் அந்த அவசர சட்டத்திற்கு காங்கிரஸ் துணைத் தலைவர் ராகுல் எதிர்ப்புத் தெரிவித் துள்ளார். அந்த விடயத்தில் மத்திய அரசின் செயல் சரியா னதல்ல என்றும் கூறியுள்ளார். எந்த விடயத்திலும் நான் எளிதில் அதிருப்தி அடைய மாட்டேன்.
அதனால் அவசரசட்டத்தை ராகுல் விமர்சித்ததற்காக நான் பிரதமர் பதவியிலிருந்து வில குவது என்ற கேள்விக்கே இட மில்லை. அவசர சட்டத்திற்கு ராகுல் எதிர்ப்புத் தெரிவித்த தற்கு காரணம் என்ன என் பது கேட்டறியப்படும். அவசர சட்டம் தொடர்பாக அவருடன் பேசுவேன். ஒருவரின் மனதை மாற்றுவது என்பது எப் போதும் முடியாத காரியம் அல்ல. எனது அமைச்சரவையு டனும் இந்தப் பிரச்சினை குறித்து விவாதிப்பேன்" என்று தெரிவித்துள்ளார் மன் மோகன் சிங். (ற)


பாராட்டி வாழ்த்துகின்றோம்

யா/நீர்வேலி றோ.க.த.க. பாடசாலையில்
2013 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களை பாராட்டி வாழ்த்துவதுடன் அவர்களின் எதிர்கால கல்வி நடவடிக்கைகளும் மேன்மையுற எல்லாம் வல்ல இறைவனை வேண்டி நிற்கிறோம்.



செல்வன் குலசிங்கம் பிரவீன்
161 புள்ளி



செல்வி ஜிதுசாயினி சிவரூபன்
158 புள்ளி

100 புள்ளிகளுக்கு மேல் பெற்றோர்

| | | | |
|---|---|---|---|
| ஸ்ரீ.டேனுஜா | 152 | ச.கலைப்பிரியா | 145 |
| ஆ.ஜனனி | 136 | ஞா. பதுஷா | 128 |
| சி.தேனுஜா | 111 | ப.கவியரசி | 110 |
| ஜெ.கானுஜா | 105 | செ.செலஸ்ரினா | 101 |

மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு உறுதுணையாக நின்ற அதிபர், ஆசிரியர்களையும் மனமாரப் பாராட்டுகின்றோம்.
வாழ்த்துவோர்:
பாடசாலை அபிவிருத்தி சங்கம், பழைய மாணவர் சங்கம்:
நீர்வேலி றோ.க.த.க. பாடசாலை, நீர்வேலி.
(C/12539)(45.6.)


# இலங்கைக்குப் போர்க் கப்பல்கள் வழங்குவது குறித்து மத்திய அரசு விளக்கமளிக்க வேண்டும்

## உயர்நீதிமன்றம் உத்தரவு

சென்னை, ஒக்.3
இலங்கை அரசுக்குப் போர்க் கப்பல்கள் வழங்குவது தொடர் பாக இந்திய மத்திய அரசு விளக்கமளிக்க வேண்டும் என்று உத்தரவிட்டுள்ளது இந் திய உயர்நீதிமன்றம்.
இலங்கைக்கு போர்க்கப்பல் கள் வழங்குவதைத் தடை செய்ய வேண்டும் என்று கோரி இந்திய உயர்நீதிமன் றத்தில் தாக்கல் செய்யப்பட் டுள்ள மனு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. அதன்போதே உயர் நீதிமன்றம் இவ்வாறு உத்தரவிட்டுள்ளது.
மனுதாரர் சார்பில் முன்னிலை யாகியிருந்த சட்டத்தரணி, "தமிழகமீனவர்கள்தொடர்ந்து இலங்கைக் கடற்படையின ரால் தாக்கப்பட்டு சிறைபிடிக் கப்படுகின்றனர். இலங்கை யில் தமிழர்கள் கொல்லப்பட்ட சம்பவத்தால் அந்நாட்டுக்கு எதிராக தமிழகத்தில் தொடர்ந்து போராட்டங்கள் நடந்து வரு கின்றன. இலங்கையை நட்பு நாடாகக் கருதக்கூடாது. பொது நலவாய மாநாட்டில் இந்தியா கலந்துகொள்ளக் கூடாது என தமிழக அரசே சட்டசபையில் தீர்மானம் நிறைவேற்றியுள் ளது. இந்தநிலையில் இரண்டு போர்க் கப்பல்களை இலங் கைக்கு அளிக்க இந்தியா முடிவு செய்துள்ளது. மத்திய அரசின் இந்த முடிவுக்கு ஒட்டுமொத்த தமிழர்களும் எதிர்ப்புத் தெரிவிக்கின்றனர். எனவே இலங்கைக்கு கப்பல்கள் வழங்குவதை தடுத்து நிறுத்த வேண்டும்" என்று வாதிட்டார்.
விசாரணைகளின் முடிவில் "இலங்கைக்கு போர்க் கப்பல் வழங்கப்படுவது தொடர்பாக மத்திய அரசிடம் விளக்கம் கேட்டு உயர்நீதிமன்றுக்கு விவ ரம் தெரிவிக்க வேண்டும். தமிழக மீனவர்கள் பாதுகாப்பு தொடர்பாக உயர் நீதின்று ஏற் கனவே பிறப்பித்த உத்தரவு நகலையும் தாக்கல் செய்ய வேண்டும்" என்று நீதிபதிகள் உத்தரவிட்டதுடன், வழக்கு எதிர்வரும் 8ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டது. (ற)


Save the Children

வெற்றிட அறிவித்தல்

| | |
|---|---|
| பதவி | நிகழ்ச்சித் திட்ட அலுவலர் - USAID |
| இடம் | யாழ்ப்பாணம் |
| ஊதியம் | மாதாந்த மொத்த சம்பளம் ரூபா 33,326/- |
| ஒப்பந்த காலம் | ஒரு வருடம் |
| Reference # | Ref # 2013/N-J/36 |

நிகழ்ச்சி உருவாக்கம் மற்றும் அமுலாக்கல் பிரிவின் ஓர் அங்கத்தவராக நிகழ்ச்சித் திட்ட அலுவலர், யாழ்ப்பாண மாவட்டத்தித்தின் USAIDஇன் சிறுவர் பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு நிகழ்ச்சித்திட்டத்திற்கு பொறுப்புள்ளவராவார். இத்திட்ட அமுலாக்கமானது அரச மற்றும் சமூகம் சார்ந்த நிறுவனங்களுடனும் ஒன்றிணைந்து செயற்படுத்தப்படும். மேலும் சேவ் த சில்ரன் உத்தியோகத்தர்கள், அரச திணைக்கள அதிகாரிகள் மற்றும் ஏனைய பங்குதாரரின் ஆற்றல் விருத்தி பயிற்சிகளை ஒழுங்கு செய்யவும், உறவுகளை வலுப்படுத்தவும் திட்ட அலுவலர் இந்நிகழ்ச்சித்திட்ட இணைப்பாளருக்கு உதவ வேண்டும்.

இப்பதவிக்கு இத்திறனில் குறிப்பிடத்தக்க அனுபவம் தேவைப்படுகிறது. மேலும் விவரங்களுக்கு இணைக்கப்பட்ட வேலை சுயவிவரத்தைப் பார்க்கவும். இப்பதவிக்கான தகுதிகளுடைய விண்ணப்பதாரிகள் மட்டுமே விண்ணப்பம் செய்ய முடியும். தெரிவுசெய்யப்படுபவர்கள் மட்டுமே நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவார்கள். தொலைபேசி தொடர்புகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

| | |
|---|---|
| விண்ணப்ப முடிவு திகதி | 06th October 2013 |

இலங்கை குடியுரிமையுள்ளவர்கள் மட்டுமே விண்ணப்பிக்க முடியும்

- வயதெல்லை 60 ஆண்டுகள்
- எந்நேரத்திலும் தேவையடிப்படையில் சேவ் த சில்ரன் ஊழியர்கள் இடமாற்றம் செய்யப்படலாம்.
- நாட்டின் எப்பகுதிக்கும் பயணிப்பதற்கான விருப்பமும் இயலுமையும்.
- சேவ் த சில்ரன் நிறுவனமானது ஊழியர் தெரிவின் போது பால், இன, சாதி, மதம், மொழி அடிப்படையில் பாகுபாடு காட்டுவதில்லை.
- விண்ணப்பிக்கும்போது விண்ணப்பப் படிவத்தின் மேலே அல்லது மின்னஞ்சலில் **Ref # 2013/N-J/36** குறிப்பிட்டு அனுப்பவும்.
- இரண்டு உறவுமுறையல்லாத நடுவர்களின் பெயர், தொடர்புகொள்ளவேண்டிய விவரங்களைத் தரவும்.
- சிறந்த விண்ணப்பத்தாரர் ஒரு வலுவான அர்ப்பணிப்பு உள்ளவராகவும் சிறுவர் பாதுகாப்பு பற்றி தெளிந்த அறிவுள்ளவராகவும் இருத்தல் வேண்டும்.
- இப்பதவியின் தேவைகளுக்கு எப்படி உமது முந்தைய தொழில் அனுபவங்கள் முழுமையாக உதவும் என்பதை 300 சொற்களில் எழுதி உங்கள் விண்ணப்பப் படிவத்துடன் இணைத்து பின்வரும் முகவரிக்கு அனுப்பவும்.

**Save the Children International**
**12, Amarasekara Mawatha, Colombo 5**
**E-mail: slhr@savethechildren.org**
தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பதாரிகள் மட்டுமே நேர்முகத்தேர்வுக்கு அழைக்கப்படுவர்
தொலைபேசி தொடர்புகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

(C/12540)(10.6)

Save the Children International - Sri Lanka country office is part of the world's largest independent movement for children working in 120 countries. Save the Children International is a non-religious, nonpolitical, independent international organization working for the protection and the full realization of child rights. The four thematic areas of the Save the Children International programme are: (a) **Child Protection** (b) **Education** (c) **Nutrition** (d) **Child Rights Governance**. Responding to emergencies also remains a priority. Our projects, both self-implemented and in partnership with local organizations are carried out in over 18 locations throughout the country.

**ALL RIGHTS FOR ALL CHILDREN IN ALL SITUATIONS**


# குற்றவாளிகளைக் காக்கும் நிறுவனமே காங்கிரஸ்

## பாரதிய ஜனதா கட்சி குற்றச்சாட்டு



சென்னை, ஒக்.3
குற்றவாளிகளை காக்கும் நிறுவனமாக காங் கிரஸ் உள்ளதால்தான் நாடாளுமன்ற உறுப்பி னர்களைப் பாதுகாக்கும் அவசர சட்டத்தை அரசு கொண்டுவந்துள்ளது என்று பாரதிய ஜனதா கட்சி குற்றம்சாட்டியுள்ளது.
இது குறித்து புதுடில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அக்கட்சியின் செய்தித் தொடர்பாளர் முக்தர் அப்பாஸ் நக்வி, அவசர சட்டத்தை திரும் பப் பெற வேண்டும் என்று வலியுறுத்தினார்.
"ஒருவேளை அவசர சட் டத்தை அரசு திரும்பப் பெற்றால் நாட்டு மக்களுக்கும், இந்திய அர சியலமைப்புக்கும் கிடைத்த வெற்றியாகத் தான் மகிழ்ச்சியடைய வேண்டும். இதுகுறித்து ராகுல் காந்தி தெரிவித்த கருத்து, காங்கிரஸ் கட்சியின் உள்விவகாரம். காங்கிரசும், அரசும் குற்றவாளி களுக்கு ஆதரவாக செயற்படும் நிறு வனம் " என்று தெரிவித்துள்ளார். (ற)

# பிரணாப் பெல்ஜியம் பயணம்

புதுடில்லி, ஒக்.3
இந்திய ஜனாதிபதி பிரணாப் முகர்ஜி ஆறு நாள் அரசு பய ணமாக பெல்ஜியம், துருக்கி ஆகிய நாடுகளுக்கு நேற்றுப் புறப்பட்டு சென்றார்.
பெல்ஜியம் நாட்டு தலைவர் பிலிப்பியின் அழைப்பை ஏற்று 5 ஆம் திகதி வரை பெல்ஜியத் துக்கும், 5 ஆம் திகதி முதல் 7 ஆம் திகதி வரை துருக்கிக்கும் ஜனாதிபதி பிரணாப் முகர்ஜி பயணம் மேற்கொள்கின்றார்.
அவருடன் மத்திய கப்பல் துறை அமைச்சர் ஜி.கே.வாசன், நாடாளுமன்ற உறுப்பினர் களான பிரியாதத், திபேந்திரா சிங் ஹூடா, ஜாபர் அலி நக்வி, பிரபாகர் கோர், வைஷ்ணவ் சரண் ஆகியோரும் செல்கின்றனர்.
கல்வியை மையப்படுத்தியே ஜனாதிபதியின் இந்த பயணம் அமையும் என்று இந்திய வெளி யுறவுத்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.
பெல்ஜியம் நாட்டுக்கு இந்திய ஜனாதிபதி மேற் கொள்ளும் முதல் பயணம் இது என்பது குறிப் பிடத்தக்கது. (ற)

# 83 நாடுகளின் தீவிரவாதக் குழுக்கள் சிரியாவுக்கு எதிராகக் களத்தில்

## உண்மைநிலையை உலகநாடுகள் புரிந்துகொள்ள வேண்டும்
## சிரிய வெளிவிவகார அமைச்சர் வலியுறுத்து

டமாஸ்கஸ், ஒக்.3
"சிரிய உள்நாட்டுப் போரில் 83 நாடுகளைச் சேர்ந்த தீவிரவாதக் குழுக்கள் ஊடுருவித் தாக்குதல் நடத்தி வருகின்றன. தாக்குதல்களில் ஈடுபடும் தீவிரவாதிகள் மனிதர்களின் இதயங்களை உண்ணும் அளவுக்குக் கொடூரமானவர்கள்" என்று தெரிவித்துள்ளார் சிரிய வெளிவிவகார அமைச்சர் வோலித் அல்-மொயல்லம்.
சிரியாவில் தற்போது உள்நாட்டுப் போர் தீவிரமடைந்துள்ளது. சர்வதேச நாடுகள் போரில் சிரிய அரசு சர்வதேசச் சட்டங்களை மீறிச் செயற்பட்டு வருகின்றது என்று குற்றஞ்சாட்டி வருகின்றன.
அதுகுறித்து ஐ.நா. சபையில் விளக்கமளிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
இதுகுறித்து அவர் தெரிவிக்கையில்,
"சிரியாவில் போரில் ஈடுபடுபவர்களை பொதுமக்கள் என்றோ கிளர்ச்சியாளர்கள் என்றோ வேறுபடுத்த முடியாது. உண்மையில் அல்-குவைதா இயக்கத்துக்கு எதிராகவே போர் நடைபெற்று வருகின்றது. இந்த உண்மையை ஏற்றுக்கொள்ள சில நாடுகள் மறுக்கின்றன. 83 நாடுகளைச் சேர்ந்த தீவிரவாதிகள் குழுக்கள் சிரியாவில் ஊடுருவித் தாக்குதல் நடத்திவருகின்றன. அமெரிக்காவின் சர்வதேச வர்த்தக மையத்தின் மீது நடத்தப்பட்ட தாக்குதல் நிலைமையை விட இது மோசமானது.
அரசுக்கு எதிராக தாக்குதல்களை மேற்கொள்ளும் தீவிரவாதிகள் அரசுக்கு ஆதரவாக இருக்கும் பொதுமக்களை கடத்தி சென்று அவர்களைக் கொலை செய்கின்றனர். அவர்களின் இதயங்களை வெளியே எடுத்து உண்ணும் காணொலிக் காட்சிகளை துணிந்து வெளியிடுகின்றனர். இந்தக் காணொலிக் காட்சி தீவிரவாதிகளால் கடந்த மே மாதம் வெளியிடப்பட்டது. கடத்தப்பட்டவர்களின் உடல் உறுப்புகளை தனித்தனியாகப் பிரித்து எடுத்து கொலை செய்யப்பட்டவர்களின் குடும்பங்களுக்கு அனுப்பி வைத்து மிரட்டுகின்றனர். ஆனால் இவை எதுகுறித்தும் உலகநாடுகள் கண்டுகொள்ளவில்லை, கண்டிக்கவுமில்லை.
சிரியாவின் உண்மைநிலையை உலகநாடுகள் புரிந்துகொள்ள வேண்டும். தற்போது சிரியாவுக்கு எதிராக செய்யப்படும் உதவிகள் எதிர்காலத்தில் தமக்குத் தலையிடியாக மாறும் என்பதை தீவிரவாதிகளுக்கு உதவி வழங்கும் உலகின் முக்கிய பெரிய நாடுகளில் சில உணர்ந்துகொள்ள வேண்டும்" என்று தெரிவித்துள்ளார். (ற)

## மன்மோகனை விமர்சிக்கவே இல்லை- நவாஸ்

இஸ்லாமாபாத், ஒக்.3
இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கை கிராமத்துப் பெண் என்றுதான் விமர்சிக்கவில்லை என்று கூறியுள்ளார் பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் செரிப்.
இதுகுறித்து அவர் கூறுகையில், "இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கைக் கிராமத்து மூதிய பெண் போன்று இருக்கின்றார் என்று நான் விமர்சித்ததாகக் கூறப்படும் தகவல்களில் எந்த உண்மையும் இல்லை. நான் அவ்வாறு எதுவும் விமர்சிக்கவில்லை." என்று தெரிவித்தார்.
இந்தியப் பிரதமருடன் நடைபெற்ற பேச்சுக்கள் குறித்துக் கேட்டபோது, "இந்தியப் பிரதமருடன் காஷ்மீர் பிரச்சினை மற்றும் முக்கிய விடயங்கள் குறித்து ஆராய்ந்தேன். இந்தியாவில் நடைபெறும் பயங்கரவாதத் தாக்குதல்களுக்கு பாகிஸ்தான் ஆதரவளிக்கின்றது என்பதை ஏற்றுக்கொள்ள முடியாது.
பாகிஸ்தானும் தீவிரவாதத் தாக்குதல்களால் பாதிக்கப்படுகின்றது என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும்" என்று தெரிவித்துள்ளார். (ற)

## ஈரானின் நவீன ஆளில்லா விமானம்

தெஹ்ரான், ஒக்.3
போர் ஆயுதங்கள் மற்றும் ஏவுகணையைச் சுமந்தவாறு மணிக்கு ஆயிரத்து 700 கிலோமீற்றர் வேகத்தில் தொடர்ச்சியாக 24 மணித்தியாலங்கள் பறப்பை மேற்கொள்ளவல்ல ஆளில்லா அதிநவீன போர் விமானம் ஒன்றைத் தனது விமானப்படையில் இணைத்துள்ளது ஈரான்.
அமெரிக்காவால் உளவு நடவடிக்கைகளுக்காக அனுப்பப்படும் ஆளில்லா நவீனரக உளவு விமானங்களை ஈரான் சிறைப் பிடித்து ஆச்சரியப்படுத்துவது வழமை.
இந்த நிலையில் இந்தப் புதிய விமானத் தயாரிப்பு உலக நாடுகளை மூக்கில் விரலை வைக்க வைத்துள்ளது. "ஷஹித் -129 எனப் பெயரிடப்பட்டுள்ள இந்தப் போர் விமானம் ஒரே நேரத்தில் சக்திவாய்ந்த 8 வெடிகுண்டுகள் அல்லது ஏவுகணைகளைச் சுமந்தபடி வெகுநீண்ட தூரத்தையும் குறுகிய நேரத்தில் சென்றடையத்தக்கது. அத்தோடு அசையும் மற்றும் அசையா இலக்குகளை துல்லியமாக தாக்கும் ஆற்றல் மிக்கது" எனப் பெருமையுடன் அறிவித்துள்ளது ஈரான் விமானப் படை. (ற)




எதிர்வரும் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் நிறைவேற்றப்படாததை அடுத்து அமெரிக்காவில் அத்தியாவசிய சேவைகள் தவிர்ந்த ஏனைய அரச சேவைகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன. அதற்கான அறிவிப்புகள் ஆங்காங்கே வைக்கப்பட்டுள்ளன. அவ்வாறான அறிவிப்பு ஒன்றைப் பார்வையிடும் பொதுமக்கள்.

## சீனத் தூதரகம் மீது தாக்குதல்

டமாஸ்கஸ், ஒக்.3
சிரியத் தலைநகர் டமாஸ்கஸில் உள்ள சீனத் தூதரகத்தின் மீது ரொக்கெட் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.
தாக்குதலால் அந்த அலுவலகக் கட்டடத்தின் பெரும் பகுதி சேதமடைந்துள்ளதுள்ளதுடன் துப்புரவுப் பணியாளர் ஒருவரும் காயமடைந்துள்ளார்.
அதேவேளை, தலைநகர் டமாஸ்கஸில் ஒரே நாளில் 3 இடங்களில் ரொக்கெட் தாக்குதல் நிகழ்த்தப்பட்டுள்ளது என்று சிரியாவின் செய்தி நிறுவனமான சானா தெரிவித்துள்ளது. கடந்த வாரம் இதே பகுதியில் உள்ள ஈராக் தூதரகம் மீது பிரங்கி குண்டு தாக்குதல் நடத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ற)

## கென்ய வணிக வளாகத்தில் இராணுவமும் கைவரிசை

### பெருந்தொகைப் பொருள்களைக் காணவில்லை: கடை உரிமையாளர்கள் முறைப்பாடு

நைரோபி, ஒக்.3
கடந்தவாரம் கென்யத் தலைநகர் நைரோபியில் தீவிரவாதிகளால் தாக்கப்பட்ட வணிக வளாகத்தில், குறித்த சம்பவத்தின்போது இராணுவத்தினர் திருட்டில் ஈடுபட்டுள்ளனர் என்று அதிர்ச்சித் தகவல் வெளியாகியுள்ளது.
குறித்த வணிக வளாகத்துக்குள் புகுந்த 'அல்-சஹாப்' தீவிரவாத அமைப்பைச் சேர்ந்தவர்கள் கண்மூடித்தனமானத் துப்பாச்சிச் சூடு நடத்தியதுடன் அங்கிருந்தவர்களைப் பணயக் கைதிகளாகவும் பிடித்து வைத்திருந்தனர். நான்கு நாள்களாக நடைபெற்ற போராட்டத்தின் பின்னர் பணயக் கைதிகள் அனைவரும் மீட்கப்பட்டனர் என்று கென்ய அரசு அறிவித்துள்ளது. இந்தச் சம்பவத்தில் 67 பேர் உயிரிழந்தனர்.
வணிக வளாகத்தின் பெரும் பகுதி இடிந்த நிலையில் தற்போது காணப்படுகின்றது.



கடந்த 10 நாள்களாக இராணுவம் மற்றும் பொலிஸாரின் கட்டுப்பாட்டில் இருந்த குறித்த வணிக வளாகத்துக்குள் தற்போது கடை உரிமையாளர்கள் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.
இந்தநிலையில் தமது கடைகளில் பெருந் தொகையான பொருள்கள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன என்று அவர்கள் கூறுகின்றனர்.
சம்பவ தினத்தன்று உயிருக்கு பயந்த கடைகளின் உரிமையாளர்கள் கடைகளை திறந்து போட்டுவிட்டுத் தப்பியோடியிருந்தனர். அங்கு கைவரிசையைக் காட்டியுள்ளனர் கென்ய இராணுவத்தினரும் பொலிஸாரும். வர்த்தக வளாகத்தில் உள்ள நகைக் கடைகள், தொலைபேசிக் கடைகள், விலை உயர்ந்த கைக்கடிகாரங்கள் மற்றும் மடிக்கணினி என்று ஏராளமான பொருள்களை அள்ளிச் சென்றுள்ள அவர்கள் 'கல்லா'வில் இருந்த பணத்தையும் விட்டுவைக்கவில்லை.
இதைவிட கொடுமை என்னவென்றால் தாக்குதலில் உயிரிழந்தவர்களின் உடல்களைச் சோதித்து அவர்களிடம் இருந்த பொருள்களையும் அபகரித்துக்கொண்டதுதான்.
கடந்த ஒகஸ்ட் மாதம் நைரோபி விமான நிலையத்தில் தீ விபத்து ஏற்பட்ட போதும் பாதுகாப்புக்கு சென்ற இராணுவ வீரர்கள் அங்கும் தங்களது கைவரிசையைக் காட்டி கண்காணிப்பு கமராவில் சிக்கிக் கொண்டிருந்தனர். (ற)

## மாலியில் கடும் மோதல்

கிடல், ஒக்.3
மாலியில் கிடல் பகுதியில் இராணுவத்திற்கும் டுவாரெக் கிளர்ச்சியாளர்களுக்கும் இடையே கடும் மோதல்கள் ஆரம்பித்துள்ளன.
மாலி அரசுக்கும் கிளர்ச்சியாளர்களுக்கும் இடையிலான அமைதி ஒப்பந்தம் முறிவடைந்ததை அடுத்தே இந்த மோதல்கள் ஆரம்பமாகியுள்ளன.
மோதல்கள் ஆரம்பித்ததை அடுத்து அங்குள்ள இராணுவ முகாம்கள் கிளர்ச்சியாளர்களின் கடும் தாக்குதல்களுக்கு உள்ளாகியுள்ளன.
தற்போது நடைபெறும் மோதல்களில் இதுவரை சர்வதேச நாடுகளின் தலையீடு ஏற்படவில்லை. எனினும் மாலியில் அமைதியை நிலைநாட்ட ஐ.நா 12 ஆயிரம் இராணுவத்தினரை அனுப்ப ஒப்புதல் அளித்துள்ளது. (ற)

## போர்க்குற்றம் நிரூபணம்

### எதிர்க்கட்சித் தலைவருக்கு தூக்கு: பங்களாதேஷ் நீதிமன்றம் அதிரடி

டாக்கா, ஒக்.3
போர்க்குற்றங்களில் ஈடுபட்டமைக்காக பங்களாதேஷின் மூத்த எதிர்க்கட்சித் தலைவர் ஒருவருக்குத் தூக்குத் தண்டனை விதித்துத் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.
1971ஆம் ஆண்டு இடம்பெற்ற போரின்போது மூத்த எதிர்க்கட்சித் தலைவரான சலாலுதீன் காதர் சௌத்ரி போர்க்குற்றங்களில் ஈடுபட்டமை உறுதிப்படுத்தப்பட்டதை அடுத்தே நீதிமன்றம் இந்தத் தீர்ப்பை வழங்கியுள்ளது.
இந்த சிறப்பு நீதிமன்றத்தால் தண்டிக்கப்படும் பங்களாதேஷின் முதல் நாடாளுமன்ற உறுப்பினரும், பிரதான எதிர்க்கட்சியான பங்களாதேஷ் தேசியவாதக் கட்சியின் மூத்த பிரமுகரும் இவர் என்பது குறிப்பிடத்தக்கது.
இந்தத் தீர்ப்புக் குறித்து மேன்முறையீடு செய்யப்படும் என்று சௌத்ரியின் மனைவி தெரிவித்துள்ளார்.
சௌத்ரிக்கு வழங்கப்பட்டுள்ள தீர்ப்பை அடுத்து பங்களாதேஷில் பதற்ற நிலை தோன்றக் கூடும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (ற)

## அமெ. தூதுவர்கள் வெளியேற்றம்: வெனிசுவேலா அதிரடி நடவடிக்கை

கராக்கஸ், ஒக்.3
வெனிசுவேலாவில் உள்ள மூன்று அமெரிக்கத் தூதர்களையும் உடனடியாக நாட்டை விட்டு வெளியேறுமாறு அந்த நாட்டின் ஜனாதிபதி நிகோலஸ் மடுரோ உத்தரவிட்டுள்ளார்.
வெனிசுவேலாவின் பொருளாதாரத்தைச் சீர் குலைக்கும் சதித் திட்டங்களில் குறித்த மூன்று அமெரிக்கத் தூதுவர்களும் ஈடுபட்டு வருகின்றனர் என்றும் அவர் குற்றஞ்சாட்டியுள்ளார்.
எனினும் வெனிசுவேலா ஜனாதிபதியின் இந்தக் கூற்றை அமெரிக்கா முற்றாக நிராகரித்துள்ளது. (ற)

# புத்த விகாரை அமைப்பதை உடன் தடுத்து நிறுத்துங்கள்

## யோகேஸ்வரன் எம்.பி. வேண்டுகோள்



திருகோணமலை, ஒக்.3

திருகோணமலை, கன்னியாவில் தனியார் காணியில் புத்த விகாரை அமைப்பதை தடுத்து நிறுத்துமாறு கோரி மாவட்ட அரச அதிபருக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சீனித்தம்பி யோகேஸ்வரன் மனு ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

இந்த மனுவில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

திருகோணமலை, பட்டினமும் சூழல் பிரதேசத்தில் இந்துக்களின் புனித வழிபாட்டுத் தலமும், தீர்த்தமுமாக இருந்த கன்னியா வென்னீர் ஊற்றில் திட்டமிட்டு அமைக்கப்பட்ட பௌத்த விகாரையை தொடர்ந்து, அதன் அருகில் உள்ள தனியார் காணியில் மூன்று புத்தர் சிலைகள் நிறுவப்படவுள்ளன என்று தகவல் கிடைத்துள்ளது. இந்த நடவடிக்கை அனுமதிக்க முடியாது.

போரின் பின்னர் இந்துக் கோயில்கள் உடைக்கப்பட்டமை, அந்த இடங்களில் புத்த விகாரை நிறுவப்பட்டமை உட்பட பல செயற்பாடுகள் திருகோணமலை மாவட்டத்திலேயே இடம்பெற்றுள்ளன. அரசின் மதவிவகார பிரதி அமைச்சர் உள்ள மாவட்டத்தில் இந்தச் சம்பவங்கள் தொடர்ச்சியாக இடம்பெறுவது இந்துக்களின் மத உரிமைகளை திட்டமிட்டு பாதிக்கச் செய்யும் நடவடிக்கையாக உள்ளது.

தற்போது தனியார் காணியில் இடம்பெறவுள்ள புத்த விகாரை தாபிப்பை யாரும் அனுமதிக்க முடியாது. கௌதம புத்த பகவானின் தர்ம உபதேசங்களை கொச்சைப்படுத்தும் விதத்தில் ஏனைய மத மக்களின் மனங்களை புன்படுத்தும் செயல்களை சில பௌத்த மதத் துறவிகள் மேற்கொண்டு வருகின்றனர்.

**பிக்கு ஒருவரால் தனியார் காணியில் நிறுவப்படவுள்ள பௌத்த விகாரை செயற்பாட்டை தடுத்து நிறுத்த வேண்டும்.**

எனவே திருகோணமலை மாவட்டத்தின் அரச அதிபர் என்ற வகையில் கன்னியா வென்னீர் ஊற்றுப் பகுதியில் பௌத்த பிக்கு ஒருவரால் தனியார் காணியில் பௌத்த விகாரை நிறுவப்படவுள்ள செயற் பாட்டை தடுத்து நிறுத்த வேண்டும்.-என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த மனுவின் பிரதிகள் மத விவகார அமைச்சர், கிழக்கு மாகாண முதலமைச்சர், கொழும்பு இந்து சமய கலாசார அலுவல்கள் பணிப்பாளர், திருகோணமலை மாவட்ட பிரதேச செயலர் ஆகியோருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. (ச)

## அந்தக் கரணம் என்பது எதனை எடுத்துக் காட்டுகின்றது?

அந்தக் கரணங்கள் என்பது மனிதனின் அகக் கருவிகளாகும். அவை ஐந்து அடிப்படை ஆதாரப் பொருளாகிய ஆகாயம், காற்று, தீ, நீர், பூமி என்பவற்றின் முழுமையான சாத்வீக இயல்பைப் பிரதிபலித்துக் காட்டுகின்றன.



நன்றி
தெய்வீகம் மலரும் பொழுது

**சாயி சிந்தனை**

## வரதராஜப்பெருமாளுக்கும் கொடி

யாழ்ப்பாணம், ஒக்3

யாழ்ப்பாணம், வண்ணை வெங்கடேச வரதராஜப் பெருமாள் ஆலயத்தின் வருடாந்தப் பெருந்திருவிழா நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது. திரு விழாக்காலங்களில் தினமும் காலைப் பூசைகள் காலை 9 மணிக்கும் மாலைப் பூசைகள் பிற்பகல் 4.15 மணிக்கும் இடம் பெறவுள்ளன.

எதிர்வரும் 12 ஆம் திகதி சனிக்கிழமை காலை9 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்குத் தீர்த்தத்திருவிழாவும் இடம்பெறும். (ச)

## மென்பானப் போத்தல்கள் சிக்கின



மட்டக்களப்பில் மனித பாவனைக்கு உதவாத 236 மென்பானப் போத்தல்கள்களை ஆரையம்பதி சுகாதார பிரிவினர் செவ்வாய்க்கிழமை கைப்பற்றியுள்ளனர்.

ஆரையம்பதி சுகாதாரப் பிரிவிலுள்ள பாலமுனை, 4 ஆம் கட்டை ஆகிய இடங்களிலுள்ள 7 வர்த்தக நிலையங்களில் மேற்கொள்ளப்பட்ட திடீர் சோதனையின்போதே அவைகள் கைப்பற்றப்பட்டன என்று ஆரையம்பதி பொதுச் சுகாதாரப் பரிசோதகர் கே.நரேந்திரகுமார் தெரிவித்தார்.

காத்தான்குடி பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் குளிர்பானம் அருந்தியபோது, அந்தப் போத்தலினுள் இருந்து துகள்களும், சிறிய கழிவுகளும் வெளிவந்துள்ளன.

அதனையடுத்து பொலிஸாரின் முறைப்பாட்டின் பேரிலேயே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது என்று சுகாதார அதிகாரிகள் தெரிவித்தனர்.

கைப்பற்றப்பட்ட மென்பானங்களின் மாதிரிகள் கொழும்பு இரசாயன பகுப்பாய்வு திணைக்களத்துக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளன என்று சுகாதார அதிகாரிகள் தெரிவித்தனர். (ச)


**பாராட்டி வாழ்த்துகின்றோம்**



யா/ விடத்தற்பளை கமலாசனி வித்தியாலய மாணவன்
செல்வன் சிவகுமார் ஜனகன்
2013 ஐந்தாம் தரப் புலமைப் பரிசில் பரீட்சையில் 163 புள்ளிகள் பெற்று சித்தி பெற்றமையையிட்டு பாராட்டுவதுடன், அவர் மேலும் பல பரீட்சையில் சித்திபெற்று உயர்வடைய விடத்தற்பளை சம்பா வெளிப் பிள்ளையாரின் ஆசி பெறவும் வாழ்த்துகின்றோம்.
CONGRATULATION
அப்பா, அம்மா, அம்மம்மா, தாத்தா
மாமா குடும்பத்தினருடன்
மச்சான் அபிஷயன், மச்சி ஸதுரியா
விடத்தற்பளை, மிருசுவில்.

**பாராட்டி வாழ்த்துகின்றோம்**



மட்டுவில் தெற்கு அ.மி.த.க.பாடசாலை அதிபர்
வே.சுந்தரலிங்கம் அவர்கள்
எதிர்வரும் 05.10.2013 ஆம் திகதி மகரகம தேசிய கல்வி நிறுவகத்தில் இலங்கை பிரதமர் கௌரவ டி.எம்.ஜயவர்த்தன அவர்களால் பிரதிபா பிரபா விருது வழங்கி கௌரவிக்கப்படவுள்ளதையிட்டு பாராட்டுவதுடன் அவர் மென்மேலும் பட்டங்கள் பெற்று சிறப்புற வாழ வாழ்த்துவதோடு விருது கிடைக்க இவருடன் உழைத்த ஆசிரியர்களையும் இக்காளில் உளமார வாழ்த்துகின்றோம்.
பாடசாலைச் சமூகம்.
யா/மட்டுவில் தெற்கு அ.மி.த.க.பாடசாலை.
சாவகச்சேரி.
(20050)(5.6)

**Institute of Junior**

(English Medium)

* Elocution Classes
(Spoken & Written)
* Certificate Courses

Offer 25%

☞ Preschool Children's (4-5 வயதிற்கு)
☞ Spoken English (3 month)

மிகச் சிறந்த முறையில் Reading, Writing, Listening, Speaking கற்பிக்கப்படும். உங்கள் பிள்ளைகள் ஆங்கிலத்தில் வளர்ச்சியடைய 10.10.2013இற்கு முன் உடன் அனுமதிகளைப் பெற்றுக்கொள்ளவும்.

இல.926, பருத்தித்துறை வீதி, நல்லூர் (சட்டநாதர் கோவில் முன்)
Email- Instiututeofjunior2013@gmail.com T.P:- 0771999630, 0212054052

**வீடு வாடகைக்கு**

கோண்டாவில் கிழக்கு, பொற்பதி வீதியில் பெரிய Hall 5 அறைகள், சமையல் அறை, இணைந்த குளியல் அறை, பிரத்தியேக குளியலறையுடன் வீடு வாடகைக்கு உண்டு. அரச நிறுவனம், அரச சார்பற்ற நிறுவனம் விரும் பத்தக்கது. தொடர்பு:077 900 7481
(பி/12956)(11.6)

**மணமகள் தேவை**

யாழ் சரவணை கிழக்கு இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த டிசெம்பர் 1978 இல் பிறந்த பூச நட்சத்திரம் 4இல் சூரியன், செவ்வாய், 3சுற்று மொத்த கி.பா 29, செவ்வாய் பாவம் 8, 5'6" உயரமுடைய, சொந்த வியாபார நிலையம் நடத்தும் லண்டன் சிற்றிசன் மணமகனுக்கு, சாதகப் பொருத்தமுடைய, படித்த, அழகிய, 4-6 வயது குறைவான மணமகளை எதிர்பார்க்கிறோம்.
தொடர்பு: 071 400 1257
(பேரின்பநாயகர்)
(32244) (7.6)

**சுத்தமானதும், தூயதுமான நீரை பெறுவதற்கான ஒரே சாதனம்**



Unilever Pureit Water Filter
Unilever pureit
தொ.இல: 021 222 5390
வட மாகாண ஏக முகவர்:
நாராயணா ஹாட்வெயார்ஸ் ரேடர்
இல: 92C, ஸ்ரான்லி வீதி யாழ்ப்பாணம்.

**சங்கானை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்**
**காணி கட்டடம் மற்றும் பாரவூர்திகள் விற்பனை செய்வதற்கான மூடிய கூறுவிலை கோரல்**

எமது சங்கத்திற்கு சொந்தமான மின்தறி ஆலைக் கட்டடத்திற்கு மேற்குப் பக்க பட்டினசபை வீதிக்கும் தெற்குப்பக்க ஒழுங்கையிலுமுள்ள நிலப்பரப்பு 05 விஸ்தீரணமுடைய காணி கட்டடத்திற்கும் மற்றும் பென்ஸ் 24/2533, லேடன்ட் NPJG-0031 இலக்க பாரவூர்திகளுக்குமான மூடிய கூறுவிலை கோரி விற்பனை செய்யப்படவுள்ளது.

நிபந்தனைகள்:
1. மேற்படி ஆதனம் மற்றும் பாரவூர்திகளைக் கொள்வனவு செய்ய விரும்புபவர்கள் தமது கூறுவிலைகளைச் சுயமாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப் படிவத்தில் பூர்த்தி செய்து கடித உறையிலிட்டு சீல் செய்து 17.10.2013ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு முன்பாக **பொதுமுகாமையாளர், சங்கானை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், சங்கானை** என்ற முகவரிக்கு நேரடி யாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ அனுப்பி வைக்கலாம்.
2. கேள்விகளை ஏற்கவோ மறுக்கவோ, கேள்விச் சபைக்கு அதிகாரமுண்டு.
3. கடித உறையில் இடது பக்க மேல் மூலையில் கூறுவிலை விண்ணப்பம் எனக் குறிப்பிடுதல் வேண்டும்.
4. கூறுவிலை சமர்ப்பிப்போர் சங்கத்தில் மீளளிக்கக்கூடிய வைப்புப் பணமாக ரூபா 5000.00 செலுத்துதல் வேண்டும்.
5. மேற்படி ஆதனம் மற்றும் வாகனங்களைப் பார்வையிட விரும்புவோர் சங்கத் தலைமைக் காரியாலயத்தில் வேலை நாள்களில் முற்பகல் 10.00 மணி தொடக்கம் பிற்பகல் 4.00 மணி வரை பொது முகாமையாளருடன் தொடர்பு கொண்டு பார்வையிடலாம்.

பொதுமுகாமையாளர்
சங்கானை ப.நோ.கூ.சங்கம்.
T.P: 021 225 0126
(சி/12534)
(7.6)

**Green Card Lottery Visa**

அமெரிக்க லொத்தர் விசா
2015 ஆம் ஆண்டுக்கான
விண்ணப்பங்களை அனுப்பிக்கொள்ளலாம்
முடிவுத்திகதி : 02.11.2013
அருள் குளோபல் எக்ஸ்பிரஸ்
இல,1. பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். Tel : 021 222 6113

# கரையோரத்தில் அணை அமைக்குமாறு அரியாலை கிழக்கு மக்கள் கோரிக்கை



கொழும்புத்துறை, ஒக். 3
அரியாலை கிழக்கு பிள்ளையார் கோயிலடிப் பகுதியில் வயல் நிலங்களில் கடல் நீர் உட்புகுவதைத் தடுக்கும் கடற்கரையோர அணை அமைக்கப்படாமையால் இந்த முறை பெரும்போக நெற்செய்கையின்போது வயல்களுக்குள் கடல் நீர் உட்புகும் அபாயம் காணப்படுவதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

குறித்த பகுதியில் நீண்ட காலமாக இருந்து வந்த தடுப்பு அணை போர் நடவடிக்கைகளின்போது முற்றாக அப்புறப்படுத்தப்பட்டது. அதன் பின்னர் மக்கள் மீளக் குடியமர்ந்து நெற்செய்கையை மேற்கொண்ட ஒவ்வொரு வருடமும் கடும் மழை காலத்தில் கடல்நீர் வயல்களுக்குள் புகுந்து பயிர்களை அழித்ததுடன் நிலமும் உவர்த் தன்மையாக மாறி வருவதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர். இதனால் விளைச்சலில் பாதிப்பை எதிர்நோக்கி நட்டம் அடைகின்றனர்.

எனவே .இந்த முறை நெற் செய்கையை ஆரம்பிக்கமுன்னராவது தடுப்பு அணையை அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (வ-135)

இந்த முறை நெற் செய்கையை ஆரம்பிக்க முன்னராவது தடுப்பு அணையை அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்

சாவகச்சேரி பிரதேச சபை நடத்தும்

# உள்ளூராட்சி வார நிகழ்வு

தென்மராட்சி, ஒக்.3
சாவகச்சேரி பிரதேச சபையினர் உள்ளூராட்சி வாரத்தை எதிர்வரும் 21 ஆம் திகதி தொடக்கம் 27 ஆம் திகதி வரை நடத்தவுள்ளனர்.

இதனை முன்னிட்டு சபை எல்லைக்குட்பட்ட கச்சாய், வரணி, மிருசுவில், சரசாலை, கைதடி, நாவற்குழி ஆகிய உப அலுவலகங்கள், பொது நூலகங்கள் ஆகியவை ஊடாக மாணவர்களிடையே போட்டிகளை நடத்தவுள்ளனர்.

முன்பள்ளிச் சிறார்களுக்கு வர்ணம் தீட்டல் போட்டியும் தரம் 4, 5 மாணவர்களுக்குப் பேச்சுப் போட்டியும், தரம் 11 மாணவர்களுக்கு பொது அறிவுப் போட்டியும் உயர்தர வகுப்பு மாணவர்களுக்கு சிறுகதைப் போட்டியும் நடத்தவுள்ளனர்.

போட்டிகளில் மாணவர்கள் பங்குபற்றுவதற்கான விண்ணப்பங்கள் அந்தந்தப் பாடசாலைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (வ-9)

## வெடிக்காத நிலையில் ஷெல் மீட்பு

தென்மராட்சி, ஒக்.3
பற்றையைத் துப்புரவு செய்தபோது வெடிக்காத நிலையில் ஷெல் மீட்கப்பட்டது.

இந்தச் சம்பவம் கடந்த சனிக்கிழமை சாவகச்சேரி சப்பச்சி மாவடி மன்றத்தடியில் இடம்பெற்றது.

வீடு கட்டுவதற்காக வளவைத் துப்புரவு செய்த தொழிலாளி பெரிய பற்றையை வேருடன் எடுப்பதற்காக மண்வெட்டியால் வெட்டியபோது வித்தியாசமான சத்தம் கேட்டதால் அதனைத் தோண்டிப் பார்த்தபோது மூன்று அடி நீளமான ஷெல் இருந்ததைக் கண்டு அதனை மீட்டெடுத்து காணியில் வைத்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (வ-9)

## விபத்தில் காயம்

வலி.வடக்கு, ஒக்.3
சுன்னாகம் மயிலணி ஜெற் மோட்டார்ஸ் வீதியில் நடந்து சென்றவரை பெண் ஒருவர் சைக்கிளால் மோதியதில் காயங்களுக்கு உள்ளாகிய நிலையில் அப்பாதசாரி தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் நேற்று முன்தினம் சேர்க்கப்பட்டார்.

அதே இடத்தைச் சேர்ந்த ஆறுமுகம் செல்வராசா (வயது -56) என்பவரே முகம் கை கால்களில் காயமுற்ற நிலையில் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

நடந்து சென்று கொண்டு இருந்த வேளையில் பின்புறமாக சைக்கிளில் வந்த பெண் நிலை தடுமாறி மோதியதில் முன்புறமாக முகம் அடியுண்டு விழுந்தமையால் இந்த காயங்கள் ஏற்பட்டுள்ளன. (வ-86)

## வீட்டிலிருந்த சைக்கிள் திருட்டு

மல்லாகம் உப தபாலதிபரின் வீட்டில் விடப்பட்டிருந்த பத்தாயிரம் ரூபா பெறுமதியான சைக்கிள் இரவு வேளையில் வீட்டில் இருந்து திருடப்பட்டுள்ளதாகத் தெல்லிப்பழை பொலிஸ் நிலையத்தில் முறையிடப்பட்டுள்ளது.

மல்லாகம் காங்கேசன்துறை வீதியில் அமைந்துள்ள சு.பொன்னம்பலம் என்பவருடைய வீட்டின் உட்புறம் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த சைக்கிளே மிக வும் துணிகரமாக செவ்வாய்க்கிழமை அதிகாலையில் களவாடிச் செல்லப்பட்டுள்ளது.

தெல்லிப்பழை பொலிஸ் நிலையத்தில் செய்யப்பட்ட முறைப்பாட்டைத் தொடர்ந்து பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (வ-86)



ஆனைக்கோட்டை முள்ளி கிராமத்தில் 37 லட்சம் ரூபா செலவில் யு.என்.டி.பி அமைப்பின் நிதி உதவியுடன் அமைக்கப்பட்ட பலநோக்கு மண்டபத் திறப்பு விழாவில் கௌரவ விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ்.அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகமும், யு.என்.டி.பி இலங்கைக்கான பணிப்பாளர் எக்னா மில்க்கிறமியும் நாடா வெட்டித் திறந்து வைக்கின்றனர். (வ-100)

பகிரங்க சேவை நம்பிக்கை நிதிய

# கொடுப்பனவில் அனுகூலங்கள்

வடமராட்சி, ஒக்.3
பகிரங்க சேவை ஒய்வூதிய நம்பிக்கை நிதிய அங்கத்தவர்களான ஓய்வூதியர்களுக்கு வழங்கப்படும் கொடுப்பனவில் அனுகூலங்கள் அதிகரிக்கப்பட்டுள்ளதாக பகிரங்க சேவைகள் ஒய்வூதிய நம்பிக்கை நிதிய யாழ்.மாவட்ட சங்கம் தெரிவித்துள்ளது.

இறப்பு மானியம், வைத்தியசாலைக் கொடுப்பனவு, கண் சிகிச்சைக்கான கொடுப்பனவு, புலமைப்பரிசில் தொகை சத்திரசிகிச்சைக் கொடுப்பனவு, கடன் கொடுப்பனவு என்பன முன்னரைவிட அதிகரிக்கப்பட்டுள்ளன.

செப்ரெம்பர் மாதம் தொடக்கம் அங்கத்துவ நிதிய அங்கத்தவர்களின் மாதாந்தக் கட்டணம் 20 ரூபா வில் இருந்து 50 ரூபாவாக உயர்த்தப்பட்டுள்ளது.

அத்துடன் வைத்தியசாலைக் கொடுப்பனவு 200 ரூபாவிலிருந்து 250 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதேபோல கண்சிகிச்சையின் போது ஒரு கண்ணுக்கு 2 ஆயிரம் ரூபா வழங்கும் தொகை 4 ஆயிரம் ரூபாவாக அதிகரிக் கப்பட்டுள்ளது.

அதேபோல் பல்கலைக்கழகம் செல்லும் பிள்ளை ஒருவருக்கு 3 ஆயிரம் ரூபா வீதம் வழங்கப்படும் கொடுப்பனவு 5 ஆயிரம் ரூபாவாகவும் கடன் கொடுப்பனவு 10 ஆயிரத்தில் இருந்து 25 ஆயிரம் ரூபாவாகவும் அதிகரிக்கப்பட்டுள்ளது. சத்திர சிகிச்சைக்கு 10 ஆயிரம் ரூபா வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ-8)

## கூட்டுறவு சபை பணிப்பாளர் சபை உறுப்பினர்களுக்கு செயலமர்வு

யாழ்ப்பாணம், ஒக்.3
கூட்டுறவுத் திணைக்களத்தின் உதவியுடன் மாவட்டக் கூட்டுறவுச் சபை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் பணிப்பாளர் சபை உறுப்பினர்களுக்கான செயலமர்வுகளை நடத்தி வருகின்றது.

இந்தச் செயலமர்வு கோட்ட மட்டத்தில் நடத்தப்படுகிறது.

வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்று வரும் இந்த செயலமர்வில் வடமராட்சி, தென்மராட்சி கோட்டத்தின் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் பணிப்பாளர்களுக்கு இந்த மாத நடுப்பகுதியில் அமர்வை நடத்தத் திட்ட மிடப்பட்டுள்ளது.

ஏற்கனவே வலிகாமம் மற்றும் தீவக கோட்ட பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் பணிப்பாளர்களுக்கான செயலமர்வு கடந்த மாத இறுதியில் நடத்தப்பட்டது. (வ-17)



## நவாலியில் வயிற்றோட்டம் அதிகரிப்பு

நவாலி, ஒக்.3
நவாலி, ஆனைக்கோட்டை, மானிப்பாய் மற்றும் சில பகுதிகளில் தற்போது வயிற்றோட்டம், காய்ச்சல், வாந்தி போன்ற நோய்களால் பலர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறு பாதிக்கப்படுவோர் தனியார் வைத்தியசாலைகளிலும், அரச வைத்தியசாலைகளிலும் சிகிச்சை பெற்றுச் செல்கின்றனர். குறிப்பாக மானிப்பாய் அரசினர் வைத்தியசாலையில் அதிகமான நோயாளர்கள் சிகிச்சை பெற்றுச் செல்வதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை குறித்த பகுதிகளில் வீடுகள், தேநீர்க் கடைகளில் இலையானின் தொல்லை அதிகரித்துள்ளது.

இதன் காரணமாகவும் தொற்று நோய்கள் உருவாகும் அபாயம் ஏற்பட்டுள்ளது. (வ-100)

# மகாஜனவில் மருத்துவ முகாம்

வலி.வடக்கு, ஒக்.3
நவமகாஜனா சிற்பி அமரர் தெ.து.ஜயரத்தினத்தின் நூறாவது பிறந்த தினத்தை முன்னிட்டு மாபெரும் மருத்துவ முகாம் ஒன்று எதிர்வரும் 6 ஆம் திகதி மகாஜனக் கல்லூரியின் விழாக் குழுவால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியில் காலை 9 மணியில் இருந்து பிற்பகல் 4 மணி வரை இம்முகாம் நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை பிரதிப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி எஸ்.ஸ்ரீபவானந்தராசா தலைமையில் இடம்பெறவுள்ள இந்த மருத்துவ முகாமில் வைத்திய நிபுணர்களான பொது வைத்திய நிபுணர் வைத்திய கலாநிதி ரி. பேரானந்தராசா, சத்திர சிகிச்சை நிபுணர் எஸ்.ரவிராஜ், குழந்தை வைத்திய நிபுணர் ஆர்.மருதயினார், கண் வைத்திய நிபுணர் எம்.மலரவன் மற்றும் தெல்லிப்பழை மாவட்ட வைத்தியசாலை வைத்திய அத்தியட்சகர் வைத்திய கலாநிதி எம். உமாசங்கர்.

சங்கானை மாவட்ட வைத்தியசாலை அதிகாரி வைத்திய கலாநிதி ரி.பிரகாசன், யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை சிரேஷ்ட வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி என்.ஸ்ரீஸ்கந்தராசா, யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் கடமையாற்றும் வைத்திய கலாநிதி களான கே.இளங்கோஞானியர், கே. இராஜசேகரன், என். ரவீந்திரன், கே.செல்வஸ்கந்தன், தெல்லிப்பழை பொதுச் சுகாதார வைத்தியதிகாரி பி.நந்தகுமாரன், பாடசாலை வைத்திய அதிகாரி என்.யோகேஸ்வரன் பிராந்திய பல் வைத்திய அதிகாரி எஸ். பாலகுமார் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியில் காலை 9 மணியில் இருந்து பிற்பகல் 4 மணி வரை நடைபெறவுள்ளது.



யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் இரத்தவங்கியால் இரத்ததான முகாம் நடத்தப்படுவதுடன் பிராந்திய சுகாதாரசேவைகள்பணி மனையின் பிராந்திய பற்சிகிச்சைப் பிரிவு, பிராந்திய பாடசாலை மருத்துவப் பிரிவு, தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைமற்றும்யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை, தெல்லிப்பழை மாவட்ட வைத்தியசாலைகளின் ஆய்வுகூடங்களும் இந்த மருத் துவமுகாமில் செயற்படவுள்ளன. (வ-86)

மானிப்பாய் அரசினர் வைத்தியசாலையில்

# இளைப்பாற வசதியின்றி கர்ப்பிணிகள் அவலம்

நவாலி, ஒக்.3
மானிப்பாய் அரசினர் வைத்தியசாலைக்கு மாதாந்த மருத்துவபரிசோதனைக்காக வருகை தரும் கர்ப்பிணித் தாய்மார், பாலூட்டும் தாய்மார், குழந்தைகள் வசதியாக அமர்ந்திருந்து வைத்திய பரிசோதனையை மேற் கொள்ள முடியாமல் பெரும் கஷ்டங்களை அனுபவித்து வருகின்றனர்.


குறித்த நோயாளர்கள் அமர இடமின்மையால் பிரசவ விடுதி நடை பாதையிலும் மற்றும் படிக்கட்டுகள், நில விளிம்புகள் என்பவற்றிலும் கஷ்டப்பட்டு அமர்வதைக் காண முடிகிறது.

எனவே, அவர்களுக்கு இளைப்பாறு மண்டபம் ஒன்றை விரைவில் அமைத்துக் கொடுக்கப்பட வேண்டும் என்று அண்மையில் நடைபெற்ற நோயாளர் நலன்புரி சங்கத்தில் தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டுள்ளது.

“ குறித்த நோயாளர்கள் அமர இடமின்மையால் பிரசவ விடுதி நடை பாதையிலும் மற்றும் படிக்கட்டுகள், நில விளிம்புகள் என்பவற்றிலும் கஷ்டப்பட்டு அமர்வதைக் காண முடிகிறது.

இதற்கமைய பொதுமக்கள் மற்றும் சமூக அமைப்புக்கள் ஆகியோரிடமிருந்து நிதி சேகரித்து மண்டபத்தை அமைப்பதற்கான முயற்சியில் நோயாளர் நலன்புரி சங்கம் ஈடுபட்டுள்ளது. (வ-100)

# மரக்குற்றிகளுடன் பத்துப் பேர் கைது



ஏறாவூருக்குக் கடத்திச் செல்லப்பட்ட ஒரு தொகுதி காட்டு மரக் குற்றிகளைக் கைப்பற்றியுள்ளதுடன், சந்தேகத்தின் அடிப்படையில் 10 பேரை ஏறாவூர்ப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

10 மாட்டு வண்டில்களில் கொண்டு வரப்பட்ட மரக்குற்றி களையே செவ்வாய்க்கிழமை தாம் கைப்பற்றியுள்ளதுடன், சந்தேகநபர்களையும் கைதுசெய்துள்ளதாக ஏறாவூர்ப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த மரக்குற்றிகள் களுவன் கேணிப் பகுதி ஊடாக ஏறாவூர் நகருக்குக் கொண்டுவரப்பட்டபோதே கைப்பற்றப்பட்டன என்று பொலிஸார் கூறினர். (ச)

# வடக்கில் கூட்டமைப்பின் வெற்றி பேரினவாதிகளுக்குத் தடுமாற்றம்

## முஸ்லிம் காங்கிரஸின் சிரேஷ்ட பிரதித் தலைவர் அப்துல் மஜீத் தெரிவிப்பு



அம்பாறை, ஒக்.3

"வடமாகாணசபைத் தேர்தலில் தமிழ் மக்கள், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வழங்கிய வலிமையான ஆணையைக் கண்டு, தெற்கிலுள்ள சிங்கள.பௌத்த பேரினவாதிகள் கலக்கமடைந்துள்ளதுடன், தடுமாற்றமும் அடைந்துள்ளனர்.

இவ்வாறு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் சிரேஷ்ட பிரதித் தலைவரும், முன்னாள் இணைந்த வடகிழக்கு மாகாண சபை உறுப்பினருமான ஏ.எல். அப்துல் மஜீத் கூறினார்.

கிழக்கு மாகாண சபை விவசாய, கால்நடை, நன்னீர் மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் ஹாபிஸ் நஸீர் அஹமத்தின், ஒரு வருட அமைச்சர் பதவிச் சேவையைப் பாராட்டி கௌரவிக்கும் சேவை நலன் பாராட்டு விழா ஏறாவூர் அல்-அஸ்ஹர் வித்தியாலயத்தில் நடைபெற்றது.

இந்தநிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நடைபெற்று முடிந்த வட மாகாண சபைத் தேர்தல் முடிவுகள் தெற்கில் பெரும் அதிர்வலைகளைத் தோற்றுவித்துள்ளது. தேர்தல் காலத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முன்வைத்த தேர்தல் விஞ்ஞாபனத்தைக் கடுமையாக விமர்சித்த அமைச்சர்கள் சம்பிக்க ரணவக்க, விமல் வீரவன்ஸ போன்ற இனவாத சக்திகள் தேர்தல் முடிவுகள் வெளியானதும் தடுமாற்றமடைந்துள்ளனர்.

**அதிகாரப் பரவலாக்கம்**

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைப்போன்று முஸ்லிம் காங்கிரஸ் கட்சியும் அதிகாரப் பரவலாக்கலை வேண்டி நிற்கும் ஒரு கட்சியாகும்.

அதிகாரப் பரவலாக்கலும் முஸ்லிம் காங்கிரஸின் தோற்றமும் ஒன்றிப் பிணைந்ததாகும்.

இனப் பிரச்சினைக்கான தீர்வு குறித்த வழிவகைகளைத் தேடும் சர்வகட்சி மாநாடு அன்றைய ஆட்சியாளர் ஜே.ஆர். ஜெயவர்த்தன தலைமையில் கூடியபோது முஸ்லிம்கள் சார்பில் கலந்து கொள்வதற்கு அன்று முஸ்லிம் சமூகத்தில் ஒரு கட்சி இருக்கவில்லை. .

இந்த அரசியல் வெற்றிடத்தை நீக்கி, முஸ்லிம் மக்களுக்கு அரசியல்முகவரியைக்கொடுத்த மர்ஹூம் அஷ்ரப் முதல் இன்றைய தலைவர் ரவூப் ஹக்கீம் வரை ஆட்சி அதிகாரப் பகிர்வில் முஸ்லிம் மக்களுக்கும் நீதி வேண்டுமென உழைத்து வருகின்றனர்.

**முஸ்லிம்கள்**

வடமாகாண சபையில் முஸ்லிம்களின் சுதந்திரமான குரல் ஒலிக்க வேண்டுமென்று முஸ்லிம் காங்கிரஸ் தேர்தலில் களமிறங்கியது.

வடமேல் மாகாணம், மத்திய மாகாண சபைத் தேர்தல்களில் அரசின் சார்பில் போட்டியிட்ட அத்தனை முஸ்லிம் வேட்பாளர்களும் தோல்வியைத் தழுவியுள்ளதுடன், முஸ்லிம் காங் கிரஸ் கட்சிக்குத் துரோகமிழைத்துச் சென்றவர்களும் படுதோல்வியடைந்துள்ளனர்.

முஸ்லிம் காங்கிரஸின் தேர்தல் முடிவு குறித்து இன்று சிலர் ஆரோக்கியமற்ற விமர்சனங்களை முன்வைத்து வருகின்றனர்.

அரசியலில் விமர்சனங்கள் தேவைதான். ஆனால் காழ்ப்புணர்ச் சியும், பொறாமையும் கொண்டதாக அவை இருக்கக் கூடாது என்றார். (ச-30)

# புனரமைப்புப் பணிகளை பார்வையிட்டார் கருணா



மட்டக்களப்பு, கிரான் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட வடமுனைக்குளத்தின் புனரமைப்புப் பணிகளை மீள்குடியேற்றப் பிரதி அமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் தலைமையிலான குழுவினர் செவ்வாய்க்கிழமை சென்று பார்வையிட்டனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் விவசாயச் செய்கையை அதிகரிக்கும் வகையில், சேதமடைந்துள்ள நீர்ப்பாய்ச்சல் குளங்களை புனரமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

கிழக்கின் உதயம் வேலைத் திட்டத்தின் கீழ் வடமுனைக் குளம் சுமார் 2 கோடி 40 லட்சம் ரூபா செலவில் புனரமைக்கப்பட்டு வருகின்றது.

நீர்ப்பாசன மற்றும் நீர்முகாமைத்துவ அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வாவிடம் மீள்குடியேற்றப் பிரதி அமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் விடுத்த வேண்டுகோளுக்கு அமைய இந்தக் குளத்தின் புனரமைப்புப் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இந்தக் குளம் புனரமைக்கப்படுவதன் மூலம் சுமார் 2,000 ஏக்கர் நெற்செய்கையில் ஈடுபடுவோர் நன்மை அடைய முடியும் என்று மீள்குடியேற்றப் பிரதி அமைச்சர் விநாயக மூர்த்தி முரளிதரன் தெரிவித்தார்.

இந்தக் குளத்தின் புனரமைப்புப் பணிகள் இந்த வருடம் நிறைவுறும் என்றும் அவர் கூறினார். (ச)



சிறுவர் தினத்தையொட்டி கல்முனை சுபத்திரா முன்பள்ளி மாணவர்களுக்கு கல்முனை மாநகர முதல்வர் பரிசு வழங்கினார்.

# பிறந்ததினத்தையொட்டி காந்தி உருவச்சிலைக்கு மலர்மாலை அணிவிப்பு

மட்டக்களப்பு, ஒக்.3

மகாத்மாகாந்தியின் 144 ஆவது பிறந்த தினத்தையொட்டி மட்டக்களப்பு காந்திசேவா மன்றத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட காந்தியின் புதிய உருவச் சிலைக்கு மலர்மாலை அணிவிக்கும் நிகழ்வு நேற்று புதன்கிழமை காலை மட்டக்களப்பு காந்தி சதுக்கத்தில் இடம் பெற்றது.

மட்டக்களப்பு காந்தி சேவா மன்றத்தின் தலைவர் செல்வேந்திரன் தலைமையில் இடம்பெற்ற இந்தநிகழ்வில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான பொன்.செல்வராசா, சீ.யோகேஸ்வரன் உட்படப் பலர் கலந்து கொண்டனர்.

மகாத்மா காந்தியின் உருவச் சிலைக்கு விருந்தினர்களால் மலர்மாலை அணிவிக்கப்பட்டதுடன், அவருக்காக இரண்டு நிமிடம் மௌன அஞ்சலியும் செலுத்தப்பட்டது.

மட்டக்களப்பில் 1969 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 2 ஆம் திகதி மகாத்மா காந்தியின் நினைவாக அவரது உருவச்சிலை முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் செல்லையா இராஜதுரையினால் நிர்மாணிக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ச)



# மீள்குடியேற்றக் கிராமத்துக்குள் நுழைந்த காட்டு யானைகள்

அம்பாறை, அக்கரைப்பற்று, பனை அறுப்பான் மீள்குடியேற்றக் கிராமத்துக்குள் செவ்வாய்க்கிழமை யானைகள் பிரவேசித்தமையால் மக்கள் பெரும் அச்சத்துக்கு உள்ளாகியுள்ளனர்.

மீள்குடியேற்றம் செய்யப்பட்ட இந்தக் கிராமத்தில் யானைகள் தொடர்ந்து உட்பிரவேசித்து வருவதால் தாம் தொடர்ந்தும் உயிர் அச்சுறுத்தலுடன் வாழ்ந்து வருவதாக பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர். இவ்வாறு பிரவேசிக்கின்ற யானைகளால் தமது குடிசைகள், வீட்டுத்தோட்டங்கள் என்பன துவம்சம் செய்யப்படுகின்றன என்று மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இதேவேளை இந்தக் கிராம மக்கள் மின்சாரம், குடிதண்ணீர், பாடசாலை, போக்குவரத்து வசதி போன்ற அடிப்படை வசதிகள் எதுவும் இல்லாத நிலையில் மிகவும் கஷ்டங்களை எதிர் நோக்கி வருகின்றனர். (ச)

# கஞ்சா வைத்திருந்த ஒருவர் கைது

மட்டக்களப்பு, ஒக்.3

வாழைச்சேனை, பிறைந்துரைச் சேனை பிரதேசத்தில் கஞ்சா வைத்திருந்ததான சந்தேகத்தின் பேரில் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்தப் பகுதியில் கஞ்சா விற்பனை இடம் பெறுவதாக சந்தேகித்த பொலிஸார், மோப்ப நாய் சகிதம் திங்கட்கிழமை தேடுதல் நடத்தினர்.

இதன்போது 4,000 மில்லிகிராம் கஞ்சாவுடன் ஒருவர் கைது செய்யப்பட்டார் என்று வாழைச்சேனை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி எம்.பி.ஈ.ஜயவீர தெரிவித்தார்.

கைதுசெய்யப்பட்ட சந்தேகநபரை நீதிமன்றில் முன்னிபடுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ச)

# அரசின் உண்மை முகத்தை சர்வதேசம் விரைவில் உணரும்

திருகோணமலை,ஒக்.3

தமிழருக்கான தீர்வு தொடர்பிலான அரசின் உண்மை முகத்தை சர்வதேசம் விரைவில் அறியும். தமிழ் மக்கள் குண்டூசி முனையளவு அரசியல் அதிகாரத்தைப் பெறுவதைக் கூட இந்த அரசு விரும்பவில்லை என்பதை சர்வதேச கொள்கை வகுப்பாளர்கள் உணர்ந்து கொள்ளும் காலம் வெகு தொலைவில் இல்லை.

இவ்வாறு திருகோணமலை நகர சபை உறுப்பினர் சி.நந்தகுமார் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் விடுத்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

போரால் ஏற்பட்ட பேரவலங்கள், மனவடுக்கள், துன்பங்கள், உயிரிழப்புக்கள், காணாமற்போனவர்கள் பற்றிய பரிதவிப்பு, சிறையில் வாடும் தம் உறவுகளின் நிலை போன்ற பல்வேறு துயர்களைப் பொறுத்துக் கொண்டு எதிர்காலம் சிறக்கும் என்ற நம்பிக்கை யில் வடக்கு வாழ் தமிழ் மக்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை வெற்றி பெற வைத்துள்ளனர்.

இது தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு மட்டும் கிடைத்த வெற்றியல்ல. இலங்கைத் தீவில் வாழும் அனைத்துத் தமிழ் மக்களுக்கும் கிடைத்த வெற்றியாகும்.

எனினும் ஜனநாயக ரீதியில் தெரிவு செய்யப்பட்ட தமிழ் மக்களின் பிரதிநிதிகள் ஆட்சியில் உள்ள ஜனநாயகக் கட்டமைப்புக்கள், ஜனநாயக நிறுவனங்கள் நாட்டில் சுதந்திரமாகச் செயற்படுவதற்கு பல்வேறு தடைகளை அரசு கடந்த காலங்களில் ஏற்படுத்தி வந்துள்ளது என்பதைத் தெரிந்துகொள்ள முடியாதவர்கள் அல்லர்.

இலங்கை அரசு தமிழ் மக்களின் உரிமைகளை வழங்கும் என நம்பிக்கை கொண்டிருக்கும் ஒரு சில நாடுகளும், சர்வதேச கொள்கை வகுப்பாளர்களும் தமிழ் மக்கள் குண்டூசி முனையளவு அரசியல் அதிகாரத்தைப் பெறுவதைக் கூட அரசு விரும்பாது என்பதை உணர்ந்து கொள்ளும் நாள் வெகு தொலை வில் இல்லை.-என்று தெரிவிக் கப்பட்டுள்ளது. (ச-40)

# சிறுவர் தினத்தில் பரீட்சை முடிவு மனதளவில் சிறுவர்கள் பாதிப்பு

## கவலைக்குரியது என்கிறார் ஐ.தே.க. உறுப்பினர்

"சிறுவர் தினத்தன்று புலமைப் பரீட்சை முடிவு வெளியிடுவது மிகவும் கவலைக் குரியதொரு விடயமாகும். இதனால், சிறு வர்கள் மனதளவில் பெரும் பாதிப்புக்குள்ளாகின்றனர். இதனைப் புரிந்து கொண்டு கல்வி அமைச்சு செயற்பட வேண்டும்" என ஐக்கிய தேசியக் கட்சியின் மேல் மாகாணசபை உறுப்பினர் மன்ஜீ சிறி அரங்கல நேற்றுத் தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தொழிற் சங்கப் பணிமனையில் நேற்று இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

நேற்று (நேற்று முன் தினம்) சர்வதேச சிறுவர் தினம் நாடு முழுவதும் கொண்டாடப்பட்டது. ஆனால், சிறு வர்கள் யாரும் மகிழ்ச்சியாக இருக்க வில்லை என்பதை உணரமுடிகிறது.

காரணம், இந்த ஐந்தாம் தர புலமைப்பரிசில் பரீட்சையின் முடிவுகள் அன்றைய தினத்திலேயே வெளியிடப்பட்டன. இந்த முடிவுகள் சில சிறுவர்களை மட்டுமே சந்தோஷத்தில் ஆழ்த்தி யிருக்கும்.

சிறுவர் தினம் என்பது அனைத்து சிறுவர்களும் மகிழ்ச்சியாக இருக்க வேண்டிய ஒரு தினம். ஆனால், நேற்று ( நேற்று முன்தினம்) கொண்டாடப்பட்ட சிறுவர் தினத்தில் சிறுவர்கள் பதற்றமாகவும், பெற்றோர்கள் நிம்மதியற்றுமே காணப்பட்டார்கள்.

முடிவுகள் வெளியான பிறகு பெற்றோர் மற்றும் சமூகத்தின் பார்வை யிலிருந்து சிறுவர்கள் தாழ்ந்த மட்டத்திலும் பார்க்கப்பட்டமை மிகவும் வேதனைக்குரியதொரு விடயமாகும்.

இந்நிலையில், இனிவரும் காலங்களிலும் சிறுவர் தினத்திலேயே பரீட்சை முடிவுகளை வெளியிடப் போவதாக அமைச்சு தெரிவித்துள்ளது. இப்படி சிறுவர்களின் மனங்களைக் காயப்படுத்துவது கவலைக்குரிய தொரு விடயமாகும். இதைப் பற்றி கல்வி அமைச்சு சிந்தித்துப் பார்க்க வேண்டும். "- என்றார்.

# அரச சாஹித்திய விழாவில் இலக்கியவாதிகளுக்கு விருது

அரச சாஹித்திய விழா கடந்த மாதம் 30 ஆம் திகதி பண்டாரநாயக்க ஞாபகார்த்த மாநாட்டு மண்டபத்தில் சபாநாயகர் சமல் ராஜபக்ஷ தலைமையில் நடைபெற்றது. இவ் விழாவில் வாழ்நாள் சாதனையாளர் விருது தமிழ், சிங்கள மற்றும் ஆங்கில இலக்கியவாதிகள் மூவருக்கு வழங்கப்பட்டது.

தமிழ் மொழி மூல வாழ்நாள் சாதனையாளர் விருதை கந்தையா நடேசுவுக்கும் சிங்கள மொழி மூலம் வீனி விதாரணவுக்கும், ஆங்கில மொழி மூலம் எட்வின் ஆரியதாஸவுக்கும் வழங்கப்பட்டது. இவ் விழாவில் பல தமிழ், சிங்கள் மற்றும் ஆங்கில மொழி மூல இலக்கியவாதிகள் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

அரச சாஹித்திய விழாவையொட்டி ஜனாதிபதி வெளியிட்டுள்ள அறிக்கை யில், "முழுமையான அபிவிருத்திக்கு சிறந்த இலக்கிய வளர்ச்சியும் அவசியம். சமூக அபிவிருத்திக்கு இலக்கிய வாதிகளும் அவசியம். அவர்களுக்கான முழுமையான கௌரவத்தை வழங்குவதற்கு தகுதியானவர்களை நாம் அடையாளம் கண்டுள்ளோம். சிறந்த இலக்கியங்கள் என்றும் அழியாதவை. கடந்த கால இலக்கியங் கள் நிகழ்காலத்திலும் பயனுள்ளவையாக உள்ளன" என அவரது அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த அரச சாஹித்திய விழாவில் விருது பெற்ற தமிழ் முஸ்லிம் கலை ஞர்களின் விவரம் வருமாறு:

சிறந்த நாவல்

உப்புக்காற்று- கலையார்வன் (கே.ராயப்பு)

பதினான்காம் நாள் சந்திரன் - என்.பி.அருளானந்தம்

மாமன்னன் சங்கிலியன் - கலாநிதி கே.குணராசா

கண்ணீரினூடே தெரியும் வீதி - தேவராசா முகுந்தன்

அட்சய வாடன் - மாத்தளை பி.வடிவேலன்

காலமான வானம் - திருமதி வசந்தி தயாபரன்

ஏனையவை

வேதாந்த மெய்யியல் - பேராசியர் என்.ஞானகுமாரன்

ஓர் ஈரநெஞ்சனின் உளவியல் உரை - பி.எம்.புண்ணியாமீன்

சட்டம், சமயம், ஆட்சி- அருட்சகோதரர், கலாநிதி எஸ்.ஏ.ஐ. மத்தியூ

கவிதைகள்

பாதை புதிது - எம்.சதாசரன்

எஸ் பயிஸா அலி கவிதைகள்- எஸ்.பயிஸா அலி

ஆகக்குறைந்த பட்சம் - அஸ்ரபா நூர்டீன்

சிறுவர் இலக்கியம்

சின்னஞ்சிறிய சிறகுகள் - அகளங்கன்

செல்லமே - எம்.டி. சஜாத்

சிங்கத்தின் நேர்மை - எம்.எஸ்.எஸ்.ஹமீட்

மொழிபெயர்ப்பு நாவல்

பொன் தாமரை குளம் - மடுலுகிரிய விஜேரத்ன

ஏனைய மொழிபெயர்ப்பு

எங்கள் கிராமம் - ஆர். சடகோபன்

மொழிபெயர்ப்பு சிறுகதை

சுடு மணல் - திக்வெல்லை கமால்



# பரீட்சையில் சித்தியடைந்த மாணவி தந்தையிடம் கோரிய மதுவிலக்கு பரிசு

புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவியொருவர் தனது தந்தையிடம் விசித்திரமான பரி சொன் றைக் கோரியுள்ளார். தெற்கைச் சேர்ந்த சிங்கள பாடசாலையொன்றின் மாணவி ஒருவரே இவ்வாறு பரிசு கோரியுள்ளார்.

ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் 172 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்த மாணவி, தனது தந்தை இனிமேல் மதுபானம் அருந்தக்கூடாது எனக் கோரிக்கை விடுத்துள்ளார்.

காலில் ஏற்பட்ட காயம் காரணமாக தந்தை வைத்தியசாலையில் சேர்க்கப் பட்டுள்ளார். தந்தையை பார்வையிடச் சென்ற தாயிடம் குறித்த மாணவி கடித மொன்றை அனுப்பி வைத்துள்ளார்.

"அப்பா, எனக்கு 172 புள்ளிகள் கிடைத்தன, பரீட்சையில் சித்தியடைந் தேன், இனிமேல் குடிக்க மாட்டேன் என எனக்குச் சத்தியம் செய்து கொடுக்க வேண்டும், கடவுள் துணை" என கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# அஸ்கிரிய மகாநாயக்கர் புத்தகாயாவுக்கு பயணம்

அஸ்கிரிய மஹாநாயக்கர் உடுகம ஸ்ரீ புத்தரக்கித்த தேரர் உள்ளிட்ட குழு வினர் புத்தகாயாவுக்கு பயணம் செய்துள்ளனர்.

இந்த தூதுக்குழு நேற்று முன்தினம் மாலை பெங்களூர் ஊடாக புத்தகாயா சென்றுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, எதிர்வரும் 4ஆம் திகதி மாலை 5.30 மணியளவில் புத்தகாயாவில் விசேட புண்ணியதான நிகழ்வுகளை நடத்த உள்ளதாக ஜனாதி பதி காரியாலயம் தெரிவித்துள்ளது.

# தரம் குறைந்த எரிபொருள் கொழும்பில்

தரம் குறைந்த மற்றுமொரு எரிபொருள் கப்பல் கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்துள்ளது. 15 ஆயிரம் தொன் பெற்றோல் அடங்கிய எரிபொருள் கப்ப லொன்று இவ்வாறு துறைமுகத்தில் நங்கூரமிட்டுள்ளது.

சிங்கப்பூரிலிருந்து 90 ஒக்ரேன் ரக பெற்றோல் இவ்வாறு இறக்குமதி செய்யப்பட்டுள்ளது. சய்னா ஒயில் என்ற நிறுவனம் குறித்த பெற்றோலை இறக்குமதி செய்துள்ளது. இந்த பெற்றோல் உரிய தரத்தை கொண்டமைய வில்லை என முத்துராஜவல எரிபொருள் ஆய்வு கூடத்தின் உயர் அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

இதே கப்பலில் 95 ஒக்ரேன் ரகத்தைச் சேர்ந்த 5 ஆயிரம் தொன் பெற்றோல் தருவிக்கப்பட்டதாகவும் அதன் தரத்தில் எவ்வித பிரச்சினையும் கிடை யாது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கறுப்புப்பட்டியல் இடப்பட்ட நிறுவ னாங்களிடமிருந்து தரம் குறைந்த எரிபொருட்களை கொள்வனவு செய்த காரணத்தினால் கடந்த 2012ஆம் ஆண்டில் மட்டும் இலங்கை பெற்றோ லியக் கூட்டுத்தாபனத்திற்கு ஒன்பது பில்லியன் ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளது.

# தேர்தல் ஆணையாளருடன் அரசியல் கட்சிகள் சந்திப்பு



## தேர்தலின் பின்னரான நிலை தொடர்பில் ஆய்வு

அரசியல் கட்சிகளின் பிரதி நிதிகள், தேர்தல் கண்காணிப் பாளர்கள் ஆகியோர் தேர்தல் கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரியவை சந் தித்துக் கலந்துரையாடியுள்ளனர். தேர்தலுக்கு பின்னரான நிலைமைகள் குறித்து இதன்போது கவனம் செலுத்தப்பட்டது.

தேர்தல்கள் செயலகத்தில் நேற்று முன்தினம் இடம் பெற்ற இந்தச் சந்திப்பில் அண் மையில் புத்தளம் பிரதேசத்தில் கண்டெடுக்கப்பட்ட புள்ளடியிடப்பட்ட வாக்குச்சீட்டுகள் தொடர்பில் கூடுதல் கவனம் செலுத்தப்பட்டது.

இங்கு கருத்துத் தெரிவித்த ஜன நாயக் கட்சியின் பொதுச் செயலாளர் ஆனந்த மானவடு, "அதிகாரிகளின் கவனயீனத்தினால் இந்தச் சம்பவம் நேர்ந்துள்ளது. ஏற்கனவே எண்ணப்பட்ட வாக்குசீட்டுக்களே அந்த இடத்தில் இருந்து கண்டெடுக்கப்பட்டுள்ளன. அதனால் கட்சி என்ற வகையில் எமக்கு எந்தவித பிரச்சினையும் இல்லை" எனத் தெரிவித்தார்.

ஐக்கிய இலங்கை மகா சங்கத்தின் தலைவர் ஜெயந்த குலதுங்க இந்த விவகாரம் குறித்து குறிப்பிடுகையில்.

"புத்தளம் சம்பவம் பாரியதொரு விடயமல்ல, அது தவறுதலாக இடம் பெற்றுள்ளது. வாக்குகளை எண்ணிய பின்னரே அவை கிடைத்துள்ளன. அதனால் இவ்வாறான தவறுகள் எதிர்காலத்தில் நடைபெறாமல் இருப்பதற்கான தீர்மானங்களை மேற்கொண்டனர். எனவே எதிர்காலத்தில் இவ்வாறான தவறுகள் இடம்பெறா என நான் நினைக்கின்றேன்" எனக் குறிப்பிட்டார்.

இதேவேளை, கபே அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கீர்த்தி தென்னக்கோனும் இந்தச் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக் கையில் -

"இந்த தேர்தல் செயற்பாடுகளில் பாரிய சந்தேகங்கள் ஏற்படும் வகையில் செயற்பட்ட அனைத்து அதிகாரி களுக்கும் எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டியது அவசியமானதாகும். தேர்தல் செயற்பாடுகளின்போது இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறுமேயானால் பொதுமக்களுக்கு தேர்தல் மீது நம்பிக்கை இல்லாது போய்விடும்" என்றார்.

மக்கள் விடுதலை முன்னணியின் சுனில் வட்டகல கருத்துத் தெரிவிக்கையில், "குறிப்பாக 17 ஆவது அரச மைப்பு திருத்தச் சட்டத்தின் மூலம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளவாறு, தேவைப்படும் பட்சத்தில் தேர்தலுக்கு முன்னர் தேர்தல்கள் ஆணையாளரால் தேவையான பொலிஸ் உத்தியோகத்தர்களை பெற்று நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியும். எனவே எதிர்காலத்தில் தேர்தலொன்றை நடத்தும் போது, பொலிஸ் மாஅதிபருடன் கலந்துரையாடி தமக்குத் தேவையான பொலிஸ் உத்தியோகத்தர்களை தேவைக் கேற்ப பயன்படுத்திக் கொள்ள முடியும்" என அவர் தெரிவித்துள்ளார்

# இலங்கை பணியாள்களை எதிர்பார்க்கிறது தாய்வான்

தாய்வான் அரசு, இலங்கையில் இருந்து பணியாளர்களை எதிர்ப்பார்க்கிறது என 'த சைனா போஸ்ட்' செய்தித்தாள் தகவல் வெளியிட்டுள்ளது.

தாய்வானின் நிறுவனங்கள் அடுத்த ஆண்டில் இலங்கையில் இருந்து பணியாளர்களை எதிர்ப்பார்க்கின்றன என்றும் 'சைனா போஸ்ட்' தெரிவித்துள்ளது. இதற்கு இரண்டு நாடுகளுக்கும் இடையிலான விசா உட்பட்ட பல தடைகள் நிவர்த்தி செய்யப்படவுள்ளன எனவும் அந்தச் செய்தித்தாள் குறிப்பிட்டுள்ளது.

தாய்வானில் தற்போது பிலிப்பைன்ஸ், தாய்லாந்து போன்ற நாடுகளின் பணியாளர்கள் பணியாற்றி வருகின்றனர். இந்தநிலையில் 4 இலட்சத்துக்கும் அதிகமான வெளிநாட்டவர்களுக்கு தாய்வானில் வேலைவாய்ப்பு உள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# எனது அரசியல் வாழ்க்கையை படுகொலை செய்ய சதித் திட்டம்

## சஜித் பிரேமதாஸ குமுறல்



"ஐக்கிய தேசியக் கட்சி எனது அரசியல் வாழ்க்கையைப் படுகொலை செய்யக் கூடாது" என அக்கட்சியின் பிரதித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

தம்மை தென் மாகாண சபை முதலமைச்சர் வேட்பாளராக நிறுத்துவது தொடர்பாக ஐக்கிய தேசியக் கட்சி எடுத்து வரும் முனைப்புகள் குறித்தும் அவர் சீற்றமடைந்துள்ளார்.

இதுதொடர்பில் சஜித் பிரேமதாஸ அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார். அதில், கட்சியின் பிரதித் தலைவரான தம்மை தென்மாகாண சபைக்கான முதலமைச்சர் வேட்பாளராக எவ்வாறு தேர்ந்தெடுக்க முடியும் என்று அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

ஏற்கனவே தாம் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடப் போவதாக சஜித் பிரேமதாஸ அறிவித்திருந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## முஸ்லிம் காங்கிரஸின் தீர்மானம் கி.மா. சபையின் ஒளிக்கீற்று...

அரசமைப்புக்கான பதின்மூன்றாவது திருத்தத்தை வலுப்படுத்த வேண்டும்-என்று கோரும் தீர்மானம் கிழக்கு மாகாண சபையில் நேற்று முன்தினம் (ஒக்ரோபர் முதலாம் திகதி) பதினைந்து மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

பதின்மூன்றாவது திருத்தம் குறித்த விவகாரம் நீதிமன்றத்தில் இருப்பதால் அது குறித்துச் சபையில் விவாதிக்க முடியாது என்று முதலமைச்சர் நஜீப் அப்துல் மஜீத் எதிர்ப்புத் தெரிவித்த போதிலும்-

முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்கள் சேர்ந்து, ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்களின் ஆதரவுடன் "பதின்மூன்றை" வலுப்படுத்தும் தீர்மானம் பதினைந்து மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது.

தனிநபர் பிரேரணையாக நிறைவேற்றப்பட்டதால் அதனைப் பொருட்படுத்தத் தேவையில்லை; அதற்கு வலு இல்லை என்ற வாதங்கள் இனவாத சக்திகளிடம் இருந்து அலைபோல் உயர்ந்து எழும் என்று தப்பாது எதிர்பார்க்கலாம்.

கிழக்கு மாகாண சபையில் நிறைவேற்றப்பட்ட தனிநபர் பிரேரணை பதினைந்து மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டமையால் அதற்கு ஓர் வலு உண்டு என்பது ஒரு புறமிருக்க-

சபையில் அங்கம் வகிக்கும் முஸ்லிம், தமிழ் உறுப்பினர்கள், இரண்டு சிறுபான்மை இனங்களைப் பிரதிநிதித்துவம் செய்கிறார்கள் என்பதனைக் கருத்தில்-கணக்கில்-கொள்ளாதிருக்க இடமில்லை. நாட்டின் சிறுபான்மை இன மக்களான தமிழர், முஸ்லிம்களின் அரசியல் நலன்களுக்கு ஊறு விளைவிக்கக்கூடாது என்ற கருவுடனேயே ஜே. ஆர்.-ராஜீவ் ஒப்பந்தத்தின் கீழ் மாகாண சபைகள் நிறுவப்பட்டன.

இணைந்த வடக்கு-கிழக்கு மாகாண சபை எண்பதுகளில் உருவாக்கப்பட்டது. அந்த இறுக்கத்தை கத்தி கொண்டு வெட்டுவதில் பதவியில் இருந்த அரசு சூழ்ச்சி செய்து வென்றது.

அதனை நடைமுறைப்படுத்துவதற்கு நீதிமன்றமும் 2006 ஆம் ஆண்டில் கை கொடுத்தது. தொடர்ந்து 2007ஆம் ஆண்டில் வடக்கு, கிழக்கு மாகாணங்கள் பிரிக்கப்பட்டன.

அதனை ருசித்து உள்வாங்கிய இனவாதக் கட்சிகள், அரசமைப்புச் சட்டத்துக்கான பதின்மூன்றாவது திருத்தத்தில் மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்ட காணி, பொலிஸ் அதிகாரங்களை ஏப்பமிடவும் தலைகீழாக நிற்கின்றன. நீதிமன்ற உதவியையும் நாடுவதில் அதீத அக்கறையுடன் செயற்படுகின்றன.

வடக்கு - கிழக்குப் பிரிப்பில் தமிழ், முஸ்லிம் சிறுபான்மை இன மக்களிடையே குரோதத்தை உண்டாக்கும் உள்நோக்கமும் மிகப் பெரிய அளவில் அடர்ந்து ஊறியிருந்தது என்பது இரகசியமல்ல!

மேலும், அரசமைப்புக்கான (ராஜீவ்-ஜே.ஆர். ஒப்பந்தத்தின் பிரகாரம் உருவாக்கப்பட்ட) பதின்மூன்றாவது திருத்தத்தை முற்றாக ஒழிக்கும் திட்டம் ஒன்று, அரசுடன் ஒட்டிக்கொண்டிருக்கும் இனவாதக் கட்சிகளால் உசிப்பி விடப்பட்டிருப்பதும் தெரிந்ததே.

அந்த முயற்சி- நிலைப்பாடு- தவறு என்று கடந்த ஆண்டு ஆரம்பத்திலேயே முஸ்லிம் காங்கிரஸ் உத்தியோகபூர்வமாக அறிவித்திருந்தது. ஆனால் அரச தரப்பும், அதன் இனவாதக் கூட்டாளிகளும் அதற்குக் காது கொடுத்ததாக இல்லை.

இத்தகைய நிலையில், அரசமைப்புக்கான பதின்மூன்றாவது திருத்தத்தை முற்றாக நீக்கும் சூழ்ச்சி குறித்து, தேசிய மட்டத்திலான கலந்துரையாடல் அவசியம் என்றும் முஸ்லிம் காங்கிரஸ் வலியுறுத்தி இருந்தது.

அதன் பொருட்டான ஒவ்வாமையினால், தனது நிலைப்பாட்டை ஒரு வகையில் பகிரங்கப்படுத்தும் உத்தியாகவே, கிழக்கு மாகாண சபையில் முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தனிநபர் பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டது. அது அறுதிப் பெரும்பான்மையுடன் நிறைவேற்றப்பட்டிருக்கிறது.


இந்த ஜனநாயக ரீதியிலான வெளிப்பாட்டை அரசும் அதன் (இனவாத) தோழமைக் "கூட்டங்களும்" சீரணிக்கின்றனவா என்பதனைப் பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும்.

இந்த நாட்டில், ஜனநாயக உரிமைகளுக்கு முன்னுரிமை வழங்குவதனை விடுத்து, இனவாதத்துக்கே மேலுரிமை உண்டு என்பது பல வகைகளிலும் முன்னிறுத்தப்படுகிறது.

அரசமைப்புக்கான பதின்மூன்றாவது திருத்தத்தின் தலைவிதியை நாடாளுமன்றத் தெரிவுக் குழுவே தீர்மானிக்கும் என்ற அரச தரப்பின் நிலைப்பாடு, நீறுபூத்த நெருப்பாகக் கனன்று கொண்டிருக்கும் வேளையில்-

கிழக்கு மாகாண சபையில் முஸ்லிம் காங்கிரஸ் சார்பில் தனிநபர் பிரேரணை நிறைவேற்றி உள்ளமை அரசுக்கு ஒரு சமிக்ஞை. அரசியல் அதிகாரப் பரவலில் கைவைக்கக் கூடாது என்பதனை மறைமுகமாகச் சொல்லும் புதிய உத்தி என்றும் இதனைக் கொள்ளலாம்...!

# தேர்தல் வெற்றியின் பின்னர் கட்டவிழ்ந்துள்ள வன்முறைகள்



விஷ்ணு

தேர்தலுக்குப் பின்னரான வன்முறைகள் வடக்கில் தொடர்ந்து கொண்டே இருக்கின்றன. இடம்பெற்ற வன்முறைகள் அனைத்தும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆதரவாளர்கள் மீதே நடத்தப்பட்டுள்ளன. முகமூடி அணிந்து வந்து வீதிகளிலும், ஆள்கள் இல்லாத இடங்களிலும் வைத்துத் தாக்குவது மாறி, தற்போது நேரடியாகவே வீடுகளுக்குச் சென்று தாக்குதல் நடத்துமளவுக்கு தாக்குதலாளிகள் முன்னேறியுள்ளனர், வளர்க்கப்பட்டுள்ளனர். இவர்களின் இந்த அநாகரிகச் செயலுக்கு ஏதோவொரு வகையில் அதிகாரத் தரப்புக்களும் துணை நிற்பதனையே வன்முறைச் சம்பவங்கள் எடுத்துக் காட்டுகின்றன.

தேர்தலுக்கு முன்னரான காலத்திலும் பலதரப்பட்ட வன்முறைச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. அவைதமிழ்த்தேசியக் கூட்டமைப்பு வேட்பாளர்களுக்கு ஆதரவாகப் பிரசாரம் செய்தவர்கள் மீதானதாக அமைந்திருந்தன. எழுதுமட்டுவாழில் தனது ஆதரவாளர்கள் மீது சிவில் உடை தரித்தவர்கள் தடியடிப் பிரயோகம் செய்ததோடு வாகனங்களையும் அடித்து நொருக்கிய பின்னர் இராணுவ முகாமுக்குள் சென்றுவிட்டனர் என்று மாகாணசபை உறுப் பினர் சயந்தன் தெரிவித்திருந்தார். இந்தச் சம்பவம் உட்பட பல இடங்களில் இந்த வன்முறைகள் பதிவாகியிருக்கின்றன.

### வடக்கில் தேர்தலுக்குப் பின்னரான வன்முறைகள்


பல இடங்களில் பொதுமக்கள் அச்சுறுத்தப்படுகின்றனர். ஆனைக்கோட்டையில் வர்த்தகர் ஒருவரின் மண்டையைப் பிளந்துள்ளனர். அவர் இன்றும் வைத்தியசாலையிலேயே உள்ளார். ஊர்காவற்றுறையில் பல இடங்களிலும் பொதுமக்களின் வீடுகள் மீது தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன. கச்சாயில் மோட்டார் சைக்கிளில் சென்ற இளைஞர் ஒருவர் மீது தாக்குதல் மேற்கொள்ளப்படவிருந்த நிலையில் அவர் மோட்டார் சைக்கிளைப் போட்டுவிட்டு தப்பி ஓடியதனால் அவர் உயிர் பிழைத்துக் கொண்டார். ஆனால் அவரது மோட்டார் சைக்கிள் தீ வைத்துக் கொளுத்தப்பட்டது. இது போன்ற சம்பவங்கள் சுன்னாகம், அராலி, சாவகச்சேரி எனப் பல இடங்களில் நடந்தேறியுள்ளன. பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ள சம்பவங்களே இவை. இதன் ஓர் உச்சக் கட்டமாக மல்லாகத்தில் சனசமூக நிலையம் ஒன்றின் மீது கைக்குண்டு வீச்சு நடத்தப்பட்டதைக் குறிப்பிடலாம். இங்கு இராணுவத்தைச் சேர்ந்தவர்களே கைக்குண்டு வீசியதாக பொதுமக்களால் கூறப்பட்டது. அதனுடன் சேர்ந்து இயங்கும் ஒட்டுக்குழுக்களும் முன்னரைப் போல இவற்றைச் சட்டவிரோ தமாக வைத்திருந்து தேவைப்படும் போதெல்லாம் பயன்படுத்தக்கூடும்.

> "நெல்லியடியில் இராணுவத்தினர், பொலிஸார் மீதே தாக்குதல் நடத்தியிருந்தும் அவர்களுக்கு எதிராகப் அரசு எந்த நடவடிக்கையும் எடுத்திருக்கவில்லை. இவ்வாறான செயற்பாடுகளை தடுத்து நிறுத்துவது, சட்ட நடவடிக்கை எடுப்பது தமது பொறுப்பு என்பதனை அரசு உணர்ந்து செயற்படவேண்டும்.

### விரக்தியின் பிரதிபலிப்பு

ஆக, தோல்வியை ஏற்றுக் கொள்ள முடியாதவர்களின் அநாகரிகச் செயலாகவே இதனை நோக்கமுடியும். தமிழர் தாயகத்தில் அரசாங்கத் தரப்பை வெற்றியடையச் செய்யவேண்டும் என்ற நோக்கில் செயற்பட்ட இராணுவமும் ஒட்டுக் குழுத் தரப்புகளும் அரசாங்கக் கட்சியும் தேர்தலில் தாம் வெற்றிபெறுவோம் என்ற நப்பாசையில் இருந்தன. அரசாங்கத்தை வெற்றி பெறச் செய்ய வேண்டும் என்ற நோக்கில் அரசாங்கம்தான் ஆட்சியைக் கைப்பற்றும் என்று நம்பி, தமிழ் மக்கள் எதிரியாகக் கருதும் இராணுவத்துடன் சேர்ந்து செயற்பட்ட அரச வேட்பாளர்களும், தமது பிரசாரத்துக்காக இராணுவத்தைக் பயன்படுத்திய வேட்பாளர்களும் தம்மைப்போல சுயநலம் கொண்ட, தன்மானத்தை விற்றுப் பிழைப்பவர்கள் அல்ல தமிழ் மக்கள் என்பதனை தற்போது உணர்ந்திருப்பர். தேர்தல் காலத்தில் அரசாங்கத்துடன் இணைந்து போட்டியிட்ட சட்டத்தரணியொருவர் பல இடங்களில் சட்டவிரோதநடவடிக்கையில்ஈடுபட்டிருந்தார். நீதிமன்றில் வாய்கிழியக் கத்தும் அவர் சட்டம், நீதி பற்றி இனி எந்த முகத்துடன் அதனைக் கதைப்பார்? அப்படிக் கதைப்பது எந்தளவுக்கு சாத்தியமாகும்? தோல்வி அடைந்தவர்களின் நிலை இவ்வாறுதான் உள்ளது. மக்கள் முன்பாக எந்த முகத்துடன் நடமாடுவது என்பது அவர்களின் பிரச்சினை. சங்கடம் வேறு. அதனாலேயே கூட்டமைப்புக்கு ஆதரவாகச் செயற்பட்டவர்கள் மீது தமது வெறித்தனத்தை அவ்வப்போது காட்டி வருகின்றனர். அவர்கள் தமது தோல்விக்கான காரணத்தைப் பற்றிச் சிந்திக் கப்போவதில்லை. ஏனெனில் போட்டியிட்டவர்களில் சிலர் தமது சொத்துக்களைப் பாதுகாக்கவும், அவற்றை மேலும் வளர்ப்பதனையுமே தமது குறிக்கோளாகக் கொண்டவர்கள். மற்றும் சிலர் அரசாங்கத்தின் தூண்டுதலினால் தமிழ் மக்களின் வாக்குகளைச் சிதறடிக்கவென்றே களமிறக்கப்பட்டவர்கள்.

2009 இல் யுத்தம் முடிவுக்குக் கொண்டு வரப்பட்ட பின்னர் 4 வருடங்களாக வெடிக்காத குண்டுகள் தேர்தல் முடிவடைந்த கையோடு வெடிக்கின்றன என்றால் அதற்கு யார் காரணம்? தமிழ் மக்களைப் பயப்பீதியில் வைத்திருக்க பாதுகாப்புத் தரப்பினரே இவற்றுடன் நேரடியாகத் தொடர்புபட்டிருக்கின்றனர் என்று குற்றஞ் சாட்டியுள்ள நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிரேமச்சந்திரன். ஒட்டுக்குழுக்களும் இதில் பெரியளவில் சம்பந்தப்பட்டிருக்கின்றன என்று தெரிவித்துள்ளார். இந்தத் தாக்குதலாளிகளை எங்கள் இளைஞர்கள் திருப்பித் தாக்கினால் நிலைமை என்னவாகும் என்பதனை அரசாங்கம் புரிந்து கொள்ள வேண்டும். முன்னரைப் போன்று கலவரங்களை நடத்த அரசாங்கம் எதிர்பார்க்கிறதா? என்றும் அவர் கேள்வி யெழுப்பியுள்ளார். நெல்லியடியில் இராணுவத்தினர், பொலிஸார் மீதே தாக்குதல் நடத்தியிருந்தும் அவர்களுக்கு எதிராகப் அரசு எந்த நடவடிக்கையும் எடுத்திருக்கவில்லை. இவ்வாறான செயற்பாடுகளை தடுத்து நிறுத்துவது, சட்டநடவடிக்கை எடுப்பது தமது பொறுப்பு என்பதனை அரசு உணர்ந்து செயற்படவேண்டும். இந்த அராஜகங்கள் தடுத்து நிறுத்தப்படவேண்டும் என்பதே அனைவரினதும் எதிர்பார்ப்பாகும்.



# மறையும் நம்பிக்கைக் கீற்று

இலங்கையில், "மாகாண சபைகளுக்கு காணி அதிகாரம், பொலிஸ் அதிகாரம் கிடையாது" என்று அறிவித்திருக்கிறது அரசு. போருக்குப் பின் அங்கு நிரந்தரமான அமைதி ஏற்பட சர்வதேச சமூகம் குறிப்பாக இந்தியா - தொடர்ந்து வலியுறுத்தி வந்த விஷயம் அதிகாரப் பகிர்வு.

இலங்கைப் பிரச்சினையில் ஆரம்பம் முதலே, மாகாணங்கள் பிரிக்கப்பட வேண்டும் என்றும், அவற்றுக்கு அதிகாரங்கள் பிரித்தளிக்கப்பட வேண்டும் என்றும் இந்தியா தீர்வை முன் வைத்து வருகிறது. இந்தியாவின் ஆலோசனைப்படி, மாகாணங்கள் பிரிக்கப்பட்டன; ஆனால், அதிகாரங்கள் பிரித்தளிக்கப்படவில்லை.

போருக்குப் பின், அதிகாரங்களைப் பகிர்ந்தளிக்க வகைசெய்யும் 13-வது சட்டத் திருத்தத்தை முடக்கும் முயற்சிகளும் தொடங்கின. இந்தியா அதற்கு எதிராகத் தொடர்ந்து அழுத்தம் கொடுத்து வந்தது.

வடக்கு மாகாண சபைத் தேர்தல் அறிவிக்கப்பட்டபோதுகூட, இந்தியா வந்திருந்த அமைச்சர் பசில் ராஜபக்ஷ விடமும், மாகாணங்களுக்கு அதிகாரங்களைப் பகிர்ந்தளிக்கும் அரசியலமைப்பின் சரத்துகளை முழுமையாக அமுல்படுத்துவதோடு, அவற்றுக்கு அப்பாலும் சென்று அர்த்தமுள்ள மேம்பாட்டை ஏற்படுத்த வேண்டும் என்று வலியுறுத்தினார் வெளியுறவு அமைச்சர் சல்மான் குர்ஷித்.

தேர்தல் வெற்றிக்குப் பின்னர், காணி அதிகாரம், பொலிஸ் அதிகாரம் இரண்டும் மாகாண அரசிடம் ஒப்படைக்கப்பட வேண்டும் என்பதையே பிரதானமாக வலியுறுத்தி வந்தனர். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரும் அதன் முதல்வர் வேட்பாளரான சி.வி. விக்னேஸ்வரனும். இலங்கை அரசின் அறிவிப்பு அனைத்துத் தரப்பினரையும் ஏமாற்றியிருக்கிறது என்கின்றனர் அவர்.

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், "இலங்கையிலுள்ள தேசியப் பிரச்சினைக்கு காணி அதிகாரம் ஓர் அடிப்படைக் காரணமாக அமைந்துள்ளது என்று கூறியிருப்பது இந்த நேரத்தில் மிகுந்த முக்கியத்துவம் பெறுகிறது.

> இலங்கைப் பிரச்சினையில் ஆரம்பம் முதலே, மாகாணங்கள் பிரிக்கப்பட வேண்டும் என்றும் அவற்றுக்கு அதிகாரங்கள் பிரித்தளிக்கப்பட வேண் டும் என்றும் இந்தியா தீர்வை முன் வைத்து வருகிறது. இந்தியாவின் ஆலோசனைப்படி, மாகாணங்கள் பிரிக்கப்பட்டன; ஆனால், அதிகாரங்கள் பிரித்தளிக்கப்படவில்லை.

அதிகாரமற்ற மாகாண அரசின் ஆட்சிக்கு ஏற்கெனவே இலங்கையில், கிழக்கு மாகாணம் ஓர் உதாரணமாக இருக்கிறது. இதுவரை மாகாண அரசுகளால் அங்குள்ள மக்களின் வாழ்வில் எந்த மாற்றத்தையும் கொண்டுவர முடியவில்லை.

இப்போது அதிபர் ராஜபக்ஷவின் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அங்கு ஆட்சியில் இருக்கிறது. இந்த ஆட்சியாலும் ஓராண்டில் மக்களின் எதிர்பார்ப்புகளுக்கு ஏற்பச் செயல்பட முடியவில்லை. எதிர்க்கட்சிகள் மட்டும் அல்ல; கூட்டணிக் கட்சியான - ஆட்சியில் இரு அமைச்சர்களைக் கொண்டிருக்கும் - இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த அன்வரே, தற்போதைய ஆட்சி பொம்மை ஆட்சி என்று கூறுகிறார்.

இப்படிப்பட்ட மாகாண அரசுகளைத் தான் இலங்கை அரசு விரும்புகிறது என்றால், அங்கு தேர்தல்கள் தேவை இல்லையே?

கால் நூற்றாண்டுக்குப் பின் வடக்கு மாகாணத்தில் மாகாணசபைத் தேர்தலைத் தமது அரசு நடத்தியதையே அரசின் வெற்றியாகக் கொண்டாடுகிறார் அதிபர் ராஜபக்ஷ. உண்மையான வெற்றி மாகாணங்களின் சுதந்திரமான செயல்பாட்டில் தான் இருக்கிறது என்பதை அவர் புரிந்து கொள்ள வேண்டும்!

THE HINDU

ஆசிரிய தலையங்கம் விமர்சிப்பு

## புவி வெப்பமடைய காரணம் மனிதனின் செயற்பாடே



துருவப் பனிப்படலம் உருகுவதால் கடல் மட்டம் அதிகரிக்கிறது. தற்போது புவி வெப்பமடைந்து வருவதற்கு மனிதச் செயற்பாடுகள் காரணம் என்பது முன்னரை விடத் தற்போது உறுதியாகத் தெரிவதாக ஐ.நா. விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.


மாறிவரும் உலகப் பருவநிலை தொடர்பான சர்வதேச நிபுணர் குழு வெளியிட்டுள்ள புதிய அறிக்கையில், புவி வெப்பமடைந்து வருவதற்கான முக்கியக் காரணம் மனிதச் செயற்பாடுகள்தான் என்பது விஞ்ஞானிகளுக்கு 95 வீதம் உறுதியாகத் தெரிவதாகக் கூறப்பட்டுள்ளது.

இந்த நூற்றாண்டின் கடைசியில் உலகக் கடல் மட்டம் தற்போது உள்ள அளவிலிருந்து 82 சென்ரி மீற்றர் உயரலாம் என்று விஞ்ஞானிகள் எச்சரிக்கின்றனர்.

புவி வெப்பமடைவதைக் கட்டுப்படுத்துவது தொடர்பாக சட்டரீதியான உடன்பாடு ஒன்றை எட்டுவதற்கு அரசாங்கங்கள் முயன்றுவரும் நிலையில், விஞ்ஞானிகளின் இந்த அறிக்கை மிகவும் அவசியமானது என ஐ.நா. தலைமைச் செயலர் பான் கீ மூன் இந்த நிபுணர் குழுவுக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

உலகப் பருவநிலை தொடர்பான ஐநா உச்சிமாநாடு ஒன்றை அடுத்த வருடத்தில் தான் கூட்டப்போவதாகவும் அவர் கூறியுள்ளார்.

புவியின் சராசரி வெப்பநிலைஇரண்டு பாகை செல்ஷியஸுக் கும் கூடுதலாக அதிகரிக்காமல் பார்த்துக்கொள்வதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுக்க அரசாங்கங்களை சம்மதிக்க வைப்பதென்பது இந்த மாநாட்டின் இலட்சியமாக இருக்கும் என அவர் தெரிவித்தார்.



# முதுமையின் திறவுகோல்

த.கிருபாகரன்,
அத்தியட்சகர்,
அரச முதியோர்
இல்லம் , கைதடி.



முதியோர் வாரத்தின் மூன்றாவது நாளில் முழுமதியான எண்ணங்களுடன் உள மேம்பாட்டுடன் சுகமாக முதுமையடைதலின் இன்னொரு பாதையைப் பார்ப்பது பயனுள்ளதாக அமையப் போகின்றது என்ற எண்ணத்தில் எண்ணப் பகிர்வுகளுக்காக விடுக்கும் அன்பான அழைப்புடன் இணைந்து கொள்கின்றேன்.

அனைவருக்கும் மகிழ்வாக இருப்பதற்கு விருப்பம் இருக்கின்றது. சூழலின் ஆதிக்கம் இந்த மகிழ்ச்சியில் நெகிழ்ச்சியை ஏற்படுத்தி எல்லைக் கோடுகளைப் போட்டு விடுகின்றது. அனைத்து மனிதர்களுக்கும் குடும்பம் இருக்கின்றது. இந்தக் குடும்பத்தின் கோலங்கள் அலங்கோலங்களாக மாறும்போது அளப்பரிய விபரீதங்கள் ஏற்படுகின்றன. இந்தத் தாற்பரியத்தின் உருக்குலைவுகள் தனிநபரைப் பாதிக்கின்றது. பாதிக்கப்பட்டு, துன்பங்களை இருப்பாக்கிக் கொண்ட மனிதன் தனது நிலையையும் மோசமாக்கி சுற்றியலையும் நாசமாக்கி விடுகின்றான்.

மனிதத்தைப் புனிதமாக்கும் கனிவான பயணத்தில் தாண்டப்போகும் ஒவ்வொரு மைல்க்கல்லும், பிரமாண்டமாகத் தான் இருக்கப் போகின்றன. குடும்பத்தில் ஆணாதிக்கம், பெண்ணாதிக்கம் குடும்ப முகாமையில் செல்வாக்குச் செலுத்துகின்றது. முன்னைய குடும்பங்களில், கூட்டுக் குடும்ப வாழ்வியலில் முதியவர்கள் செல்வாக்கு மிக்கவராக இருந்தனர். ஆலோசனை பெறுவதற்கும், தீர்வுகளை முன் வைப்பதற்கும் இவர்கள் துணைநின்றார்கள். பெரிய சிக்கல்களைக் கூடத் தமது அநுபவபட்டறிவு மூலம் தீர்க்கும் வல்லமை இவர்களிடம் இருந்தது. இன்று திருமணத்தின் பின் அல்லது திருமணத்தன்றே பிரச்சினைகள் தோன்றி விவாகரத்தில் முடிகின்றது.

திருமணமாகியபின் பிள்ளைகள் தங்கள் பெற்றோரைப் பராமரிப்பது மிகுந்த சவாலாகியுள்ளது. தனது பெற்றோரை அல்லது மனைவியின் பெற்றோரைப் பராமரிப்பதற்கு முடியாமல் உள்ளது. பொருளாதார உயர்ச்சிகளும், நவீன தொழில்நுட்ப வளர்ச்சியும் இதற்கு முட்டுக் கட்டைகளாக உள்ளன. நாகரிகத்தின் ஆதிக்கமும் வருமானத் தேடலின் அவசியமும் முன்னகர்ந்துள்ள நிலையில் இவற்றை எட்டிப் பிடித்து ஓடுவதற்கு மனிதன் தயாராக வேண்டி ஏற்பட்டு விட்டது. மனிதாபிமானம் என்பதெல்லாம் தேட வேண்டிய பட்டியலில் இணைந்து விட்டது. சுயநலம் மட்டும் முன்னால் வழிவிட்டு நிற்கின்றது. எனவே மனிதனின் ஓட்டமும், ஆட்டமும் நவீனமாக்கப்பட்டு இயந்திரத் தன்மையான நிலையில் ஓடத்தொடங்கி விட்டன. இந்த அதிர்வு களில் பூமியும் சுழல்கின்றது.

இதயம் மட்டும் துடித்துக் கொள்கின்றது.மற்றைய மனிதச் செய்கைகள் எல்லாம் செயற்கையாக்கப்பட்டு விட்டன. இந்த நிலையில் முதியோர்கள் பிள்ளைப் பராமரிப்பிற்கும், வீட்டு வேலைகளுக்கும், வீட்டின் பாதுகாப்புக்கும் மட்டும் தேவைப்படுகின்றார்கள். இத்தகைய நிலையில் முதியோர்கள் பதவியிறக்கத்துடன் துன்பப்படுதல் என்பது பொருத்தமில்லை. யதார்த்தத்தைப் புரிந்து கொண்டு சிந்திப்பதுதான் வழியாக அமையும். முதுமையில் குடும்பத்துடன் இணைந்த வாழ்வுதான் மகிழ்வானதாக இருக்கும் என்பது நிரூபிக்கப்பட்ட கருத்தாகும். அந்த வகையில் குடும்பத்தில் கருத்து மோதல்கள், போர்

> "நான் வீட்டுக்குச் செல்லும்போது எனது மனைவி தும்புத்தடியைப் பிடித்திருக்கும் முறையைப் பார்த்துத்தான் நான் தேநீர் தரும்படி கேட்பேன்" என எனது நண்பர் ஒருவர் கூறியது ஞாபகம்வருகின்றது. "சமாளிப்பு" என்பதை அடங்கிப்போன அடிமையின் அறிகுறியாக எண்ண வேண்டியதில்லை. அது கூட ஒரு வகையான நடிப்புத்தான்.

நிறுத்த உடன்படிக்கைகள் கைச்சாத்திட்டு முடிவுகள் எட்டப்படவேண்டும். கணவன் மனைவிக்கு இடையேயான முறுகல் நிலைகள், இடைவெளிகள், மதிப்புக் கொடுக்காத தன்மைகள் முற்றுப் புள்ளிகளாக முடியாவிட்டாலும் காற்புள்ளிகளாகவேனும் மாறப்பட வேண்டும். குடும்பச் சண்டைகளின் உச்ச நிலை முதுமைக்கு மிகுந்த சவாலானது.

"நான் வீட்டுக்குச் செல்லும்போது எனது மனைவி தும்புத்தடியைப் பிடித்திருக்கும் முறையைப் பார்த்துத்தான் நான் தேநீர் தரும்படி கேட்பேன்" என எனது நண்பர் ஒருவர் கூறியது ஞாபகம் வருகின்றது."சமாளிப்பு" என்பதை அடங்கிப்போன அடிமையின் அறிகுறியாக எண்ண வேண்டியதில்லை. அது கூட ஒரு வகையான நடிப்புத்தான். நடிக்கவெனப் பூமிக்கு வந்த மனிதர்கள் பல வேடங்களை ஏற்று நடிக்கின்றோம். ஒவ்வொரு வேடத்தி லும் கனகச்சிதமாக நடிப்பது என்பது அனைவருக்கும் முடியாத ஒன்றாக இருக்கலாம்.

ஆனால் முதுமையின் கொடுமையை நாம் அனுபவிக்கும்போது பார்ப்பவர்கள் திட்டித் தீர்ப்பார்கள். 'கரும வினைகளுக்கு உத்தரிக்கின்றார் பார்' என்பார்கள். இவ்வாறு வார்த்தைகள் ஒவ்வொன்றும் துப்பாக்கி ரவைகளாகப் பாய்ந்து மாறாத வலியை ஏற்படுத்தும். இதைத் தெரிந்த பின்பும் சுகமான முதுமையின் தேவை பற்றி உணர்கின்றோம் அல்லவா?

குடும்பத்தில் எவரும் வெல்வதோ, தோற்பதோ இல்லை. இதை உணர்ந்து கொள்ள வேண்டும். குடும்பச் சச்சரவுகள் எல்லாம் நிலையானவையும் அல்ல. யாவும் பிரச்சினைகளும் அற்ப ஆயுளைக் கொண்டவை. அத்தோடு இன்று பிரச்சினையாகத் தெரிவது நாளை பிரச்சினையாகத் தெரியாது. இவை எல்லாம் எல்லோருக்கும் தெரியும். ஆனாலும் பூனை கண்களை மூடிக்கொண்டு பால் குடிப்பது போல பாசாங்கு செய்கின்றோம். சரி! இனியாவது யோசிப்போம் என்கிறீர்களா? உங்களின் நல்ல முடிவை நாங்களும் சமிக்ஞையாக்கிக் கொள்வோம்.



# அரசியல் பிரவேசத்தில் ஆதிக்கம் செலுத்துவது பெண்களே

**தற்போதைய நிலையில் அரசியலில் ஆண்கள் நேரடியாக ஈடுபட்டிருந்தாலும் மறைமுகமாக பெண்களின் ஆதிக்கமே மேலோங்கிக் காணப்படுகின்றது. தற்போதைய இந்திய அரசியலில் இந்த நிலையைக் காண முடிகின்றது.**

இன்றைய காலகட்டத்தில் அரசியல் என்பது இன்று ஆண்களுக்கே உரியது என்ற நிலை காணப்பட்டாலும், அதில் அதிகளவில் மறைமுகமாக ஆதிக்கஞ் செலுத்துவது பெண்களே ஆவர். அரசியலில் ஆண்கள் பிரவேசிப்பதற்கு அடியெடுத்துக் கொடுப்பதிலும் அவர்கள் அரசியலில் நீடித்து நிலைத்து நிற்பதற்கும் பெண்கள் காத்திரமான பங்களிப்புக்களை வழங்கியிருக்கிறார்கள்; வழங்கி வருகிறார்கள்.

வரலாற்றில் மன்னராட்சிக் காலத்தில் அரசிமார் மற்றும் அரசிளங் குமரிமார் வழங்கிய ஆலோசனைகளைக் கேட்டு மன்னர்கள் அரசியலில் சிறந்த முடிவுகளை எடுத்திருக்கிறார்கள். அதேவேளை அவர்கள் சிறந்த ஆட்சியையும் நடத்தியிருக்கிறார்கள். இராமாயணத்தில் கைகேயி, மகாபாரதத்தில் திரௌபதை போன்றோரின் செயற்பாடுகள் அரசியலின் போக்கை மாற்றியமைத்தமையை இங்கு குறிப்பிடலாம். இவ்வாறே எமது நாட்டில் சிறிமாவோ பண்டாரநாயக்கா, இந்தியாவில் இந்திரா காந்தி போன்றோரும் அரசியலில் ஆண்களை விஞ்சும் அளவுக்கு காத்திரமான பணிகளை ஆற்றியிருக்கிறார்கள். இவைதவிர உலகின் பல நாடுகளிலும் குறிப்பிட்ட சில பெண்கள் ஆண்கள் விஞ்சுமளவுக்கு ஆதிக்கம் செலுத்தி வருகிறார்கள்.

தற்போதைய நிலையில் அரசியலில் ஆண்கள் நேரடியாக ஈடுபட்டிருந்தாலும் மறைமுகமாக பெண்களின் ஆதிக்கமே மேலோங்கிக் காணப்படுகின்றது. தற்போதைய இந்திய அரசியலில் இந்த நிலையைக் காண முடிகின்றது.

இன்று பெண்கள் பல்வேறு துறைகளில் வேகமாக முன்னேறி வருகிறார்கள். சில துறைகளில் ஆண்களின் ஆதிக்கத்தையே விஞ்சி நிற்கிறார்கள். காலப்போக் கில் பெண்கள் அரசியலில் நேரடி யாக ஈடுபடும் நிலை அதிகளவில் ஏற்படும். எனவே அரசியல் பிரவேசத்தில் ஆதிக்கம் செலுத்துவது பெண்களே அன்றி ஆண்களல்ல எனக் கூறும் நிலை விரைவில் உருவாகும்.

*ப.சிவானந்தன், இல.65, ஐயனார் வீதி, பருத்தித்துறை.*

# முயற்சியுடன்...

அன்னையின் மடியிலிருந்து - இந்த
பூமியை முத்தமிட்ட நாள் முதல்
இருகால் ஊன்றி நடை பழகி
இன்னல் சுமந்து முதுமை சென்று
எண்காலுடனே செல்லும் இறுதிப் பயணம் வரை
எத்தனை கனவுகளை மனதில் சுமக்கின்றோம்
சிற்பிக்குள் முத்தாக நாம்
மூடிகிடந்தென்ன பயன்
அந்த ஜனனத்தின் வழி பயணிக்கின்றபோது
ஆறாம் அறிவு கொண்டு
வாழ்க்கையை வகுத்திடாதவரை நாம்
கொல்லன் பட்டறையில் இரும்பாக
அடிவாங்கிக் கொண்டே இருப்போம்
வாழ்க்கையெனும் நீரோட்டத்திலே - எத்தனையோ
போராட்டங்கள் எல்லோரிடமும் மலர்கின்றன
சூரியன் பார்க்கும் பனித்துளியாய்- நாம்
முயற்சியெனும் வாள்முனை கொண்டு சவாலை
வென்றிடுவோம்
படைத்தவனும் உயிர் கொடுத்தவனும்- தந்த
பாடுபொருள் நம் மனக்கண்ணைத் திறக்காததால்
மனித விழுமியங்கள் தளர்த்தி குணப்பிறழ்வு
எனும் சிறைக்குள் நாமாக அகப்பட்டு கொள்கிறோம்.

**ரி.சுதர்சன், அராலி வடக்கு, வட்டுக்கோட்டை.**





# படித்ததில் பிடித்தவை

தெரிந்த தொழிலை விட்டவனும் கெட்டான்
தெரியாத தொழிலைத் தொட்டவனும் கெட்டான்

அதிர்ஷ்டம் என்பது வாய்ப்பல்ல...
அயராத உழைப்பே. சரியான சந்தர்ப்பத்தை உழைப்பு சந்திக்கும் தருணமே அதிர்ஷ்டம்

பொய்யான அன்பு பல மகிழ்ச்சிகளைத் தாண்டித் தோற்கும். உண்மையான அன்பு பல சோகங்களைத் தாண்டி வெல்லும்.

வெற்றியின்போது கைதட்டும் பத்து விரல்களை விட சோதனையின்போது கண்ணீரைத் துடைக்கும் ஒரு விரலே உயர்ந்தது.

பேசவேண்டிய நேரங்களில் அமைதியாக இருந்துவிட்டால் அமைதியான நேரங்களில் நிம்மதியாக இருக்க முடியாது

நேற்று – இனி உனக்கு வரப்போவதில்லை
நாளை– உனக்கு வரலாம், வராமலும் போகலாம்
இன்று– உனக்கே உனக்கான நாள். ஒவ்வொரு மணித்துளியிலும் வாழ்ந்துவிடு.

*சிந்து சிவதாஸ், சுதுமலை.*

# நட்சத்திரங்கள்



பனியில் குளிர்ந்த
சூரியப் பொறிகள்....

பருவப் பெண்ணின்
முகப்பருக்கள்...

நிலாவின் அந்தப்புற
காவலாளிகள்...

கடலில் இருந்து தப்பிய
தங்க மீன்கள்

ராத்திரியின்
வியர்வைத் துளிகள்...

வானராஜாவின்
போராளிகள்

உலகம் போர்த்திக் கொள்ளும்
அழகான போர்வை.....

செவ்வாய் பூமிக்கு அனுப்பிய
செய்மதிகள்...

*தமிழ்நிலா, சாவகச்சேரி.*



## விமர்சனம்

நீங்களும் எழுதலாம்....

அரசியல் பிரவேசத்தில் ஆதிக்கம் செலுத்துவது

**ஆண்களா?**
**பெண்களா?**

உங்கள் காரணங்களை விமர்சனப் பகுதியில் முன் வைத்து விமர்சியுங்கள்.

தரமான விமர்சனங்கள் பிரசுரமாகும்.

## இளைஞர், யுவதிகளே!

*உங்களின் திறமைகளை வெளிக்கொணரவும் பிரச்சினைகள் பற்றிப் பேசவும் தேடல்களுக்குத் தீனி போடவும் 'இளவல்கள் வட்டம்' என்ற இந்தப் பகுதி மலர்ந்துள்ளது. இந்தப் பகுதிக்கான உங்கள் படைப்புக்களையும் ஏதாவது சந்தேகங்களையும் விமர்சனங்களையும் கீழேயுள்ள படிவத்தோடு இணைத்து அனுப்பிவையுங்கள்.*

பெயர் :-.........................................................

முகவரி :- .....................................................

.....................................................

.......................... ..........................
திகதி கையொப்பம்

**'இளவல்கள் வட்டம்',**
'உதயன்', 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

## மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காணாத அதிகாரிகள்





முல்லைத்தீவு மாவட்டம் மாந்தை கிழக்கு பிரதேசத்தில் வசிக்கின்ற மக்களுடைய அன்றாடப் பிரச்சினைகளை உரிய திணைக்களங்கள் தீர்த்துவைப்பதில்லையெனக் குற்றம் சாட்டப்படுகின்றது.

மேலும் இந்த மாவட்டத்தில் இயங்கி வருகின்ற மின்சார சபை அலுவலகத்தின் நடவடிக்கைகள் தொடர்பாகப் பல்வேறு தரப்பினரும் குற்றச்சாட்டுகளை நாளாந்தம் சுமத்தி வருகின்றனர். மாந்தை கிழக்கு பாண்டியன்குளம் பகுதியில் உள்ள பிரதான போக்குவரத்துப் பாதைக்கு அருகாமையில் இரண்டு மாதங்களுக்கு முன்னர் மின்கம்பம் ஒன்று வாகனம் மோதியதால் சேதமடைந்திருந்தது.

ஆனால் அதனை மின்சார சபையினர் பார்வையிட்டும் இன்றுவரை சீர் செய்யப்படாமையினால் வீதியால் பயணிக்கும் பொதுமக்கள் மின்னழுத்தத்துக்கு உட்பட நேரலாம் என்ற அச்சத்துடனேயே பயணிக்கின்றனர். இவ்வாறு சேதமடைந்த மின்கம்பத்துக்கு அண்மையில் பிரதேச செயலகம், பிரதேசசபை ஆகியன என்பன அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-6)

# பற்றைக் காடுகளில் கலாசார சீரழிவுகள்

## தடுத்து நிறுத்துவதில் பொலிஸார் தீவிரம்

வவுனியா,ஒக்.3

வவுனியாவில் பல்வேறு இடங்களில் அமைந்துள்ள பற்றைக் காடுகளுக்குள் கலாசார சீர்கேடான நடவடிக்கைகள் இடம்பெறுவதாக பொதுமக்கள் தெரிவித்ததை அடுத்துப் பொலிஸார் தமது ரோந்து நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்தியுள்ளனர்.

இங்குள்ள தவசிக்குளம், கூமாங்குளம், இராசேந்திரம்குளம், கிடாச்சூரி, நெளுக்குளம், கல்நாட்டியகுளம் உட்பட பல்வேறு இடங்களில் விடுமுறை நாள்கள் உட்பட வார நாள்களிலும் பெருமளவு மோட்டார் சைக்கிள், ஓட்டோக்களில் வரும் இளைஞர் கும்பல் மது அருந்திவிட்டு வீதியால் செல்லும் பொதுமக்களிடம் தகாதவார்த்தைப் பிரயோகத்தில் ஈடுபடுகின்றனர்.

அத்துடன் இந்த இடங்களில் கலாசார சீரழிவான செயல்களும் இடம்பெற்று வருவதாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

அண்மையில் வவுனியா பண்டாரிக்குளம் மாடசாமி கோயில் பகுதியில் வைத்து இளைஞர் கும்பல் ஒன்று சிறுமி ஒருத்தியைக் கடத்திய சம்பவத்தை அடுத்து பற்றைப் பகுதியில் நுழைவோர் குறித்து கண்காணிப்பு நடவடிக்கைகளில் பொலிஸார் ஈடுபட்டுள்ளனர்.

மேலும் இத்தகைய கலாசார சீரழிவுகள் குறித்த தகவல்களை உடனுக்குடன் அச்சமின்றித் தெரியப்படுத்துமாறும் பொலிஸார் பொதுமக்களைக் கேட்டுக் கொண்டுள்ளனர். (க-402)

# விதை நெல்லைப் பெறுவதில் விவசாயிகளுக்கு சிரமங்கள்

கிளிநொச்சி, ஒக்.3

கிளிநொச்சி மாவட்டத்தில் காலபோக நெற்ச் செய்கையை மேற்கொள்ளும் விவசாயிகள் தமக்குத் தேவையான தரமான விதை நெல்லைப் பெற்றுக் கொள்வதில் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.



இந்த ஆண்டுக்கான காலபோக நெற்செய்கைக்கான தயார்படுத்தல் வேலைகளில் தற்போது விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர். ஆனால் இவர்கள் தமக்குத் தேவையான விதை நெல்லைப் பெற்றுக் கொள்வதில் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

கடந்த கால போகத்தில் ஏற்பட்ட அழிவுகள் அதன் பின்னர் சிறுபோகச் செய்கையின்போது ஏற்பட்ட நோய்த்தாக்கங்கள் காரணமாக அதிகளவு விவசாயிகள் பாதிக்கப்பட்டனர். இதனால் அவர்களால் தரமான நெல்லை அறுவடைசெய்ய முடியவில்லை.

இந்த நிலையில் இவர்கள் தமக்குரிய விதை நெல்லை அரச பண்ணைகளிலோ அல்லது தனியார் வர்த்தக நிலையங்களிலோ அதிக விலை கொடுத்துப் பெற்றுக்கொள்ள வேண்டிய நிலை காணப்படுகின்றது. உதாரணமாக 40.5 கிலோ எடை கொண்ட ஒரு மூடை நெல்லை 2 ஆயிரத்து 400 ரூபா தொடக்கம் 3 ஆயிரம் ரூபா வரை அதிக விலை கொடுத்துப் பெறவேண்டிய நிலை காணப்படுகின்றது.

எனவே கடன் அடிப்படையில் அல்லது குறைந்த விலையில் விதை நெல்லை விவசாயிகள் பெற்றுக் கொள்ளக் கூடிய சூழ்நிலையை உரிய அதிகாரிகள் ஏற்படுத்தித் தர வேண்டும் என அங்குள்ள விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (க-6)



மீள ஆரம்பிக்கப்பட்டு ஒரு வருடத்தைக் கடந்த போதிலும் சேதமாக்கப்பட்ட பாடசாலைக் கட்டடங்கள் புனரமைக்கப்படாமையால் மரத்தின் கீழ் கற்றல் செயற்பாடுகள் இடம்பெறும் புதுக்குடியிருப்பு றோ.க.த. பாடசாலை. (க-6)

# புனரமைக்கப்படாத வீதியால் மக்களுக்கு பெரும் சிரமம்

கிளிநொச்சி,ஒக்.3

கிளிநொச்சி கண்டாவளைப், பிரதேச செயலர் பிரிவின் கீழ் உள்ள ஊரியான் கிராமத்தில் அமைந்துள்ள பழைய கண்டி வீதி புனரமைக்கப்படாத நிலையில் காணப்படுவதால் இந்த வீதியைப் பயன்படுத்துவோர் தினமும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

ஊரியான் கிராமத்தின் முருகானந்தாக் கல்லூரிச் சந்தியில் இருந்து கோரக்கன்கட்டு தட்டுவன் கொட்டி வரை செல்லும் பழைய கண்டி வீதி, கடந்த 2011 ஆம் ஆண்டு புனரமைப்புக்கெனத் தெரிவு செய்யப்பட்டு ஒப்பந்தகாரரிடம் கையளிக்கப்பட்டது.

புனரமைப்புப் பணிகள் அந்த ஆண்டு ஒகஸ்ட் மாதம் ஆரம்பிக்கப்பட்டன.

ஆனால் குறித்த வீதியின், முருகானந்தாச் சந்தியில் இருந்து கோரக்கன்கட்டு சந்தி வரையான 2.5 கிலோ மீற்றர் நீளமான பகுதிக்கு மாத்திரம் கொங்கிறீட் இடப்பட்டது. ஆனால் அதன் சில பகுதிகளில் வெடிப்புக்கள் ஏற்பட்டுள்ளன.

குறித்த வீதியின் இரு மருங்கிலும் தலா ஒரு அடி அகலத்துக்கு கிரவல் இடவேண்டிய தேவை உள்ள போதிலும் அது நிறைவேற்றப்படவில்லை.

மேலும் புனரமைப்புப் பணிகளும் பூர்த்தியாகாத நிலையில் காணப்படுவதால் விபத்துச் சம்பவங்கள் அடிக்கடி ஏற்பட்டு வருகின்றன.

எனவே அதிகாரிகள் குறித்த வீதியை உரிய முறையில் புனரமைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (க-6)

கிரவல் இடவேண்டிய தேவை உள்ள போதிலும் அது நிறைவேற்றப்படவில்லை.

# 26 கிராமங்களுக்கு குடிதண்ணீர் விநியோகம்

கிளிநொச்சி, ஒக். 3

கிளிநொச்சி கரைச்சிப் பிரதேச சபையினால் தற்போது 26 கிராமங்களுக்கு குடிதண்ணீர் விநி யோகம் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அதன் தவிசாள ரான நா.வை.குகராசா தெரிவித்தார்.

கிளிநொச்சி கரைச்சிப் பிரதேச சபையின் கேட்போர் கூடத்தில் கடந்த 29 ஆம் திகதி இடம் பெற்ற குடிதண்ணீர் விநியோ கம் தொடர்பான கலந்துரை யாடலில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

பாரதிபுரம், மலையாளபுரம், கிருஸ்ணபுரம், கோணாவில், யூனியன் குளம், மணியம்கு ளம் ஆகிய பகுதிகளுக்கும் குடிதண்ணீர் விநியோகம் இடம் பெற்று வருகின்றது. அத்துடன் தட்டுவன்கொட்டி, கல்லாறு, உமையாள்புரம் ஆகிய கிராமங்களுக்கு வருடத்தில் முழு நாளும் குடிதண்ணீர் விநியோகம் மேற்கொள்ள வேண் டியுள்ளது.

இவ்வாறு குடிதண்ணீரை விநி யோகிப்பதில் தினமும் பல்வேறு சிக்கல்களை சபை எதிர் கொள்கின்றது. குறிப்பாக தட்டுவன்கொட்டி, உமையாள்புரம், கல்லாறு ஆகிய கிராமங்களுக்குரிய குடிதண்ணீர் விநியோ கத்துக்கான நிரந்தரமான தீர்வொன்றைக் காணும்போது தான் இந்தப் பகுதிகளின் குடிதண்ணீர்த் தேவையை முழு மையாகப் பூர்த்தி செய்ய முடியும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (க-6)


15ஆம் ஆண்டுநினைவஞ்சலி



மண்ணில் 18 – 08 – 1946

விண்ணில் 03 – 10 – 1998

திருமதி
றெஜினா-மயில்வாகனம்

பதினைந்து ஆண்டுகள் பறந்தோடினாலும்
எமது நெஞ்சை விட்டகலா நீங்காத நினைவில்
என்றும் நாம்.

கணவர், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
உற்றார், உறவினர், நண்பர்கள்.

211, 2ஆம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.

(32246)(5.e)


# பராமரிக்கப்படாத ஐயன்கன் குளம் பொதுச் சந்தை

முல்லைத்தீவு, ஒக். 3

முல்லைத்தீவு மாவட்டம் துணுக் காய் பிரதேச சபைக்குட்பட்ட ஐயன்கன்குளம் பொதுச் சந்தை உரிய வகையில் பராமரிக்கப் படுவதில்லையெனத் தெரிவிக் கப்பட்டுள்ளது.

துணுக்காய் பிரதேச சபையின் கீழ் உள்ள ஐயன்கன் குளம் கிராமத்தில் கடந்த ஆண்டு சந்தைக் கட்டடத் தொகுதி யொன்று நிர்மாணிக்கப்பட்டுத் திறந்து வைக்கப்பட்டது. ஆனால் அதன் செயற்பாடுகள் சீராக இடம்பெறுவதில்லையென வும், உரிய முறைகளில் பராமரிக்கப்படுவதில்லையெனவும் இந்தப் பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

மேலும் இந்தச் சந்தையில் வியாபார நடவடிக்கைகள் சீராக இடம்பெறாததால் இங்கு விளையும் உள்ளூர் மரக்கறி வகைகள் மல்லாவி அல்லது கிளிநொச்சிக்குக் கொண்டு செல்லப்படுவதாகவும் விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர். இந்தச் சந்தை சுமார் 23 லட் சம் ரூபா செலவில் நிர்மாணிக் கப்பட்டு அண்மையில் திறந்து வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (க-6)


முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



சி.பொ.வ.மா.க. முதலியார்
திதி : சதுர்த்தசி

என் கடன் பணிசெய்து கிடப்பதே... என்ற
வாக்குக்கு இணங்க தன் வாழ்நாள் முழுவதும்
பணிசெய்து உயிர் நீத்த
சி.பொ.வ.மா.க. முதலியாரின் ஓராண்டுத்
திதி 03.10.2013 ஆகும்.

கட்டுடை,
மானிப்பாய்.

குடும்பத்தினர்.

(32150) (7.8.3)

## வவுனியாவில் முதியோர் தினவிழா

வவுனியா, ஒக்.3
இன்றுவியாழக்கிழமைவவுனியா கூமாங்குளத்தில் சர்வதேச முதியோர்தின விழா இன்று இடம்பெறவுள்ளது. கூமாங்குளம் சித்தி விநாயகர் ஆலயத்தில் கிராம அலுவலர் துசிதா புஸ்பராஜா தலைமையில் இடம்பெறவிருக்கும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வவுனியா மாவட்ட அரச அதிபர் எம்.கே.பந்துல ஹரிஸ் சந்திராவும், கௌரவ விருந்தினர்களாக வவுனியாபிரதேசசெயலர் கா.உதயராசா, செட்டிகுளம் பிரதேச செயலர் நா.கமலதாசன் ஆகியோரும் கலந்து கொள்வர். சிறப்பு விருந்தினராக வவுனியா மாவட்ட முதியோர் சமாசத்தின் தலைவர் மருத்துவர் க.இராமச்சந்திரனும் கலந்துகொள்வார். (க-402)



சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு இளவாலைப் பொலிஸாரால் இளவாலை பொலிஸ் பகுதிக்கு உட்பட்ட மாணவர்களுக்கு இடையே நேற்று சித்திரப்போட்டி நடத்தப்பட்டது. இளவாலை, புனித ஹென்றியரசர் கல்லூரி மண்டபத்தில் இடம்பெற்ற குறித்த போட்டியில் நூற்றுக்கு மேற்பட்ட மாணவர்கள் கலந்துகொண்டார்கள். இளவாலை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சிந்திக்க என்.பண்டாரவும் அவருடன் இணைந்து பொலிஸாரும் மேற்கொண்ட இந்த நடவடிக்கை பாடசாலை மட்டங்களில் பாராட்டைப் பெற்றுள்ளது. (வ-86)

## ஓய்வூதியம் கிடைக்கவில்லை விவசாயிகள் முறைப்பாடு

வவுனியா, ஒக்.3
வவுனியாவில் கமக்காரர் ஓய்வூதியப் பணம் தமக்குக் கிடைக்கவில்லையென விவசாயிகள் முறையிட்டுள்ளனர். கமக்காரர ஓய்வூதிய சமூக நலன் திட்டத்தின் கீழ் கமநல காப்புறுதிச் சபையிடம் காப்புறுதித் தொகைகளைச் செலுத்திய விவசாயிகள் குறித்த வயதெல்லை கடந்த பின்னரும் தமக்கான ஓய்வூதியம் வழங்கப்படவில்லையெனத் தெரிவித்துள்ளனர்.
இந்தப் பணத்தைப் பெற்றுக் கொள்ள முடியாத விவசாயக் குடும்பங்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரியவருகின்றது.
தேவையான ஆவணங்களை முறைப்படி கையளித்தும் கொடுப்பனவுகள் வழங்கப்படுவதில் தாமதம் காட்டப்படுவதாகவும் விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.
தமது கஷ்டமான நிலையை உணர்ந்து இனியும் தாமதிக்காது தமக்கான ஓய்வூதியத்தை வழங்குமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (க-402)

## மாணவர்களைத் திருடத் தூண்டும் இரும்பு வியாபாரிகள்

யாழ்ப்பாணம், ஒக்.3
வடமராட்சி பகுதியில் இரும்பு வியாபாரிகள் பாடசாலை மாணவர்களைத் திருட்டு முயற்சிகளில் ஈடுபடத் தூண்டுகின்றனரா என்று சந்தேகம் தெரிவிக்கப்படுகிறது.
இது தொடர்பில் தாமும் விசாரணை மேற்கொண்டு வருவதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.
வல்வெட்டித்துறையில் உள்ள மென்பான நிறுவனம் ஒன்றுக்குள் சென்ற பதின்ம வயதுடைய பாடசாலை மாணவர்கள் அங்கிருந்து இரும்பு, பித்தளைப் பாத்திரங்களைத் திருடியுள்ளனர். திருடிய பின்னர் அங்கிருந்து வெளியே தப்பித்த போது அவ்வழியே ரோந்து சென்ற பொலிஸாரிடம் மாணவன் ஒருவன் பிடிபட்டுள்ளான்.



அவனிடம் மேற்கொண்ட விசாரணைகளில் இருந்து குறித்த சம்பவம் தெரியவந்தது.
அதனையடுத்து திருட்டில் ஈடுபட்டதாகக் கூறப்படும் அனைத்து மாணவர்களையும் பொலிஸார் விசாரணை செய்தனர்.
அதனடிப்படையில் வடமராட்சிப் பகுதியில் இரும்பு சேகரிப்பில் ஈடுபட்ட யாழ்.ஐந்து சந்திப் பகுதியைச் சேர்ந்த இரும்பு வியாபாரி ஒருவரைத் தாம் விசாரணைக்கு உட்படுத்தியுள்ளதாகப் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (வ-4)

## ஆலய வீதியில் தீண்டியது பாம்பு

தென்மராட்சி, ஒக்.3
ஆலய வீதியில் நடந்து சென்ற குடும்பஸ்தர் பாம்பினால் கடியுண்டார். இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் செவ்வாய் இரவு சாவகச்சேரி சிவன் கோயிலடியில் இடம்பெற்றது.
அதே இடத்தைச் சேர்ந்த ஐயாத்துரை சசிக்குமார் (வயது-33) என்பவர் பாம்பினால் கடியுண்ட நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். சாவகச்சேரி நகர்ப் பகுதியில் பிடிக்கப்படும் பாம்புகள் சிவன் கோயிலையண்டிய பகுதியில் விடப்படுவதால்அங்குபாம்புகள் நடமாட்டம் அதிகம் காணப்படுவதாகக் கூறப்பட்டது. (ஒ-9)

## மணிவிழா

சுன்னாகம் கிழக்கு மகாமாரி அம்பாள் ஆலய பிரதம குரு சிவஸ்ரீ சர்வேஸ்வர சண்முகானந்தக் குருக்கள், ஸ்ரீமதி கோகுலவாணி அம்மா தம்பதிகளின் மணிவிழாப் பாராட்டு நிகழ்வு இன்று வியாழக்கிழமை மாலை 4 மணிக்கு நடைபெறவுள்ளது. நிகழ்வில் ஓய்வு நிலை அதிபர் சிவஸ்ரீ சி.சிவ சரவண பவன் சிறப் புரையை நிகழ்த்துவார். (ந)

## நிதி ஒதுக்கீடு

சுதுமலை ஈஞ்சடி நாவலர் சனசமூக நிலைய விளையாட்டுக் கழகத்துக்கு தளபாடக் கொள்வனவுக்காக நாடாளுமன்ற உறுப்பினர் அ.விநாயகமூர்த்தி 2013 ஆம் ஆண்டு 50.000 ரூபாவினை வழங்கியுள்ளார். (வ-100)

## மனநிலை பாதிக்கப்பட்ட இளைஞன் காவலூர் நீதிமன்றில் ஒப்படைப்பு

மனநிலை பாதிக்கப்பட்ட நிலை யில் வீதிகளில் அலைந்து திரிந்த இளைஞன் ஒருவரை ஊர்காவற்றுறைப் பொலிஸார் ஊர்காவற்றுறை நீதிமன்றில் முற்படுத்தி தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் சேர்ப்பித்துள்ளனர். அவரது உறவினர்களை நீதிமன்றப் பதிவாளருடன் தொடர்பு கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.
குறித்த இளைஞரை இராணுவத்தினர் பிடித்து பொலிஸாரிடம் ஒப்படைத்ததன் பேரிலேயே நீதிமன்றில் முற்படுத்தப்பட்டார்.
அந்த இளைஞன் தனது பெயர் என்.ஜெயகுமாரன் என்று கூறுகிறார். ஆனால் வேறு எந்த விடயத்தையும் அவர் வெளியிடவில்லை. நீதிமன்றில் நேற்று முன்தினம் முற்படுத்தப்பட்டபோதே அவரை வைத்தியசாலையில் சேர்க்க உத்தரவிடப்பட்டது. (வ-4)

---

தருவது வித்தியா

## இன்றைய நாள்

### உங்களுக்கு எப்படி?

நாளை
புரட்டாதி-18 வெள்ளிக்கிழமை 04.10.2013
திதி: சதுர்த்தசி மு.ப. 07.02 வரை
நட்சத்திரம்: உத்தரம் பி.ப.05.07 வரை
சுபநேரம்: 06.02 - 07.32 வரை
இராகுகாலம்:10.32 - 12.02 வரை


**மேடம்**: ஆரவாரமின்றிச் சில வேலைகளை முடிப்பீர்கள். தன்னம்பிக்கை துளிர்விடும். அரச வேலைகளிலிருந்து வந்த தடைகள் நீங்கும். விருந்தினர்களின் வருகையுண்டு.


**இடபம்**: மனக்குழப்பங்கள் நீங்கும். நம்பிக்கைக்குரியவர்களின் ஆதரவு கிடைக்கும். உத்தியோகத்தில் பணிகளை விரைந்து முடிப்பீர்கள். கோபம் குறையும். வெளியூர்ப் பயணங்கள் மகிழ்ச்சி தரும். மாணவர்களின் எண்ணங்கள் பூர்த்தியாகும்.


**மிதுனம்**: அதிரடியாகச் செயற்பட்டு சில காரியங்களை விரைந்து முடிப்பீர்கள். ஆன்மிகத்தில் நாட்டம் அதிகரிக்கும். வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். அரச காரியங்களில் வெற்றியுண்டு. மாணவர்களின் சிந்தனைத்திறன் அதிகரிக்கும்.


**கடகம்** : சில தினங்களாக முடியாமல் இழுத்தடித்த காரியங்களெல்லாம் இனி முடிவுக்கு வரும். அரச வேலைகளில் அனுகூலமான நிலை காணப்படும். வெளிவட்டாரத் தொடர்பு அதிகரிக்கும். பயணங்கள் மகிழ்ச்சி தரும்.


**சிங்கம்**: மன அமைதியற்ற நிலை ஏற்படும். நீங்கள் எது பேசினாலும் சிலர் தவறாகப் புரிந்து கொள்வார்கள். நீங்களும் சில நேரங்களில் உணர்ச்சிவசப்பட்டு சில வார்த்தைகளைச் சொல்லிவிடுவீர்கள். உத்தியோகத்தில் மற்றவர்களின் வேலையையும் சேர்த்துப் பார்க்க வேண்டி வரும்.


**கன்னி**: எடுத்த வேலையை முடிப்பதற்குள் அலைச்சல் அதிகரிக்கும். பழைய பிரச்சினைக்கு சுமுகமாகத் தீர்வு காண்பது நல்லது. யாருக்காகவும் பிணைக் கையெழுத்திட வேண்டாம். உத்தியோகத்தில் மறைமுக எதிர்ப்புகள் வந்து நீங்கும்.


**துலாம்**: மன உளைச்சல் நீங்கும். கலகலப்பாக சிரித்துப்பேசும் சூழல் அமையும். உத்தியோகத்தில் பணிகளை விரைந்து முடிப்பீர்கள். நட்பு வட்டம் விரிவடையும். மாணவர்களின் நினைவாற்றல் அதிகரிக்கும். முன்கோபம் விலகும்.


**விருச்சிகம்**: ஆடம்பரச் செலவுகளைக் குறைப்பீர்கள். குடும்பத்தினரின் எண்ணங்களைப் பூர்த்தி செய்வீர்கள். மனக்குழப்பங்கள் நீங்கும். சகோதரவகையில் மகிழ்ச்சியுண்டு. அயல் வீட்டாரின் ஆதரவு அதிகரிக்கும்.


**தனுசு**: சோர்வு, அலைச்சல் நீங்கி ஆனந்தமாகக் காணப்படுவீர்கள். பழைய நண்பர்களைச் சந்திப்பீர்கள். அரசியல்வாதிகளின் ஆதரவு கிடைக்கும். பயணங்களால் ஆதாயம் உண்டு.


**மகரம்**: சிலர் உங்களை விமர்சிப்பார்கள். முன்கோபத்தால் நல்லவர்களின் நட்பை இழக்க வேண்டி வரும். உத்தியோகத்தில் மறதியால் பிரச்சினை வந்து நீங்கும்.


**கும்பம்**: நீண்ட நாள் எண்ணங்களைப் பூர்த்தியாக்க முயற்சிப்பீர்கள். பிரியமானவர்களின் சந்திப்பு நிகழும். உத்தியோகத்தில் மன உளைச்சல் நீங்கும். பணிகளை விரைந்து முடிப்பீர்கள். ஆன்மிகத்தில் நாட்டம் அதிகரிக்கும்


**மீனம்**: மன உறுதியுடன் செயற்பட்டு சில வேலைகளை முடிப்பீர்கள். உறவினர்கள், நண்பர்களின் வருகையால் மகிழ்ச்சியுண்டு. வேலையாள்களின் ஆதரவு கிடைக்கும். மாணவர்கள் உற்சாகத்துடன் காணப்படுவார்கள்.

## சுடோக்கு

### எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 9 | | 4 | | 5 | | 8 | 6 |
| | 6 | 3 | 8 | | 2 | 4 | | |
| | | | | 6 | | 2 | | 9 |
| | | 4 | 7 | | | | | |
| 6 | 2 | | | | | | 4 | 7 |
| | | | | | 1 | 3 | | |
| 9 | | 6 | | 5 | | | | |
| | | 7 | 6 | | 8 | 9 | 2 | |
| 2 | 5 | | | | 4 | | 1 | |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 9 | 5 | 8 | 3 | 2 | 6 | 7 | 4 | 1 |
| 6 | 2 | [illegible] | 1 | 4 | 7 | 8 | 5 | 9 |
| 7 | 4 | 1 | 5 | 8 | 9 | 3 | 6 | 2 |
| 3 | 7 | 9 | 6 | 5 | 2 | 1 | 8 | 4 |
| 4 | 6 | 5 | 8 | 3 | 1 | 2 | 9 | 7 |
| 1 | 8 | 2 | 9 | 7 | 4 | 5 | 3 | 6 |
| 5 | 1 | 4 | 2 | 6 | 3 | 9 | 7 | 8 |
| 8 | 9 | 7 | 4 | 1 | 5 | 6 | 2 | 3 |
| 2 | 3 | 5 | 7 | 9 | 8 | 4 | 1 | 5 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலி லும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப் பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப் படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என் பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

# தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை பெறுபேறுகள்

யாழ்ப்பாணம், ஒக்.3
தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை பெறுபேறுகள் நேற்றுமுன் தினம் பரீட்சைத் திணைக் களத்தால் உத்தியோகபூர் வமாக வெளியிடப்பட்டன. அத னடிப் படையில் பாடசாலை அதிபர்களால் அனுப்பி வைக் கப்பட்ட பரீட்சை பெறுகளின் விவரம் வருமாறு:-

**அருணோதயக் கல்லூரி, அள வெட்டி**

உ.கம்ஷாயினி (மாவட்டநிலை 3)-191, ம.லட்சிகன்- 186, சி.அம்சவர்த்தனா-176, ம.மதுஷா-169, ர.திவியன்-169, உ.சதுஸ்ரன்-166, இ.சங்கீதா-164, தி.கேசிகா-162, து.கவிப்பிரி யன்-162, யோ.ஜெசிந்தா-160, இ.ஷதீசன்-160, சி.டேனு ஜன்-160, பு.டினோயினி-159, சே.திசாளினி-156, சி.சினேகா-154, ச.அகல்யா-154.

**கிளிநொச்சி ம.வி**

யோ.கோபிகா- 191(மாவட்ட நிலை 1), சி.பவித்திரன்-183, றொபேட்சன் அபினயா-180, கு.அபிஷன்-179, ச.சுருதி-177, வி.லோஜிகா-174, இ.யுவா ஜினி-174, வி.சிபானுகன்-172, நா.பிரதாபன்-172, உ.சுரே ணுகா-172, ஜெ.கம்சாஜனி-171, உ.ஆனந்தி-169, இ.டிசபத்மன்-169, ர.மதுசாளினி-169, ச.ஜா னுகா-165, செ.ஜெனட்நிருசா-164, டி.சுஸ்மிதா-164, உ.கிசோப் பிரியன்-164, ப.ஜஸ்ரீனா-164, ரா.அபினயா-163, பு.குபேரன் -163, வி.சஞ்சீதா-163, வி.விது சன்-162, கு.டிலக் ஷனா-162, பா.எழில்சாந்-161, தி.லோசன்-160, மு.கஜனிதரன்-160, சி.சஞ்சிகா-159, ப.கயல்விழி-159, சு.யதுர்சிகா-159, சு.சஞ் சிகா-159, வை.தாமிரா-158, சோ.லக்சியா-156, வி.பிரிந் தியா-155, சு.கவினா- 154, பா.தனு சியா-154, ஜோ.துவா ரகா-153.

**நெல்லியடிமெ.மி.த.க.பாடசாலை**

சி.கஜன்-187, சி.சிவானுஜன்-185, சு.மயூர வேணி-184, வி.காவியா-182, நா.ஆகாஷ்-180, ப.அஜானா-176, கே.கேஷிகா-176, த.சந்தோஷ்-175, க.சாகித் தியன்-175, மோ.இந்து - 175, நே.சசிகாந்-172, பா.மனோஜ் -172, சி.விஷ்ணுகா-172, வ.கிரு ஷானி-172, ஜெ.கவிஷ் -172, பி.துசிகரன்-170, த.விருசன்-170, சு.சஞ்சயன்-167, சு.யதுர்ஷா-167, வி.திருநீபன்-166, த.யாகு லன்-165, சி.விதுர்சன்-164, ச.அவந்திகா-163, தி.ஜனனி-162, கி.பிரதீபன்-162, சோ.கிரு ஷன்-158, ஜெ.ஜெயசங்கர்-158, இ.சாயிகீசன்-157, பு.கஜ னிக்கா-155.

**மகாஜனக் கல்லூரி**

ஸ்ரீ.மேணன் -182, க.சோபி ஷன்-179, நி.கீர்த்திகா-172, கி.சரண்யா -170, சி.சிவேதன் -168, செ.சமீரணன்-165, இ.சாமிக்கா- 164, சு.கைலை யன் - 162, ச.சஜினா -162, இ.சஞ்சயன்-162, கே.அட்ஷ யன்-160, ந.வியோஷன்-159, வெ.அனிட்டேவிட்-159, வெ.அபிநயா-157, ச.அட்ஷ யன்-157, அ.சபிஷன் - 156, ஜெ.கிரிலோஜினி - 155, புள்ளி களைப் பெற்றுள்ளார்கள்.

**காரைநகர் கோட்டம்**

ஜீ.வாணி-174 (வலந்தலை வடக்கு அ.மி.த.க.பாடசாலை), உ.செந்தூரன்-174 (ஊரி அ.மி. த.க.பாடசாலை), லி.கஜந் தினி-170 (வலந்தலை வடக்கு அ.மி.த.க.பாடசாலை), தி.எழில் வேந்தன்-168 (தோப்புக் காடு மறைஞான சம்பந்த நாயனார் வித்தி.), த.யதுஷன்-168 (தோப்புக் காடு மறைஞான சம்பந்த நாயனார் வித்தி.), கோ.இனியவன்-167 (காரை மெய்கண்டான் வித்தி.), அ.தன ரூபன்-164 (சுப்பிரமணிய வித்தியாசாலை), ச.தனுசிகா-164 (சுப்பிரமணிய வித்தி யாசாலை), இ.புவிந்தன்-163 (ஊரி.அ.மி.த.க.பாடசாலை), கி.மதுஷன்-163 (ஊரி.அ. மி.த. க.பாடசாலை), க.தர்சிகா-162 (சுப்பிரமணிய வித்தியாசாலை), தி.சசிகரன்-162 (யாழ்ற்ரன் கல்லூரி), ம.லதிசன்-161 (யாழ்ற் ரன் கல்லூரி), இ.தமிழினி -158 (சுந்தர மூர்த்தி நாயனார் வித்தி.), க.தனுசிகா-158 (சுப் பிரமணிய வித்தியாசாலை), ச.ரகுராமன்-157 (சுந்தர மூர்த்தி நாயனார் வித்தி.), யோ. அபிஷா-156 (சுப்பிரமணிய வித்தி யாசாலை), சு.சுகிர்தன்-155 (ஊரி அ.மி.த.க.பாடசாலை), ந.நளினி-155 (சுப்பிரமணிய வித்தியாசாலை).

(ஓ-8-86 -250)

## நெடுந்தீவு மாணவனுக்கு 185 புள்ளி தீவக வலயத்தில் 48 பேர் சித்தி

யாழ்ப்பாணம், ஒக்.3
தரம் 5 புலமைப் பரிசில் பரீட் சையில் தீவக வலயத்தில் நெடுந் தீவு சிக்கிலியாம் பள்ளம் அ.த. க. பாடசாலை மாணவர் 185 புள்ளிகளைப் பெற்று முதலிடத் தைப் பெற்றுக் கொண்டுள் ளார். அதே சமயம் காரை நகரில் உள்ள 8 பாடசாலை களில் இம்முறை 19 மாணவர் கள் சித்தியடைந்துள்ளனர். தீவுப் பகுதியில் மிகவும் பின் தங்கிய பாடசாலைகளிலும் இம்முறை சிறந்த பெறுபேறு கள் கிடைத்துள்ளது என்று தீவக வலய கல்விப் பணிப் பாளர் ரி.ஜோண்குயின்ரஸ் தெரிவித்தார்.

சடையாளி பாடசாலை மாணவி வாணிஜீவா (மாப்பாணவூரி) 174 புள்ளிகளைப் பெற்று காரை நகரில் முதல் நிலை பெற்றுள் ளார்.

புலமைப் பரிசில் பரீட்சையில் நெடுந்தீவில் சிக்கிரியாம் பள் ளம் றோ.க.த. பாடசாலையில் ஒரு மாணவரும் நெடுந்தீவு ம.வி.யில் இருவரும் நெடுந் தீவு றோ.க. பாடசாலையில் இருவரும்-

காரைநகரில் சுப்பிரமணிய வித்தியாசாலையில் 6 பேரும், ஊரிஅ.மி.த.கவில்4பேரும், சுந்தர மூர்த்தி நாயனார் வித்தியாலயத் தில் இருவரும் தோப்புக் காடு சம்பந்தர் வித்தியாலயத்தில் இருவரும், வலந்தலை வடக்கு அ.மி.த.க. பாடசாலையில் இரு வரும் யாழ்ரன் கல்லூரியில் இரு வரும், மெய்கண்டான் வித்தி யாலயத்தில் ஒருவரும் மொத்த ம் 19 மாணவர்களும்-

வேலணை தெற்கு ஐயனார் வித்தியாலயம் 4, நடராசா மேற்கு 3, சைப்பிரகாசா 2, கிழக்கு மகா வித்தியாலயம் 1, மண்டைதீவு றோ.க. 3-

அனலை தீவு தெற்கு அ.த.க. 3, வடலூர் அ.த.க.2, மண் டைதீவு றோ.க. 3, கரம்பொன் சிறிய புஸ்பம் 1, ஊர்காவற் றுறை றோ.க.1, தம்பாட்டி அ.த.க 1 என்ற வாறாக தீவகத்தில் மொத்தமாக 48 பேர் இம் முறை சித்தி எய்தியுள்ளனர்.

(ஓ-7-250)

## வடமராட்சி வலய மாணவர்கள் 244 பேர் சித்தி

வடமராட்சி, ஒக். 3
ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் வடமராட்சி கல்வி வலயத்தைச் சேர்ந்த 244 மாணவர்கள் சித்தியடைந் துள்ளனர்.

இந்த வலயத்தில் கரவெட்டி கல்விக் கோட்டத்தில் 131 மாண வர்களும், பருத் தித்துறைக் கோட்டத்தில் 101 மாணவர் களும், மருதங்கேணிக் கோட் டத்தில் 12 மாணவர்களும் சித்தியடைந்தோர்களில் அடங் குவார்கள்.

பருத்தித்துறைக் கோட்டத்தில் பருத்தித்துறை சித்திவிநாயகர் வித்தியாலய மாணவி ஜெக நாதன் கானல் அழகி 189 புள்ளி களையும் கரவெட்டிக் கோட்டத் தில் கரவெட்டி திருஇருதயக் கல் லூரி மாணவன் புஸ்பாகரன் மகிந்தன் 188 புள்ளிகளையும், மருதங்கேணிக் கோட்டத்தில் குடத்தனை, கரை யூர்,அ.மி.த.க பாடசாலைமாணவி சி.விதுஷிகா 179 புள்ளிகளையும் பெற்று முதலாவதாகச் சித்தியடைந்துள் ளனர். (ஓ-8)

## ஏழாலை மாணவனுக்குப் பாராட்டு



புலமைப் பரிசில் பரீட்சையில் வடமாகாணத்தில் முதலிடம் பெற்ற ஏழாலை கிழக்கைச் சேர்ந்த, ஏழாலை சைவ சன்மார்க்க வித்தியாசாலை மாணவன் பரமானந்தம் நனுராஜுக்கு நேரில் சென்று பாராட்டுத் தெரிவித்ததுடன் பரிசிலையும் வழங்கிக் கௌரவித்தார் இலங்கை தமிழரசுக் கட்சி இளைஞரணி செயலாளரும் மாகாண சபை உறுப்பினருமான பா.கஜதீபன்.

இந்த நிகழ்வில் அவருடன் வலி.வடக்கு பிரதேச சபை உறுப்பினர் சி.ஹரிகரன், சாவகச்சேரி நகர சபையின் உறுப்பினர் ஞா.கிஷோர், யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய முன்னாள் செயலாளர் ப.தர்சானந் ஆகியோரும் கலந்து கொண்டனர். (ஓ-5)

## மருத்துவராகி சேவையாற்றுவதே எனது எதிர்கால இலட்சியமாகும்

### கூறுகிறார் மன்னாரில் முதலிடம் பெற்ற மாணவர்

மன்னார், ஒக்.3
எதிர்காலத்தில் மருத்துவராகி எனது மக்களுக்குச் சேவை யாற்ற வேண்டும் என்பதே எனது எதிர்கால இலட்சிய மாகும். இவ்வாறு தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 185 புள்ளிகளைப் பெற்று மன் னார் மாவட்டத்தில் முதலாம் இடத்தை பெற்றுள்ள மன்னார் சித்திவிநாயகர் இந்து தேசிய பாடசாலை மாணவன் நட ராஜா அருண் தெரிவித்தார்.

அந்த மாணவன் மேலும் தெரி விக்கையில்;

நான் புலமைப்பரிசில் பரீட்சை யில் 185 புள்ளிகளைப்பெற்று மன்னார்மாவட்டத்தில்முதல்நிலை யினைப் பெற்றுள்ளதை யிட்டு மகிழ்ச்சி அடைகின்றேன்.

இதற்குக் காரணமான எனது வகுப்பாசிரியர் என்.சுந்தரே சன் வழங்கிய ஊக்கப்படுத்தலால் முதல் நிலையை ஈட்ட முடிந் தது. அவருடன் இணைந்து ஆசிரியர் ஏ.சகி லன் கற்பித்து வந்தார்.

இவர்களுடைய வழிநடத்தலின் காரணமாகவே நான் இந்த வெற்றியை அடைந்துள்ளேன். அதிபரும் முழு அளவிலான ஊக் கத்தையும், ஒத்துழைப்பை யும் வழங்கி னார்.

எனவே, எனது வெற்றிக்கு தொடர்ந்தும் ஊக்கமளித்து வந்த இந்தப் பாடசாலையின் அதிபருக்கும் எனது பெற்றோ ருக்கும் எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.



அருண்

எதிர்காலத்தில் மருத்துவராகி எனது மாவட்டத்துக்கும் எனது மக்களுக்கும் சேவை செய்ய வேண்டும் என்பதே எனது இலட்சியமாகும். என்று அவர் மேலும் தெரிவித்தார். (க-12)

## பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம், ஒக்.3
வேலணை சரவணை நாகேஸ் வரி மகா வித்தியாலய பரிச ளிப்பு விழாவும் நாகேஸ்வரி மலர் வெளியீடும் இன்று காலை 9.30 மணிக்கு பாடசாலை அதிபர் மு.சத்தியசீலன் தலை மையில் நடைபெறும்..

நிகழ்வுக்கு பிரதம விருந்தி னராக கோப்பாய் கல்வியியற் கல்லூரி பீடாதிபதி ச.அமிர்த லிங்கம், சிறப்பு விருந்தினராக தீவக வலயக் கல்விப்பணிப் பாளர் தி.ஜோன் குயின்ரஸ் ஆகி யோர் கலந்து கொள்வர். (வ)

## சிறுவனுக்கு கைமுறிவு

அளவெட்டி, ஒக்.3
ஆட்டுக்கு குழை வெட்ட கிழுவை மரத்தில் ஏறிய சிறுவன் குழை வெட்டும் போது தவறி விழுந்த தால் இடது கை முறிந்த நிலை யில் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப் பட்டுள் ளார்.

ஏழாலை களவாவோடை அம் மன் கோவிலடி பகுதியைச் சேர்ந்த செல்வகுமார் சபீசன் (வயது-13) என்ற சிறுவனே பாதிக் கப்பட்டவர் ஆவார். (ஓ-36)

## இறம்பைக்குளம் மகளிர் கல்லூரி வவுனியா மாவட்டத்தில் முன்னிலை

### புலமைப்பரிசில் பரீட்சையில் 82 பேர் சித்தி

வவுனியா, ஒக். 3
தரம் 5 புலமைப்பரிசில் முடிவு களில் வவுனியா இறம்பைக் குளம் மகளிர் பாடசாலையில் 82 மாணவர்கள் சித்தி யடைந்து அந்தப் பாடசாலை வவுனியா வில் முன்னிலை பெற்றுள் ளது.

மேலும், புலமைப்பரிசில் முடிவு களின்படி வவுனியா தமிழ் மகாவித்தியாலயத்தின் 55 மாணவர்களும், வவுனியா விபுலானந்தக் கல்லூரியில் 46 மாணவர்களும், சைவப் பிர காச மகளிர் கல்லூரியில் 29 மாணவர்களும், நெளுக்குளம் கலைமகள் பாடசாலையில் 12 மாணவர்களும்-

இந்துக் கல்லூரியில் 09 பேரும், சீ.சீ.ரி.எம்.எஸ் பாட சாலையில் 06 பேரும், வீர புரம் பாடசாலையில் 06 பேரும், தாண்டிக்குளம் பிரமண்டு வித்தியாலயத்தில் 05 பேரும், சிறிநாகராஜா பாடசாலையில் 04 பேரும்-

செட்டிக்குளம் மகாவித்தியால யத்தில் 04 பேரும், தாலிக் குளம் அ.த.க.பாடசாலையில் 4 பேரும், வவுனியா முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் 03 பேரும்-

செட்டிப்புலவு பாடசாலையில் 02 பேரும், பூந்தோட்டம் பாடசாலையில் 02 பேரும், மணியர்குளம் பாடசாலையில் 02 பேரும், திருஞானசம்பந்தர் பாடசாலையில் 04 பேரும், கற்பகபுரம் பாடசாலை 01, தாருல் உலூம் பாடசாலை, முருகனூர் பாடசாலை, சம ணங்குளம் பாடசாலை, மதீனா பாடசாலை, பூவரசங்குளம் பாட சாலை, கந்தபுரம் வாணி வித்தி யாலயம், அல்அமீன் பாடசாலை, ஆண்டியா புளியங்குளம், வெளிக்குளம் பாடசாலை ஆகிய வற்றில் தலா ஒரு மாணவரும் சித்தியடைந்துள்ளனர்.

(ஓ-402)

## முயற்சி செய்தால் கல்வியில் சிறந்த பெறுபேறுகள் கிடைக்கும்

### வவுனியாவில் முதலிடத்தைப் பிடித்த மாணவி தெரிவிப்பு

வவுனியா, ஒக்.3
முயற்சி செய்தால் கல்வியில் சிறந்த பெறுபேறுகளை ஈட்டு வது கடினமான விடயமல்ல. இவ்வாறு புலமைப் பரிசில் பரீட்சையில் வவுனியா மாவட் டத்தில் அதிகூடிய புள்ளிகளைப் பெற்ற அருள்ஈசன் அருவி என்ற மாணவி தெரிவித்துள் ளார்.

வவுனியா தமிழ் மகாவித்தி யாலய மாணவியான இவர் 193 புள்ளிகளைப் பெற்றுள் ளமை குறிப்பிடத்தக்கது. அவர் தன்னுடைய வெற்றிப்பாதை குறித்து உதயன் வாசகர் களுக்கு வழங்கிய செவ்வி கீழே தரப்படுகிறது.

கே:இந்த வெற்றி குறித்து உங்களின் மனநிலை எவ் வாறு உள்ளது?

ப : மட்டற்ற மகிழ்ச்சியாக இருக் கிறது.

கே : உங்களின் வெற்றிக்கு எவ் வாறான ஒத்துழைப்பு பாட சாலையில் இருந்து கிடைத் தது?

ப : ஆசிரியர்கள் தொடர்ந்து எனக்கு ஊக்கமளித்து வந்தார் கள். அதற்கு உறுதுணையாக அதிபர் இருந்தார். குறிப்பாக



அ.அருவி

எப்போதும் எனக்கு ஊக்க மளித்து என்னைச் சோர்வடை யாது பார்த்தைக் கூறமுடியும்.

கே : இந்த வெற்றிக்கு உங்க ளின் உழைப்பு எவ்வாறு அமைந் திருந்தது?

ப : நான் தொடர்ந்து முயற்சி செய்தேன். வினாக்களைக் கொண்ட பயிற்சிகளை மேற் கொண்டேன். தொடர்ச்சியான எனது முயற்சிதான் இந்த வெற்றிக்குக் காரணமாகும்.

கே : உங்களுக்கு ஏதாவது தடைகள் ஏற்பட்டனவா?

ப :பெருமளவில் இல்லை. ஒரு சில தடைகள் இருந்த போதி லும் அவற்றைச் சமாளிப்ப தற்கு எனது ஆசிரியர்களும், பெற்றோர்களும் உதவி புரிந் தார்கள்.

கே : உங்களின் பெற்றோருக்கு நீங்கள் சொல்லும் செய்தி என்ன?

ப:எனக்கு ஆக்கமும் ஊக் கமும் அளித்ததில் முதன்மை வாய்ந்தவர்கள் எனது பெற் றோர். அம்மாவும், அப்பா வும் எனக்குத் தேவையான உதவிகளை வழங்கினார் கள்.

கே : உங்களது அடுத்த இலக்கு என்ன?

ப :நான் தொடர்ந்து எனது உயர் கல்வியிலும் சிறந்த பெறுபேற் றைப் பெற்றுக் கொடுப்பேன். ஒரு மருத்துவராக வந்து நாட் டுக்குச் சேவை செய்வதே எனது முக்கிய இலக்காகும்.

கே : சக மாணவர்களுக்கு நீங்கள் சொல்லும் செய்தி என்ன?

ப:முயற்சி செய்து படியுங்கள். பரீட்சைப் பெறுபேறுகள் தானா கவே மகிழ்வைத் தரும். படிக் காது இருந்து விட்டு நல்ல பெறுபேறு கிடைக்குமென எதிர் பார்ப்பது தவறாகும். முயற்சி செய்து படித்தால் என்னைப் போன்று மகிழ்வாக இருக் கலாம்.

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி

அமரர்
**பாலசிங்கம் தேவராசா(பாட்டா)**
(அராலி வடக்கு,வட்டுக்கோட்டை)



அன்னாரின் வீட்டுக்கிருத்திய நிகழ்வும் மதியபோசன நிகழ்வும் இன்று(03.10.2013) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெறவுள்ளதால் உற்றார், உறவினர்,நண்பர்கள் அனைவரும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மங்களராணி,
அருட்குமரன்,சுகிணன்- லக்ஷிகா,
சுவேனன், சிவனேசன் நுஜந்திகா

மலர்வு 25.01.1952 — உதிர்வு 03.09.2013

அராலி வடக்கு,
வட்டுக்கோட்டை. (32221)(5.6)

# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 20 * 04 * 1941
மறைவு 26 * 09 * 2011

**அமரர் கணபதிப்பிள்ளை செல்வராசா**
திதி:சதுர்த்தசி

வையத்துள் வாழ்வாங்கு வாழ வழிசமைத்த
எங்கள் அன்புத் தந்தையே எமை விட்டு
விண்ணுலகம் சென்று இரண்டாண்டு பறந்தோடிப்
போயும் மறக்குமோ எங்கள் நெஞ்சம்

என்றென்றும் உங்கள் நினைவில் வாழும்
செ.செல்லம்மா (மனைவி)
பிள்ளைகள், மருமக்கள்,பேரப்பிள்ளைகள்.

முத்துமாரி அம்மன் வீதி,
மட்டுவில் வடக்கு, சாவகச்சேரி. (29648)(4.3.6)

சிவயோக சுவாமிகளின் அடியவரும்,
வட இலங்கை சர்வோதய ஸ்தாபகரும், ஜீவதானியும்
"என்கடன் பணி செய்து கிடப்பதே" என்பதை தாரக மந்திரமாகக்
கொண்டு வாழ்ந்தவருமான தொண்டர்
**க. திருநாவுக்கரசு** அவர்களின்

# 12ஆவது நினைவு தினம் 03.10.2013



தோற்றம் 01.03.1939
மறைவு 03.10.2001

"எனையீன்ற தந்தைக்கும் தாய்க்கும் மக்கள்
இனமீன்ற தமிழ்நாடு தனக்கும் - என்னால்
தினையளவு பயனேதும் கிடைக்குமென்றால்
செத்தொழியும் நாளெனக்குத் திருநாளாகும்."

தொண்டர் க. திருநாவுக்கரசு அவர்களின் 12ஆவது நினைவு தின நிகழ்வு புங்குடுதீவு வட இலங்கை சர்வோதய புஸ்பா மணிமண்டபத்தில் நடைபெறவுள்ளது. அன்றைய தினம் மதிய உணவைத் தொடர்ந்து பிற்பகல் 1.30 மணிக்கு நினைவு தின நிகழ்வுகள் நடைபெறவுள்ளதால் இதில் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.
(தயவுசெய்து தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளுங்கள்)

புங்குடுதீவு. (32218) (7.6.3) வட இலங்கை சர்வோதய குடும்பத்தினர்.

# பசியால் வாடும் 80 கோடி பேர்



கொழும்பு,ஒக்.3

உலகில் எட்டுப் பேரில் ஒருவர் பட்டினியால் வாடுவதாக ஐ.நா. அறிக்கை ஒன்று தெரிவிக்கிறது.

கடந்த இரண்டு ஆண்டுகளில் நிலவும் சூழல் குறித்து ஆராய்ந்த இந்த அறிக்கையில், 80 கோடி மக்கள் கடும் பசியால் வாடுவதாகத் தெரிவித்துள்ளது.

சுறுசுறுப்பான, ஆரோக்கியமான வாழ்க்கையைப் பேணக்கூடிய அளவுக்கு உண்ணும் வசதியில்லாதோரே இந்தப் பட்டியலில் கணக்கெடுக்கப்பட்டுள்ளனர்.

தற்போது வெளியிடப்பட்டுள்ள இந்த எண்ணிக்கை இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு வெளியிடப்பட்ட எண்ணிக்கையை விட சற்றே குறைவு என்றாலும், 2015ஆம் ஆண்டுக்குள் எட்டப்பட வேண்டிய புத்தாயிர வளர்ச்சி இலக்குகளைத் தொடாமல் போகக் கூடிய சாத்தியம் இருப்பதைத்தான் இது காட்டியுள்ளதாக அறிக்கை எச்சரித்துள்ளது. (ச)

## அதிகம் சத்தம் வெளியிடும் வாகனங்களுக்கு எதிராக நடவடிக்கை

கொழும்பு,ஒக்.3

சூழலுக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் அதிக சத்தத்தை வெளியிட்டவாறு பயணிக்கும் வாகனங்களுக்கு எதிராக கடும் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளச் சுற்றாடல் அமைச்சு தீர்மானித்துள்ளது.

இதன் அடிப்படையில், இது தொடர்பான புதிய சட்ட வரைவு அறிமுகம் செய்யப்படும் என்று அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த குறிப்பிட்டார்.

கொழும்பில் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டார்.

எதிர்வரும் காலத்தில் பொலிஸார் இது தொடர்பான சட்ட ஒழுங்கை நடைமுறைப்படுத்துவர் என்றும் அமைச்சர் தெரிவித்தார். (ச)

## மீள் திருத்த கோரிக்கை 15 ஆம் திகதி வரை

ஐந்தாம் தர புலமைப் பரிசில் பரீட்சை பெறுபேறுகளின் மீள்திருத்தக் கோரிக்கைக்கான விண்ணப்பங்கள் எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்று பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

பாடசாலை அதிபர்கள் ஊடாக மீள் திருத்தத்திற்கான விண்ணப்பங்களை அனுப்பி வைக்க முடியும் என்று திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இது தொடர்பான மேலதிக தகவல்கள் பரீட்சை பெறுபேறுகளுடன் பாடசாலை அதிபர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன என்று அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.(ச)

# 13 ஆம் ஆண்டு நினைவலைகள்

திருமதி
**கலைமணி இராசதுரை**



அன்னைமடியில் 22.10.1954
அரக்கர் அழிப்பில் 26.09.2000

அம்மா! அம்மா! எங்கள் தெய்வமே!
அவனியில் பார் போற்ற வாழ்ந்த தெய்வமே!
அன்போடு எமை வளர்த்த அம்மாவே!
ஆறுதல் கூற யாருமின்றி – இன்று
அநாதையாக தவிக்கவிட்டு – ஒரு நொடியில்
எங்கு சென்றீர்கள்.
என்றும் உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனை வேண்டி நிற்கும்.

குடமியன்,
வரணி.
குடும்பத்தினர்.

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



தோற்றம் 03.07.1939
மறைவு 03.09.2013

திருமதி **சிவசக்தி குகமூர்த்தி**

கடந்த 03.09.2013 செவ்வாய்க்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவி திருமதி சிவசக்தி குகமூர்த்தி அவர்களின் ஆத்மசாந்திக் கிரியை இன்று (03.10.2013) வியாழக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நிகழவிருப்பதால், அத்தருணம் தாங்கள் வருகைதந்து ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் கேட்டுக் கொள்வதுடன், அன்னாரின் பிரிவுத் துயரில் பங்கு கொண்ட அனைவருக்கும் எமது நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

"கந்தையா வளவு"
259, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.
குடும்பத்தினர்.

# 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 15.02.1936
மறைவு 26.09.2011
திதி : சதுர்த்தசி
(03.10.2013 வியாழக்கிழமை)

**பஞ்சவர்ணம்பிள்ளை கிருஷ்ணமூர்த்தி**

(தேவி அச்சகம், ஸ்தாபகர்
மூர்த்தி விளம்பரசேவை)

எங்கள் அன்பான அப்பாவே எமைப்பிரிந்து ஈராண்டுகள்
கடந்தாலும் எம் நெஞ்சினில் நீங்கவில்லை
உங்கள் நினைவுகள் எப்போதும்
ஓய்வு விடாது எமக்காக உழைத்து
உன்னதமான காலங்கள் பூமியிலே நீங்கள்
வாழ்ந்த காலங்கள் இனிமையாக எம்மை
அரவணைத்து அறிவுரை கூறிய காலங்கள்
எத்தனை ஆண்டுகள் சென்றாலும் மறக்க முடியாது அப்பா

உங்கள் நினைவுகளுடன் உங்களது
ஆத்மா சாந்தியடைய மாரியம்மனை பிரார்த்திக்கும்
குடும்பத்தினர்.

114/19, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.
021 222 8273 (32164)(5.6.3)

# மரண அறிவித்தல்

## முத்தையா ஜெகநாதன்

*(இளைப்பாறிய ஆராய்ச்சி உத்தியோ கத்தர், தென்னை ஆராய்ச்சிக் கழகம், லுனுவில)*

காரைநகர், சந்தம் புளியடியைச் சேர்ந்த முத்தையா ஜெகநாதன் 30.09.2013 திங்கட்கிழமை மாலை 6.30 மணியள வில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் அப்போதிக்கரி முத்தையா -இலட்சுமியம்மா தம்பதியரின் அன்பு மகனும், நகைக்கடை நல்லதம்பி- சிவ பாக்கியம் தம்பதியரின் அன்பு மருமக னும், மகேஸ்வரியின் அன்புக் கணவரும், ஜெகதீசன், நிறஞ்சனா ஆகியோரின் பாச மிகு தந்தையும், துளசி, மோகன்ராம் ஆகி யோரின் அன்பு மாமனாரும், கவீஷனின் பாசமிகு தாத் தாவும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் நேற்று (02.10.2013) புதன்கிழமை மு.ப 10 மணியிலிருந்து அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, இன்று (03.10.2013) வியாழக்கிழமை காலை 8.30 மணியளவில் இறுதிக் கிரியைகள் ஆரம்பிக்கப்பட்டு மு.ப 10.30 மணியள வில் தகனக்கிரியைக்காக கல்கிசை இந்து மயா னத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவி னர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
ஜெ.ஜெகதீசன் (மகன்) (c/12355) (6.3.11)

## பயிற்சிப் பட்டறை

யாழ்ப்பாணம், ஒக்.3

ஐ.நா.அபிவிருத்தி திட்ட அனுசரணையுடன் ஸ்தாபிக்கப்பட்ட எம்.சி.எஸ்.தகவல் தொழில் நுட்ப வளாகம் பாடசாலைக் கல்வியை நிறைவு செய்த மாணவர்களுக்கு கணினி வலையமைப்பு. இணைய வடிவமைப்பு. மல்ரிமீடியா ஆகிய துறைகளில் பயிற்சிப் பட்டறையை நடத்தவுள்ளது. இலவசமாக நடைபெறும் இந்தப் பயிற்சி நெறியில் பயில விரும்பும் மாணவர்கள் யாழ்.பல்கலைக் கழகத்துக்கு அண்மையில் அமைந்துள்ள மேற்படி தகவல் தொழில்நுட்ப வளாகத்தில் நேரில் அல்லது 0772395895 இலக்கத் தினூடாக பதிவுகளை மேற்கொள்ள முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஓ)

## ஆன்மிக நூல்

சுழிபுரம்.ஒக்.3

அகில இலங்கை காந்திய சேவாசங்கத்தினர் மகாத் மாகாந்தியின் 144ஆவது ஜெனன தினத்தையொட்டி பரச்சோத்திர ரத்ன மாலிகா என்னும் ஆன்மிக நூலை வெளியிட்டுள்ளனர். இந்த இலவச நூல் தேவைப்படு வோர் யாழ்ப்பாண அகில இலங்கை காந்திய சேவா சங்கத்துடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ள லாம் என்று அறிவிக்கப் பட்டுள்ளது. (ஓ-28)

## அதிபர்களுக்கான மீளாய்வுக் கூட்டம்

யாழ்ப்பாண வலயத்தைச் சேர்ந்த பாடசாலை அதிபர்களுக்கான மீளாய்வுக் கூட்டம் நாளை வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு வலய முகாமைத்துவ மண்டபத்தில் இடம்பெறும் என்று யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (ஓ)

## சஞ்சிகை வெளியீடு

வடமராட்சி, ஒக்.3

வல்வெட்டித்துறை சிவகுரு வித்தியாலய் 'சிவதீபம்' சஞ்சிகை வெளியீட்டு விழா இன்று வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பாடசாலை தையல் பாகர் அரங்கில் அதிபர் ஆ.சிவநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் சிவஸ்ரீ சோ.தண்டபாணிகதேசிகர், பிரம்மஸ்ரீ ப.மனோகரக் குருக்கள் ஆகியோர் ஆசியுரைகளை வழங்க வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சி.நந்தகுமார் வாழ்த்துரையை வழங்குவார். பிரதம விருந்தினராக பருத்தித்துறைப் பிரதேச செயலர் இ.த.ஜெயசீலன் கலந்துகொள்வார்.

சஞ்சிகையின் வெளியீட்டுரையை யாழ்.பல்கலைக்கழக முன்னாள் தமிழ்த் துறைத் தலைவர் பேராசிரியர் எஸ்.சிவ லிங்கராஜாவும், மதிப்பீட்டுரையை யாழ்.பல் கலைக்கழக சமூகவியல்துறை விரிவுரையாளர் இ.இராஜேஸ்கண்ணனும் நிகழ்த்துவர். (வ-8)

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அழைப்பும்

தோற்றம்
09 * 04 * 1929

மறைவு
03 * 09 * 2013



கடந்த 03.09.2013 செவ்வாய்க்கிழமை அமரத்துவம் அடைந்த எமது அன்புத் தாயார்

## திருமதி பாக்கியம் இராசா

அவர்களின் 31 ஆம் நாள் நினைவு ஆராதனை நிகழ்வு இன்று (03.10.2013) வியாழக்கிழமை மு.ப 11.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்களும் குடும்பசகிதம் வருகை தந்து அன்னாரின் நன்றித்துதி ஆராதனையிலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

சேச் றோட்,சங்கானை.
077 556 0843, 077 391 6944 (32060)(4.3.6) குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்

## திருமதி பூரணம் (யானகிஅக்கா) பழனிவேலு



மலேசியா, கோலாலம்பூரைப்பிறப்பிடமாகவும் யாழ்ப் பாணம், கோப்பாய் மத்தி காளிகோயிலடி, கோகுலத்தை வசிப்பிடமாகவும் பின்பு கனடா ரொறண்ரோவில் வசித்த வருமான திருமதி பூரணம் (யானகி அக்கா) பழனிவேலு 01.10.2013 செவ்வாய்க்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சண்முகம்-அழகம்மா தம்பதியரின் மூத்த புதல்வியும், பழனிவேலுவின் அன்பு மனைவியும், சர்வேஸ்வரன் (கனடா), மகேஸ்வரன் (கன டா), பாலச்சந்திரன்-மனோரஞ்சிதம் (கனடா), நகுலேஸ்வரன் (லண்டன்), ஜெகதீஸ்வரன் (கொழும்பு), விமலேஸ்வரன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும்,கோப்பாயைச் சேர்ந்தவர்களான மனோன்மணி, யோகீஸ்வரி, பத்மநாதன், உருக்குமணி, தில்லைநாதன் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும், கோப்பாயைச் சேர்ந்தவர்களான கிருஷ்ண சாமி, விசுவலிங்கம், புஸ்பவதி, நவரத்தினம், பத்மாவதி ஆகி யோரின் அன்பு மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கனடாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

காளிகோயிலடி,
கோப்பாய் மத்தி,கோப்பாய்.
T.P-077 724 0942 (32240)(6.3.11)

தகவல்:
சண்முகம் பத்மநாதன் (சகோதரன்)

# மரண அறிவித்தல்

## எஸ்தாக்கி கிளமென்ற்



உயரப்புலம், ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமா கவும் வசிப்பிடமாகவும் கொண்ட எஸ்தாக்கி கிளமென்ற் (30.09.2013) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான எஸ்தாக்கி- அன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ் சென்றவர்களான வரப்பிரகாசம்- வரோணிக்கா தம்ப தியரின் அன்பு மருமகனும், திரேசம்மாவின் அன்புக் கணவரும், இம்மனுவேல் மற்றும் காலஞ்சென்றவர் களான பாவிலு, பேதுறு, விறிசித்தம்மா, வரதராசா, டெய்சி ஆகியோரின் அன்புச் சகோதரனும், ஜெயா, ஜெயம், ஜெயக்குமார், ஜெயராணி ஆகியோரின் அன் புத் தந்தையும், செல்வரத்தினம், பெனடிற், மேரி கிறிஸ்ரினா ஆகியோரின் அன்பு மாமனும், ஜெகன்- சில்வியா, நிரூஜன்-ஜெனா, ஜெடின், ஜென்சி, ஜெனன், ஜெலா, யூலியன் ஆகியோரின் பாசமிகு பேரனும், சுவீர்தனின் பாசமிகு பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இரங்கற் திருப்பலி நாளை (04.10.2013) வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு ஆனைக்கோட்டை புனித அடைக்கலநாயகி ஆலயத்தில் ஒப்புக் கொடுக்கப் பட்டு பூதவுடல் ஆனைக்கோட்டை அடைக்கலநாயகி சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

உயரப்புலம்,
ஆனைக்கோட்டை.
T.P-021 221 3339 (32241)(6.3.11)

தகவல்:
குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்

## ஐயம்பிள்ளை நடராசா

*(முன்னாள் உரிமையாளர் - ஸ்ரீஜெயா ரான்ஸ்போட்)*



உடுவிலைப் பிறப்பிடமாகவும், பண்டிதர் மாணிக்கதியாகராசா வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட ஐயம்பிள்ளை நடராசா நேற்று முன்தினம் (01.10.2013) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஐயம்பிள்ளை மீனாட்சி தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ் சென்றவர்களான சீனியர்-சின்னாச்சி தம்பதியினரின் அன்பு மருமகனும் பாக்கியத்தின் அன்புக் கணவரும் சுபாஸ் சந்திரபோஸ், சுபாஜினி (கனடா), வினோதினி (ஜேர்மனி), காலஞ்சென்ற தயாயினி மற்றும் ஜெயா (பிரான்ஸ்), ஜெயச்சந்திரன் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் இரவிச்சந்திரா (கனடா), அலெக்ஸ் சந்திரமோகன் (கனடா), ஜெசி நித்தியகலா, மேசி சூரியகலா(இந்தியா), எட்வேட் மோகனசீலன் (அமெரிக்கா) ஆகியோரின் வளர்ப்புத் தந்தையும் சறோஜாதேவி, இராயசேகரம், சந்திரமோகன், இராயசேகர், சசிகலா மற்றும் மருமக்களின் அன்பு மாமனாரும் கசோலினா, ஜெனனி, தருணி, கௌசிக் மற்றும் பேரப் பிள்ளைகளின் பாசமிகு பேரனும் நல்லம்மா, புஸ்பமலர், காலஞ்சென்ற தேவமலர் மற்றும் தவயோகராஜா ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்றவர்களான அரியம், இராசதுரை, தேவசகாயம் மற்றும் தங்கமணி, செல்லத்துரை, காலஞ்சென்ற மார்க்கண்டு ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (03.10.2013) வியாழக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சுன்னாகம் கொத்தியாலடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| சுபாஸ் | 077 882 2611 | வினோதினி(ஜேர்மனி) | 051511067350 | சுபாஜினி(கனடா) | (416)638-2235 |
| ஜெயா(பிரான்ஸ்) | 0753302808 | ஜெயச்சந்திரன்(பிரான்ஸ்) | 0148225521 | ரவி(கனடா) | (514)7481329 |
| அலெக்ஸ்(கனடா) | (514)747-6320 | கலா | 0770593825 | மேசி(இந்தியா) | (802)3439573 |
| எட்வேட்(அமெரிக்கா) | (952)944-4181 | | | | |

தகவல்: குடும்பத்தினர்.

பண்டிதர் மாணிக்கதியாகராசா வீதி, சுன்னாகம். (32245) (7.6) தொ.பே : 021 224 0147

# பாதுகாப்புச் சபையில் இடம்பிடிக்க இலங்கையை நாடுகிறது நியூஸிலாந்து

## அந்நாட்டுப் பிரதமர் வேண்டுகோள்

கொழும்பு, ஒக்.3

2015- 2016 ஆம் ஆண்டு கால கட்டத்துள் ஐ.நா. பாது காப்புச் சபையில் உறுப்புரிமை பெற்றுக் கொள்வதற்கு நியூசிலாந்து மேற்கொள்ளும் முயற்சிக்கு இலங்கையை ஒத்துழைப்பு வழங்குமாறு அந்த நாட்டின் பிரதமர் ஜோன்கே ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் அமைப்பின் 68 ஆவது பேரவைக் கூட்டத் தில் கலந்து கொள்வதற்காக நியூ யோர்க் சென்றுள்ள ஜனா திபதியை அவர் சந்தித்துக் கலந்துரையாடியபோதே இந்த வேண்டுகோளை விடுத் துள்ளார்.

ஐ.நா. அமைப்பின் பாது காப்புச் சபைக்கான புதிய உறுப்புரிமை வழங்கப்படும் போது இலங்கையின் ஒத்துழைப்பு யாருக்கு வழங்கப்படும் என்பது சம்பந்தமாகத் தாம் இன்னமும் தீர்மானமொன்றுக்கு வரவில்லை என்று ஜனாதிபதி கூறினார். எனினும் நியூசிலாந்து பிரதமரின் கோரிக்கையைக் கவனத்தில் கொள்வதாக அவர் தெரிவித்தார்.

பால் உற்பத்தி சம்பந்தமான நியுசிலாந்தின் தொழில்நுட்ப அறிவை இலங்கையின் பால் உற்பத்தித் துறையின் அபிவி ருத்திக்காகப் பெற்றுக் கொடுப்பதற்கு நியுசிலாந்து பிரதமர் இணக்கம் தெரிவித்தார்.

நியுசிலாந்தின் பால் உற்பத்தித் துறைக்கு முக்கியத்துவம் பெறும் வர்த்தகச் சந்தையாக இலங்கை உள்ளது என்று அவர் மேலும் கூறினார். (ச-22)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



செல்வன் ம.லட்ச்சிகன்

அளவெட்டி அருணோதயக் கல்லூரியில் கல்வி கற்று 2013 தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் 186 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்த திரு.திருமதி மதிவதனன் தம்பதியரின் செல்வப் புதல்வன் லட்ச்சிகன் மேலும் கல்வியில் சிறந்து அறிஞனாக விளங்க எங்கள் குலதெய்வத்தை வணங்கி வாழ்த்துகின்றோம்.

அம்மப்பா -சேனாதிராஜா குடும்பம்,
மாமா- பிறேமகுமார் குடும்பம்,
சித்தப்பா - மகிந்தன் குடும்பம்.

(32251)(5.6)



## தவறிவிட்டது

திருலோகநாதன் நெமேந்திரா என்பவரது தேசிய அடையாள அட்டை (890323570V) சாரதி அனுமதிப்பத்திரம் என்பன அடங்கிய பேர்ஸ் கடந்த 29.09.2013 அன்று மாசியப்பிட்டிக்கும் மானிப்பாய்க்கும் இடையில் தவறி விட்டது. கண்டெடுத்தவர்கள் தொடர்புகொள்ளவும். 0775045833



## தொல்புரம் கிழக்கு, விக்கினேஸ்வரா சனசமூக நிலையத்தின் 48ஆவது ஆண்டு விழாவை முன்னிட்டு நடத்தப்படும் வலிமேற்குப் பிரிவைச் சேர்ந்த 17 வயதுக்கு மேற்பட்ட ஆண்களுக்கான மரதன் ஓட்டப் போட்டி

காலம் : 12.10.2013 சனிக்கிழமை காலை 7.00 மணி
இடம் : வலிமேற்குப் பிரதேச சபை முன்றில் (10 km தூரம்)

பெறுமதிமிக்க பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளன. போட்டிக்கான விண்ணப்பங்களை எமது நிலையத்தில் பெற்று பூர்த்தி செய்து 10.10.2013 இக்கு முன் அனுப்பி வைக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

T.P: 077 6257995 (32250)(10,6) நிர்வாகம்.



நவ மகாஜன சிற்பி அமரர் அதிபர் தெ.து.ஜயரத்தினம் அவர்களின்
நூறாவது பிறந்த தின விழாவை முன்னிட்டு நடத்தப்படுகின்ற



## மருத்துவ முகாம்

தெல்லிப்பழை கிராமத்துப் பாடசாலையான மகாஜனக் கல்லூரியை நாட்டிலுள்ள தலைசிறந்த பாடசாலையாக மிளிரச் செய்தவர் அதிபர் தெ.து. ஜயரத்தினம் அவர்கள். இவர் 1945ஆம் ஆண்டு தொடக்கம் 1970ஆம் ஆண்டு வரை அதிபராகக் கடமையாற்றினார். 1960 தொடக்கம் 1970 வரையான காலப் பகுதி கல்லூரியின் பொற்காலமாகும். இக்காலத்தில் ஆண்டு தோறும் பல் கலைக்கழகத்தில் மருத்துவத்துறைக்கு சராசரியாக நான்கு மாணவர்கள் அனுமதி பெற்றனர். 1963ஆம் ஆண்டு 10 மாணவர்களும் 1969 ஆம் ஆண்டு 12 மாணவர்களும் மருத்துவத்துறைக்கு அனுமதி பெற்றனர். இதனை எமது இதயத்தில் நினைவு கூர்ந்து நன்றி செலுத்தும் முகமாகவும் எமது பிரதேசத்து மக்களுக்கு மருத்துவ சேவையை வழங்கும் நோக்குடன் முற்றிலும் இலவசமாக இம் மருத்துவ முகாம் நடத்தப்படுகின்றது.

இடம் : யா/மகாஜனக் கல்லூரி
காலம் : 06.10.2013 ஞாயிற்றுக்கிழமை
நேரம் : காலை 9.00 மணி மாலை 4.00 மணி வரை

தலைமை
Dr.S.சிறிபவானந்தராஜா
பிரதிப் பணிப்பாளர்,
போதனா வைத்தியசாலை

வைத்திய நிபுணர்கள்: - யாழ்.போதனா வைத்தியசாலை
1. Dr.T.பேரானந்தராஜா - பொது வைத்திய நிபுணர்
2. Dr.S.ரவிராஜ் - சத்திர சிகிச்சை நிபுணர்
3. Dr.R.மருதயினர் - குழந்தை வைத்திய நிபுணர்
4. Dr.M.மலரவன் - கண் வைத்திய நிபுணர்

1. Dr.M.உமாசங்கர்
வைத்திய அத்தியட்சகர்,
மாவட்ட வைத்தியசாலை,
தெல்லிப்பழை.
2. Dr.T.பிரகாசன்
மாவட்ட வைத்திய அதிகாரி,
மாவட்ட வைத்தியசாலை,
சங்கானை.
3. Dr.N.சிறிஸ்கந்தராஜா
சிரேஷ்ட வைத்திய அதிகாரி,
யாழ் போதனா வைத்தியசாலை.
4. Dr.K.இளங்கோஞானியார்
சிரேஷ்ட வைத்திய அதிகாரி,
யாழ் போதனா வைத்தியசாலை.
5. Dr.K.இராஜசேகரன்
சிரேஷ்ட வைத்திய அதிகாரி,
யாழ் போதனா வைத்தியசாலை.
6. Dr.N.ரவீந்திரன்
சிரேஷ்ட வைத்திய அதிகாரி,
யாழ் போதனா வைத்தியசாலை.
7. Dr.K.செல்வஸ்கந்தன்
சிரேஷ்ட வைத்திய அதிகாரி,
யாழ் போதனா வைத்தியசாலை.
8. Dr.P.நந்தகுமாரன்
பொது சுகாதார வைத்திய அதிகாரி,
தெல்லிப்பழை.
9. Dr.N.யோகேஸ்வரன்
பாடசாலை வைத்திய அதிகாரி
10. Dr.S.பாலகுமார்
பிராந்திய பல்வைத்திய அதிகாரி.

1. இரத்ததானம்
இரத்த வங்கி, யாழ் போதனா வைத்தியசாலை
2. பற்சிகிச்சைப்பிரிவு
பிராந்திய பற்சிகிச்சைப் பிரிவு
பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை
3. பாடசாலைச்சிறுவர்கள் மருத்துவப்பிரிவு
பிராந்திய பாடசாலை மருத்துவப் பிரிவு
பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை
4. பொது சுகாதார பிரிவு
சுகாதார வைத்தியப் பணிமனை, தெல்லிப்பழை.
5. ஆய்வுகூடப்பரிசோதனை
யாழ்.போதனா வைத்தியசாலை
மாவட்ட வைத்தியசாலை, தெல்லிப்பழை

நோயாளியை வைத்தியப்பரிசோதனை செய்தல், நோய்க்குச் சிகிச்சை வழங்குதல், மருந்து வழங்குதல், வைத்தியக்குறிப்பேடு,கையேடு வழங்குதல் என்பன முற்றிலும் இலவசமாக வழங்கப்படவுள்ளது.

எங்கள் பிரதேசத்திலுள்ள மக்களுக்கு வைத்திய உதவி தேவையாயின் மேற்படி வைத்திய முகாமிற்கு வருகை தந்து இவற்றின் பெரும் பயன்களைப் பெற்றுக் கொள்ளவும். மிகவும் திறமையும், சிறந்த அனுபவமும், நிபுணத்துவ ஆற்றலும் உள்ள வைத்தியர்கள் வருகை தந்து இப் பணியாற்ற இருப்பதனால் உங்களுக்கு பயன்அதிகம் கிடைக்கும்.

தங்களிடம் வைத்தியப் பரிசோதனை தொடர்பான பதிவுக் குறிப்புக்கள் இருப்பின் அவற்றையும் கொண்டு வரவும்.

நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்
"அனைவரையும் அன்புடனும் கருணையுடனும் அழைக்கின்றோம்."

(சி/12641)
(7.6)

நூற்றாண்டு விழாச்சபை



உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111



## முதலாம் ஆண்டு நினைவஞ்சலியும் அழைப்பும்



தோற்றம் 12 * 05 * 1966
மறைவு 13 * 10 * 2012

செல்வி இராசையா சறோஜினி

கடந்த வருடம் சிவபதமடைந்த எமது அன்புத் தெய்வம் செல்வி இராசையா சறோஜினி அவர்களின் முதலாம் ஆண்டு நினைவுதினம் இன்று (03.10.2013) வியாழக்கிழமை மு.ப.11.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்களும் வருகை தந்து அன்னாரது ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

கீரிமலை வீதி,சித்தன்கேணி,
ஸ்ரீ நாககன்னி அம்மன் ஆலயம்.

இராசையா குடும்பத்தினர்.



## TCT மல்ரி ட்ரேட் சென்ரர்

ஆசிரியர் தினத்தை முன்னிட்டு உங்கள் ஆசான்களுக்கு அன்பளிப்புக்களை வழங்க விரும்புவீர்கள் தானே?

வருகை தாருங்கள்

TCT மல்ரி ட்ரேட் சென்ரருக்கு....

உங்கள் மனம் கவர்ந்த அன்பளிப்பு பொருள்களை எண்ணங்களுக்கு ஏற்ப தேவையான வடிவங்களில், அளவுகளில் மலிவு விலையில் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.

மொத்தமாக கொள்வனவு செய்யும் வாடிக்கையாளர்களுக்கு விசேட விலைக்கழிவு வழங்கப்படும்.

ஆசிரியர் தினம் சிறப்பாக அமைவதற்கு எமது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்

TCT மல்ரி ட்ரேட் சென்ரர்
நாவலர் றோட், யாழ்ப்பாணம்.

(C/12542)(10.6)

T.P:
021 745 1895, 077 751 1285, 021 222 8025

# சுயநிர்ணய உரிமை வேண்டும் உலகுக்கு உணர்த்த தீர்மானம்

## மு.கா. செயலர் ஹசனலி தெரிவிப்பு

கொழும்பு, ஒக். 3

"அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தைப் பலப்படுத்துவது தொடர்பான பிரேரணை கிழக்கு மாகாண சபையில் நிறைவேற்றப்பட்டதனூடாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் நிலைப்பாட்டை சர்வதேசத்திற்கு நாம் தெளிவாக எடுத்துக் கூறியுள்ளோம்" - என்று தெரிவித்தார் அக்கட்சியின் செயலாளர் நாயகம் எம்.ரி. ஹசனலி.

"சிறுபான்மையின் மக்கள் சுய நிர்ணய உரிமையுடன் வாழ அரசு வழிவிட வேண்டும். இனியும் எம்மைத் தனது காலடியில் அரசு விழச் சொன் னால் கிழக்கில் மட்டுமல்ல, நாடளாவிய ரீதியில் பெரும் மாற்றத்தை ஏற் படுத் துவோம்" - என்றும் அவர் குறிப்பிட்டார்.

கிழக்கு மாகாணசபையில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் குழுத் தலைவர் ஏ.எம். ஜெமீல் சமர்ப்பித்த 13 இற்கு ஆதரவான பிரே ரணை நேற்று முன்தினம் 15 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது. இது தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே மு.காவின் பொதுச்செயலாளர் ஹசனலி மேற் கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

"அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்தைப் பலப்படுத்துமாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் நாம் எழுத்து மூலம் தெரிவித்திருந்தோம். அத்துடன், எமது கட்சியின் பேராளர் மாநாட்டிலும் இது தொடர்பில் தீர்மானத்தை நிறைவேற்றியிருந்தோம். ஆனால், எமது கோரிக்கைகளுக்கு அரசு செவிசாய்க்கவில்லை.

இந்நிலையில், எமது கட்சியானது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் அரச கட்சியின் அமைச்சர் ஒருவர் உட்பட இரு உறுப்பினர்களின் உதவியுடன் 13 ஆவது திருத்தத்தைப் பலப்படுத்தும் பிரேரணையை 15 மேலதிக வாக்குகளினால் நிறைவேற்றியுள்ளது.

இனியும் இந்த அரசின் அநியாயங்களைநாம் பார்த்துக்கொண்டிருக்கமாட்டோம். சிறுபான்மை மக்களுக்கு இழைக்கப்படும் அநீதிகளுக்கு எதிராக நாம் தொடர்ந்து போராடுவோம் - என்றார்.

# வடக்கு, கிழக்கு மீள் இணைப்பு 'ஒட்டகம் – புலி' கூட்டணி திட்டம்

## கிழக்கு தீர்மானத்தை சாடுகிறார் குணதாஸ

கொழும்பு, ஒக்.3

"வடக்கு, கிழக்கை மீள இணைப்பதற்கு 'ஒட்டகம் - புலி' கூட்டணி முயற்சிக்கின்றது. இதற்கான ஆரம்பக்கட்ட வியூகமே கிழக்கு மாகாணசபைத் தீர்மானம்."

இவ்வாறு தெரிவித்துள்ளார் தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் தலைவர் கலாநிதி குணதாச அமரசேகர.

பிரிவினைவாத முயற்சிக்கு சிங்கள உறுப்பினர்கள் சிலரும் துணை போனமை கவலையளிக்கின்றது என்றும், மு.காவை அரசுடன் வைத்திருப்பது இனியும பொருந்துமா என அரசு சிந்திக்கவேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

அரசமைப்பின் 13ஆவது திருத்தத்துக்கு ஆதரவாக கிழக்கு மாகாணசபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது,

"வடக்கு, கிழக்கு மாகாணங்களை மீள இணைப்பதற்கான அரசியல் சட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஈடுபட்டுள்ளது. இதற்குப் பூரண ஒத்துழைப்பை வழங்கும் வகையில் மு.கா. தீர்மானம் கொண்டுவந்து கிழக்கு மாகாணசபையில் நிறைவேற்றியுள்ளது. இது மிகவும் பயங்கரமான நடவடிக்கையாகும். அரசு இது சம்பந்தமாக முழு கவனத்தையும் செலுத்த வேண்டும். அரசில் இருந்துகொண்டு மு.கா., அரச விரோதச்செயல்களில் ஈடு படுகின்றது" என்றார் அவர்.

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

## சம்பந்தன்

பிரேரணை நேற்று முன்தினம் கடும் அமளிக்கு மத்தியில் 15 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது. இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த சம்பந்தன் மேலும் தெரிவித்ததாவது,

கிழக்கு மாகாணசபையில் அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தைப் பலப்படுத்துவது தொடர்பான பிரேரணையை சமர்ப்பித்து - அதனை விவாதத்திற்கு கொண்டுவரச் செய்து - வாக்கெடுப்புக்குத் தூண்டிய ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸினரின் செயற்பாட்டை நாம் வரவேற்கின் றோம். இவர்களுடன் எமது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்களும் சேர்ந்து குரல் கொடுத்துள்ளனர்.

இறுதியில் மு.கா. மற்றும் கூட்டமைப்பு உறுப்பினர்களின் இடைவிடா முயற்சியி னால் 15 மேலதிக வாக்குகளினால் இந்தப் பிரேரணை வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டுள்ளது.

சிங்கள அமைச்சர் ஒருவர் உட்பட அரச கட்சியைச் சேர்ந்த இருவர்கூட இந்தப் பிரேரணைக்கு ஆதரவாக வாக்களித்துள்ளனர். ஐக்கிய தேசியக் கட்சியில் உள்ள முஸ்லிம் உறுப்பினரும் இந்தப் பிரேரணைக்கு ஆதரவாக வாக்களித்துள்ளார். இந்தப் பிரேரணைக்கு எதிராக அரச கட்சியைச் சேர்ந்த ஒரேயொரு உறுப்பினர் மட்டும் வாக்களித் துள்ளார்.

அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் மற்றும் தேசிய காங்கிரஸ் ஆகிய கட்சிகளைச் சேர்ந்த உறுப்பினர்கள் இந்த வாக்கெடுப்பில் கலந்துகொள்ள வில்லை.

சிறுபான்மை மக்களுக்கு மாகாணசபைகள் ஊடாக அதிகூடிய அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டும் என்பதையும், இதனை பெரும்பான்மையின் சிங்கள உறுப்பினர்களும் விரும்புகின்றனர் என்பதையும் இந்தப் பிரேரணை நிறைவேற்றம் எடுத்துக் காட் டுகின்றது. இதனை அரசு விளங்கிக் கொள்ள வேண்டும் - என்றார். (த)

## சிங்களவரிடம்

பகிர்வு தொடர்பில் ஜாதிக ஹெல உறுமய, தேசிய சுதந்திர முன்னணி, தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம், பொதுபல சேனா, இராவணசேனா ஆகிய சிங்கள இனவாதக் கூட்டமைப்பினர் சிங்கள மக்களிடம் பொய்யான பரப்புரைகளைச் செய்து வருகின்றனர்.

பொலிஸ் அதிகாரம் மாகாண சபைக்கு வழங்கப்பட்டால் பொலிஸ்மா அதிபர் விசாரணைக் குழுவை வட மாகாணத்துக்கு அனுப்புவதானால் முதலமைச்சரின் அனுமதியைப் பெற வேண்டும் என்று இந்த இனவாதக் கூட்டணி கூறி வருகின்றது.

ஜனாதிபதியோ அல்லது பொலிஸ்மா அதிபரோ முதலமைச்சருக்கு அறிவித்துவிட்டுத் தேசிய பொலிஸ் படையணியை எந்த வேளையிலும் மாகாணத்துக்கு அனுப்பலாம். முதலமைச்சரின் அனுமதி பெறப்பட வேண்டும் என்று சட்டத்தில் கூறப்படவில்லை.

சட்டத்தில் இல்லாததைச் சொல்லி சிங்கள மக்களை பிழையாக வழிநடத்த வேண்டாம்.

இந்தியாவும், அமெரிக்காவும் இங்கு வந்துதான் இந்த நாட்டில் அதிகாரப் பகிர்வை அறிமுகப்படுத்தினார்கள் என்று சொல்கின்றார்கள்.

அதுவும் பொய். பண்டார நாயக்கா- செல்வா ஒப்பந்தத்திலேயே அதிகாரப் பகிர்வு குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே இந் நாட்டில் அதிகாரப் பகிர்வை அறிமுகப்படுத்தியது.

எனவே இந் நாட்டில் தமிழ் முஸ்லிம் மக்களை பயமுறுத்தி சிங்கள மக்களுக்குப் பொய் கூறி அரசியல் செய்வதை இனவாதிகள் நிறுத்த வேண்டும்.

பழைய இனவாத வரலாற்றைத் தலைநகரிலும், நாட்டில் எநந்தப் பகுதியிலும் இனி எவரும் திரும்பவும் எழுத முடியாது. நாம் வந்த வழியில் திரும்பி மீண்டும் பயணிக்கவும் முடியாது. அதற்கு என் உயிர் போனாலும் விடமாட்டேன் என்றார். (த-5)

## மாநகர

உண்ணாவிரத போராட்டம் நடத்தி கொண்டு இருக்கின்றார்.

அவர் மீது ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொள்ள உள்ளதுடன் ஊழியர்களிடம் பணம் பெற்றது தொடர்பாகவும் விசாரணைகள் மேற்கொள்ளப்படவுள்ளது.

அதேவேளை கடந்த சில மாதங்களுக்கு முன்பு குறித்த உறுப்பினர் யாழில் நடைபெற்ற கொள்ளை சம்பவம் ஒன்றுடன் தொடர்புடையவர் எனும் சந்தேகத்தில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் முற்படுத்தபட்டு இருந்தார். அதேபோல தற்போது எமது சபையின் சுகாதார குழு தலைவரான சுதர்சிங் விஜயகாந்த் பல ஊழியர்களிடம் நிரந்தரம் ஆக்குகின்றேன் என கூறி பணம் பெற்றுள்ளதாக எமக்கு முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்று உள்ளன.

அவ்வாறு அவர்களிடம் பணம் பெற்றவரே உண்ணாவிரத போராட்டம் நடாத்தி கொண்டு இருக்கின்றார்.

அவர் மீது ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொள்ள உள்ளதுடன் ஊழியர்களிடம் பணம் பெற்றது

தொடர்பாகவும் விசார ணைகள் மேற்கொள்ளப்படவுள்ளது.

அதேவேளை கடந்த சில மாதங்களுக்கு முன்பு குறித்த உறுப்பினர் யாழில் நடைபெற்ற கொள்ளை சம்பவம் ஒன்றுடன் தொடர்புடையவர் எனும் சந்தேகத்தில் பொலிசாரால் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் முற்படுத்தபட்டு இருந்தார்.(த-7)

## வெளிநாட்டு

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மாகாணசபை தேர்தலில் வெற்றி பெற்றுள்ள தமிழ் தேசியக் கூட்டமைப்பு வாக்காளார்களுக்கான அதன் பொறுப்புகளை நிறைவேற்ற வேண்டும். தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தேர்தல் அறிக்கையில் சில உணர்ச் சிகரமான விடயங்கள் உள்ளடக்கப் பட்டிருப்பது துரதிருஷ்டவசமானதாகும். இப்போது தேவைப்படுவது நிதானத் தன்மையோடு மீள் நல்லிணக்கத்தை நோக்கிய நகர்வதாகும். மனித இனத்துக்கு விரோதமான செயற்பாடுகளில் ஈடுபட்டிருந்தவரான பயங்கரவாதத் தலைவரை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் புகழ்ந்து பாராட்டுவதானது அவர்களின் ஆட்சி நிர்வா கத்தை ஆரம்பிக்கும் வேளை யில் நன்றாக அமையாது. புதிதாகத் தெரிவு செய்யப்பட் டுள்ள சபையுடன் இணைந்து செயல்பட அரசு தயாராக இருக் கிறது.

அரசியல் நடவடிக்கைகளை இப்போது முழுமையாகச் செயல்படுவதற்கு தொடங்கியுள்ளன.

நான்கு வருட குறுகிய காலத்தில் அரசு நீண்ட காலம் பிடிக்கும் விடயங்கள் உட்பட பல சவாலான காரியங்களை செயல்படுத்தி வருகின்றத. இடம் பெயர்ந்த மக்களின் மீள்குடியேற்றம், முன்னாள் போராளிகளுக்கு புனர்வாழ்வளித்தல், தொழில்துறைப் பயிற்சிகள், மும்மொழித்திட்டச் செயற்பாடு மற்றும் கல்விச் சுகாதார மேம்பாடு முதலியன இவைகளில் அடங்கும் - என்றார். (த-ப)

## வடக்கு

நடத்தி வருகின்றது. கொழும்பில் நேற்றிரவு இடம்பெற்ற கலந்துரையாடலில் இறுதி முடிவு எட்டப்படும் என்று எதிர் பார்க்கப்பட்டபோதும் அது இடம் பெறவில்லை.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தலைமையில் இடம்பெற்ற இந்தக் கலந்துரையாடலில் முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் மற்றும் சகல அங்கத்துவக் கட்சித் தலைவர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

மாலை 6 மணியளவில் ஆரம்பமான கலந்துரையாடல் இரவு 9 மணி வரை நீடித்தது.

இந்தக் கலந்துரையாடலில் ஆரம்பத்தில் தலைவர் இரா. சம்பந்தன் உரையாற்றிய தைத் தொடர்ந்து முதலமைச் சர் க.வி.விக்னேஸ்வரன் உரையாற்றினார். அதன் பின் னர் கலந்துரையாடல்ஆரம்பமானது.

இந்தக் கலந்துரையாடலில், இலங்கைத் தமிழரசுக் கட்சி தனக்கு இரண்டு அமைச்சுப் பதவிகள் வழங்கப்பட வேண்டும் என்பதில் உறுதியாக இருந்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது. மறுபுறத்தில் எஞ்சிய மூன்று கட்சிகளும் ஒவ்வொரு கட்சிக்கும் ஒவ்வொரு அமைச்சுப் பதவி வழங்கப்பட வேண்டும் என விடாப்பிடியாக இருந்தனர்.

நீண்ட நேர விவாதத்தின் பின்னர், அமைச்சுப் பதவிகள் தேவையானவர்கள் கட்சித் தலைமைக்கு விண்ணப்பிக்குமாறும் அதன் பின்னர் அது தொடர்பில் ஆராயலாம் என்றும் தெரிவிக்கப்பட் டுள்ளது.

அத்துடன் நாளை வெள்ளிக்கிழமை காலை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அங் கத்துவக் கட்சித் தலைவர்க ளிடையேகலந்துரையாடல் ஒன்று நடைபெறவுள்ளது. (த-5)

## இலங்கை

நிலைப்பாடு குறித்து கூறப்பட் டுள்ளதாவது:-

ஐ.நா. மனிதஉரிமை ஆணையாளர் பிள்ளையின் அறிக்கையை அமெரிக்கா வரவேற்கிறது. கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரத்தின் மீதான கட்டுப்பாடுகள், மனித உரிமை ஆர்வலர்கள், ஊடகவியலாளர்கள் மீதான தாக்குதல்கள், மற்றும் நீதித்துறையில் தலையீடுகள் உள்ளிட்ட விவகாரங்கள் குறித்த ஆணையாளரின் கவலைகளில், அமெரிக்காவும் பங்கு கொள்கிறது.

போருக்குப் பிந்திய பொறுப்புக் கூறும் நடவடிக்கைகளில் அர்த்தமுள்ள முன்னேற்றம் காணப்படாவிட்டால், அனைத்துலக விசாரணை அழைப்புகள் தொடரும் என்ற, ஐ.நா ஆணையாளரின் மதிப்பீட்டை அமெரிக்காவும் சுட்டிக்காட்டுகிறது. என்றுள்ளது. (த)

## தேர்தல்

வழக்கை ஒத்திவைத்துள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனம் அரசமைப்புக்கு முரணானது என்று உயர் நீதிமன் றத்தில் தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் தொடர்ந்த வழக்கு தொடர்பில் கடந்த மாதம் 16ஆம் திகதி விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டன.

இந்நிலையில், குறித்த மனுக்கள் நேற்று மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போதே வழக்கை எதிர்வரும் 23 ஆம் திகதி வரை ஒத்திவைப்பதாக நீதிமன்றம் அறிவித் துள்ளது.

## 2 ஆயிரம்

பிரதேச செயலர் சிறீகாந்த குமார்.

மன்னார் எருக்கலம்பிட்டியைச் சேர்ந்த முஸ்லிம் ஒருவர் பரப்புக்கடந்தானில் தனக்கு 500 ஏக்கர் நிலம் உள்ளது எனத் தெரிவித்து அதனைக் கையகப்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டுள்ளதாகவும், பேசாலையைச் சேர்ந்தவர்கள் இருவரும் 1,500 ஏக்கர் வரையான காணிகள் தமக்குச் சொந்தமானவை எனத் தெரிவித்துக் காடழிப்புப் பணியில் ஈடுபட்டுள்ளதாகவும் பொது அமைப்புக்கள் குற்றம் சாட்டுகின்றன.

இது குறித்து பரப்புக் கடந்தான் விவசாய அமைப்பின் செயலாளர் கருத்துத் தெரிவிக்கையில்:-

கொக்குமோட்டைப் பகுதியில் பேசாலையைச் சேர்ந்த ஒருவர் 500 ஏக்கர் காணியைத் தன்னுடையது என உரிமை கோரி நேற்றுமுன்தினம் எல்லைக் கற்கள் பதித்து விட்டுச் சென்றுள்ளார். ஆனால் உண்மையில் இவை இந்தப் பிரதேச மக்களின் விவசாயக் காணிகள் இடப்பெயர்வு காரணமாகச் செய்கை பண்ணப்படாமல் உள்ளன.

இது தவிர பேசாலையைச் சேர்ந்த ஒருவரும், எருக்கலம்பிட்டியைச் சேர்ந்த ஒருவரும் 1,500 வரையான ஏக்கரைக் கையகப்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர். இந்தக் காணிகள் 1987,1988 காலப் பகுதியில் அகதிகளுக்கான நிறுவனத்தின் அனுசரணையுடன் அமைக்கப்பட்ட வீட்டுத் திட்டக் கிராமம். இங்கு 300 வரையான குடும்பங்கள் 1990 வரை குடியிருந்தன. பின்னர் ஏற்பட்ட போர் காரணமாக இவர்கள் தற்போது இந்தியாவில் வசித்து வருகின்றனர். இந்த நிலையில் திருட்டுத்தனமாக சிலர் அரசியல் செல்வாக்கு மற்றும் அரச அதிகாரிகளின் உதவியுடன் பொதுமக்களின் காணியைக் கையகப்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர்.

இந்த விடயம் தொடர்பில் பிரதேச செயலர், கிராம சேவகர் ஆகியோரிடம் கேட்டபோது அவர்கள் அசமந்தப் போக்குடன் செயற்பட்டு வருகின்றனர் - என்றார்.

இது குறித்து பரப்புக்கடந்தான் விளையாட்டுக்கழகச் செயலாளர் கருத்துத் தெரிவிக்கையில்,

எமது விளையாட்டு மைதானக் காணியில் இராணுவம் இருக்கிறது. அவர்களை விலக்கி விளையாட்டு மைதானம் அமைக்க ஏற்பாடு செய்து தருமாறு பிரதேச செயலரிடம் தொடர்பு கொண்டபோது, அவர் இது குறித்து இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. ஆனால் தனி நபர்கள் பெருமளவான காணிகளை கையகப்படுத்துவதற்கு உடந்தையாகப் பிரதேச செயலர் செயற்படுகிறார் என்று குற்றம் சாட்டினார்.

சம்பவம் தொடர்பில் மாந்தை மேற்குப் பிரதேச சபை உறுப்பினர் ஒருவர் கருத்துத் தெரிவிக்கையில்;

மக்கள் நலனில் அக்கறை கொள்ள வேண்டிய அரச அதிகாரிகள் அரசியல் தலைவர்கள் போல் செயற்படுகின்றனர். அவர்களைத் தொடர்பு கொண்டு மக்கள் பிரச்சினை, காணி அபகரிப்பு தொடர்பில் எந்தக் கருத்தையும் முன்வைக்க முடியவில்லை - என்றார்.


இவ்வாறான குற்றச் சாட்டுக்கள், காணி அபகரிப்பு தொடர்பில் மாந்தை மேற்கு பிரதேச செயலரிடம் தொடர்பு கொண்ட போது; கிராமிய பொது அமைப்புகளின் குற்றச்சாட்டை முற்றாக மறுத்தார்.

எமக்கு அரச காணிகள் தொடர்பிலேயே நடவடிக்கை எடுக்க அதிகாரம் உண்டு. தனியார் காணிகள் குறித்து எதுவும் செய்ய முடியாது. குறிப்பிட்ட மூன்று தனி நபர்களும் 1822ஆம் ஆண்டு, அதற்கு அண்மைய ஆண்டுகளில் பெற்ற உறுதியைக் கொண்டுள்ளனர். இவர்களுக்கு மேலதிகமான நேற்று ஒருவர் குறித்த காணிகளில் ஒன்று தன்னுடையது என்று உரிமை கோரியுள்ளார்.

எனவே இது நீதிமன்றம் ஊடாகவே தீர்க்கப்பட வேண்டிய பிரச்சினை. பொது அமைப்புக்கள் மக்களின் காணிகள்தான் இவை என்பதற்கான ஆவணங்களுடன் பிரதேச செயலகக் காணிப் பிரிவுடன் தொடர்பு கொண்டால் உரிய நடவடிக்கை எடுக்க முடியும் - என்றார். (ஐ)

# வடக்கு மாகாணத்துக்கு நேற்று முதலாவது தங்கம்

## குண்டு எறிதலில் நிமலேந்திரா சாதனை



யாழ்ப்பாணம், ஒக். 3

கொழும்பு சுகததாச விளையாட்டு மைதானத்தில் நடைபெறும் பாடசாலைகளுக்கு இடையிலான தேசிய மட்டத் தடகளப் போட்டியில் வடமாகாணத்துக்கு முதலாவது தங்கப் பதக்கம் கிடைத்துள்ளது.

நேற்றுப் புதன்கிழமை இடம் பெற்ற 21 வயதுப் பிரிவு ஆண்களுக்கான குண்டு எறிதல் போட்டியில் உடுப்பிட்டி அமெரிக்க மிசன் கல்லூரி மாண வன் நிமலேந்திரா 13.60 மீற்றர் தூரத்தை எறிந்து முதலாவது இடத்தைப் பெற்றுத் தங்கப் பதக்கத்தினைப் பெற்றுள்ளார். (த-23)

# சென்.நீக்கிலஸ் வெற்றி



யாழ்ப்பாணம், ஒக். 3

யாழ்.உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் ஊரெழு றோயல் விளையாட்டுக் கழகம் நடத்தும் 'யாழ்ப்பாணச் சமர்' உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம் பெற்ற ஆட்டத்தில் நாவாந்துறை சென்.நீக்கிலஸ் விளையாட்டுக் கழக வெற்றி பெற்றுள்ளது.

குருநகர் பாடும்மீன் 'பி' அணிக்கும், நாவாந்துறை சென்.நீக்கிலஸ் விளையாட்டுக் கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் இரு அணியினரும் தலா 3 கோல்களைப் பெற்றமையால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.

வெற்றி தோல்வியைத் தீர்மானிப்பதற்காக 5 சமநிலை தவிர்ப்பு உதைகள் வழங்கப்பட்டன.

இதில் நாவாந்துறை சென். நீக்கிலஸ் விளையாட்டுக்கழக அணி 5:4 என்ற கோல்க் கணக்கில் வெற்றி பெற்றது. (த-23)




# இன்றைய ஆட்டம்

யாழ்ப்பாணம்,ஒக்.3

யாழ்.உதைபந்தாட்ட லீக்கினால் அங்கத்துவக் கழகங்களுக்கு இடையே நடத்தப்படும் லீக் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் இன்று வியாழக்கிழமை மாலை 4 மணிக்கு யாழ். துரையப்பா விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெறும் ஆட்டத்தில் பாஷையூர் சென்.அன்ரனிஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து விக்னேஸ்வரா விளையாட்டுக்கழகம் மோதும். (த-23)

# ஏழு இலக்குகளால் ஜொனியன்ஸ் வெற்றி



வலி .வடக்கு, ஒக் .3

யாழ்ப்பாணம் நியூ ஸ்ரார் விளையாட்டுக் கழகம் யாழ். மாவட்ட கிரிக்கெட் விளையாட்டுக் கழகங்களுக்கு இடையே நடத்தி வரும் 20/20 கிரிக்கெட் போட்டியில் ஜொனியன்ஸ் விளையாட்டுக் கழகம் 07 இக்குகளினால் வெற்றி பெற்றுள்ளது.

கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் திருநெல்வேலி இந்து இளைஞர் விளையாட்டுக் கழகமும் யாழ்ப்பாணம் ஜொனியன்ஸ் விளையாட்டுக் கழகமும் மோதிக் கொண்டன.

இதில் திருநெல்வேலி இந்து இளைஞர்விளையாட்டுக்கழகம் 17.5 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் அனைத்து இலக்குகளையும் இழந்து 77 ஓட்டங்களைப் பெற்றது.

ஜெயராஜ் 15 ஓட்டங்களையும், நிஷாந்தன் 12 ஓட்டங்களையும் பெற்றதுடன் உதிரிகளாக 09 ஓட்டங்களும் பெறப்பட்டன.

ஜொனியன்ஸ் விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த காண்டீபன் 04 பந்துப்பரிமாற்றங்கள் பந்து வீசி ஓர் ஓட்டமற்ற பந்துப் பரிமாற்றத்துடன் 14 ஓட்டங்களுக்கு 04 இலக்குகளையும் சஞ்சயன் 04 பந்துப்பரிமாற்றங்கள் பந்து வீசி 17 ஓட்டங்களுக்கு 02 இலக்குகளையும் அகிலன், சஜன் ,பிருந்தாபன் முறையே 07, 08, 21 ஓட்டங்களைக் கொடுத்து தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினார்கள்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய ஜொனியன்ஸ் விளையாட்டுக் கழகம் 9.2 பந்துப்பரிமாற்றங்களில் 03 இலக்குகளை இழந்து 80 ஓட்டங்களை பெற்று வெற்றி இலக்கை அடைந்தது.

ஆட்டமிழக்காது கானாமிர்தன் 33 ஓட்டங்களையும், சஞ்சயன 18 ஓட்டங்களையும் பெற்றதுடன் உதிரிகளாக 08 ஓட்டங்களும் பெறப்பட்டன.

திருநெல்வேலி இந்து இளைஞர் விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த சுபாஷ், கஜன், சிவந்திரன் முறையே 20, 22, 26 ஓட்டங்களைக் கொடுத்து தலா ஒரு இலக்கைக் கைப்பற்றினார்கள். (த-86)

# சுப்பர்-8 ஆட்டத்துக்கு தகுதி பெற்ற அணிகள்



யாழ்ப்பாணம், ஒக். 3

யாழ்.உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் ஊரெழு றோயல் விளையாட்டுக் கழகம் நடத்தும் 'யாழ்ப்பாணச் சமர்' உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் சூப்பர்-8 ஆட்டத்துக்கு தகுதி பெற்ற அணிகளின் விவரம் வருமாறு:-

ஊரெழு றோயல் விளையாட்டுக் கழகம், மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக் கழகம், குருநகர் பாடும்மீன் விளையாட்டுக் கழகம், இளவாலை யங் ஹென்றீசியன் விளையாட்டுக் கழகம், நாவாந்துறை சென்.நீக்கிலஸ் விளையாட்டுக் கழகம், நாவாந்துறை சென்.மேரிஸ் விளையாட்டுக் கழகம், மானிப்பாய் றெட்.றேஞ்சர்ஸ் விளையாட்டுக் கழகம், வல்வை விளையாட்டுக் கழகம் (த-23)

# தெல்லிப்பழை மகாஜனவின் கரப்பந்தாட்டப் போட்டிகள்



வலி.வடக்கு, ஒக்.3

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியின் புகழ் பூத்த அதிபர் நவமகாஜனன் சிற்பி அமரர் தெ.து.ஜயரத்தினத்தின் 100 ஆவது பிறந்த நாளையொட்டி விழாக்குழுவின் ஏற்பாட்டில் எதிர்வரும் 07ஆம் திகதி திங்கட்கிழமை பாடசாலைகளுக்கு இடையேயான கரப்பந்தாட்டப் போட்டிகள் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளன.

19 வயதுப் பிரிவு ஆண்களுக்கான கரப்பந்தாட்ட போட்டிகள் முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்தப் போட்டியில் கலந்து கொள்ளவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:-

வயாவிளான் மத்திய மகா வித்தியாலயம் எதிர் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி.

ஆவரங்கால் நடராசா இராமலிங்கம் வித்தியாலயம் எதிர் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி.

இளவாலை மெய்கண்டான் வித்தியாலயம் எதிர் புத்தூர் சோமஸ்கந்தக் கல்லூரி.

இரண்டாம் சுற்றில் இருந்து அளவெட்டி அருணாசலம் வித்தி யாலயம் மோதவுள்ளது. (த-86)



கொழும்பு சுகததாச விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்று வரும் பாடசாலைகளுக்கு இடையிலான தேசிய மட்டத் தடகளப்போட்டியில் பங்கு கொள்ளும் உடுவில் மகளிர் கல்லூரி வீராங்கனைகள், பொறுப்பாசிரியர்கள் மற்றும் அதிபருடன் காணப்படுகின்றனர். இவர்கள் வடமாகாணத்தில் இடம்பெற்ற தடகளப் போட்டிகளில் 13 பதக்கங்களைப் பெற்றமை குறிப்பிடத்தக்கது. (த-23)

# ராஜஸ்தான் அசத்தல் வெற்றி

சம்பியன்ஸ் லீக் 20/20 கிரிக்கெட் போட்டியில் ராஜஸ்தான் றோயல்ஸ் அணி 4 விக்கெட் வித்தியாசத்தில் ஒடாகோ அணியை வீழ்த்தியது.

இதனால், இந்த பருவகாலத்தில் தொடர்ந்து வெற்றி பெற்று வந்த ஒடாகோ அணியின் சாதனைக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது. மேலும், உள்ளூரில் ராஜஸ்தான் பெற்ற தொடர் வெற்றிகளின் எண்ணிக்கை 15 ஆக உயர்ந்துள்ளது.

இந்த வெற்றியின் மூலம், றோயல்ஸ் அணி ஏ பிரிவில் 16 புள்ளிகளுடன் முதலிடத்தைப் பிடித்தது. இதனால், தனது அரையிறுதிப் போட்டியையும் உள்ளூரிலேயே விளையாடும் வாய்ப்பைப் பெற்றது.

ராஜஸ்தான் மாநிலம், ஜெய்ப்பூரில் செவ்வாய்க்கிழமை இரவு இந்த ஆட்டம் நடைபெற்றது. நாணய சுழற்சியில் வென்ற றோயல்ஸ் அணி களத்தடுப்பினை தேர்வு செய்தது.



பின்னர் ஒடாகோ வீரர்கள் துடுப்பெடுத்தாட செய்யத் தொடங்கினர். றோயல்ஸ் அணித் தலைவர் ட்ராவிட் ஊகித்ததுபோல், தொடக்கத்திலேயே ஒடாகோ வீரர்கள் தங்களது விக்கெட்டுகளை இழந்தனர். ராஜீவ் சுக்லாவின் பந்து வீச்சில் அந்த அணியின் முன்னணி வீரர்கள் பெவிலியன் திரும்பினர். புரூம் (11 ஓட்டங்கள்), ரூதர்போர்ட் (5 ஓட்டங்கள்), மக்கலம் (0), புரூடர்(0) ஆகிய வீரர்கள் ஒருவர் பின் ஒருவராக வெளியேறினர். இதனால், அந்த அணி 4.3 ஓவர்களில் 4 விக்கெட்டுகளை இழந்து 21 ஓட்டங்கள் எடுத்து தத்தளித்தது.

அடுத்து களமிறங்கிய வீரர்கள், ஓரளவு அதிரடியாக விளையாட அணியின் ஓட்ட எண்ணிக்கை உயர்ந்தது. சிறப்பாக ஆடி வந்த தஸ்சாட்டே 26 ஓட்டங்களிலும், நீஷாம் 32 ஓட்டங்களிலும் ஆட்டமிழந்தனர்.

நாதன் மக்கலம் ஆட்டமிழக்காமல் 28 ஓட்டங்களை எடுத்தார். 20 ஓவர்கள் முடிவில் ஒடாகோ அணி 7 விக்கெட்டுகளை இழந்து 139 ஓட்டங்களை எடுத்தது. றோயல்ஸ் தரப்பில் ராஜீவ் சுக்லா 4 ஓவர்கள் பந்து வீசி 23 ஓட்டங்களை மட்டும் அளித்து 3 விக்கெட்டுகளைக் கைப்பற்றினார். இதில், மக்கலம், புரூடர் ஆகியோரை, தங்களது ஓட்டக் கணக்கை தொடங்கும் முன்னே சுக்லா வெளியேற்றினார்.

கூப்பர் 2 விக்கெட்டுகளையும், வாட்சன் மற்றும் தாம்பே ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.றோயல்ஸ் வீரர்களின் பந்து வீச்சில் தடுமாறிய ஒடாகோ, இந்த ஆட்டத்தில் 3 சிக்ஸர் மற்றும் 15 பவுண்டரிகளை மட்டுமே அடித்தது.

குறைவான இலக்கை எளிதாக எட்டி விடலாம் என்று எண்ணி களமிறங்கினர் றோயல்ஸ் வீரர்கள். ஆனால், ராவிட் 10 ஓட்டங்களிலேயே ஆட்டமிழந்தார். அவர் அடிந்த பந்தை ஒடாகோ வீரர் பியர்ட் அபாரமாக பிடி எடுத்தார்.

ராவிட்டைத் தொடர்ந்து சம்சன் (5 ஓட்டங்கள்), வாட்சன் (2 ஓட்டங்கள்), பின்னி (1) ஆகியோர் ஒருவர் பின் ஒருவராக பவிலியன் திரும்பினார்.

இதனிடையே, தொடக்க வீரராகக் களமிறங்கிய இளம் வீரர் அஜிங்யா ரஹானே நிதான ஆட்டத்தை வெளிப்படுத்தினார். அதனால் அணியின் ஓட்ட எண்ணிக்கை ஓரளவு உயர்ந்தது. 12.1 ஓவர்களில் 4 விக்கெட் இழப்புக்கு 72 ஓட்டங்கள் என்ற நிலையில் ராயல்ஸ் இருந்தது. பின்னர் களமிறங்கிய ஹோட்ஜ் ரஹானேவுடன் ஜோடி சேர்ந்தார்.

-சிறப்பாக ஆடி வந்த ரஹானே 44 பந்துகளில் 7 பவுண்டரிகளுடன் அரை சதம் கண்டார். ஆனால், 52 ஓட்டங்கள் எடுத்திருந்தபோது அவரை ஒடாகோ பந்து வீச்சாளர் நீஷாம் வெளியேற்றினார்.

இதனால், ஆட்டத்தில் பரபரப்பு தொற்றிக் கொண்டது. ஆனால், தன் பொறுப்பை உணர்ந்த ஹோட்ஜ், அதிரடியாக விளையாடினார். இதனால், வெற்றியை நோக்கி றோயல்ஸ் பயணித்தது. இறுதியில் 19.1 ஓவரில் 6 விக்கெட்டுகளை இழந்து 142 ஓட்டங்கள் எடுத்து றோயல்ஸ் அணி வெற்றி பெற்றது.

இறுதிவரை ஆட்டமிழக்காத ஹோட்ஜ் 52 ஓட்டங்கள் எடுத்தார். 23 பந்துகளைச் சந்தித்த அவர் 3 சிக்ஸர், 5 பவுண்டரிகளுடன் இந்த ஓட்டங்களை எடுத்தார். ஒடாகோ தரப்பில் நீஷாம் 3 விக்கெட்டுகளை வீழ்த்தினார். ஆட்ட நாயகன் விருதை றோயல்ஸ் வீரர் ராஜீவ் சுக்லா பெற்றார். புள்ளிகள் பட்டியலில் ஒடாகோ அணி 10 புள்ளிகளைப் பெற்று 2ஆம் இடத்தில் உள்ளது. அதற்கு அடுத்தபடியாக மும்பை அணி 6 புள்ளிகளுடன் 3ஆம் இடத்தில் உள்ளது.

ஒடாகோ அணி இந்த ஆட்டத்தில் வெற்றி பெற்றிருந்தால் மும்பை அணியின் அரையிறுதிக் கனவு முற்றிலும் கலைந்திருக்கும். ஆனால், இந்த ஆட்டத்தின் முடிவு, மும்பையின் அரையிறுதிக் கனவை உயிர்ப்பித்தது. (த)

## டோனி தான் றோல் மொடல்



உலகின் பல்வேறு நாட்டு கிரிக்கெட் வீரர்களுக்கு டோனிதான் றோல் மொடல் என தென்னாபிரிக்க வேகப் பந்து வீச்சாளர் கிறிஸ் மோரீஸ் தெரிவித்துள்ளார். சூப்பர் கிங்ஸ் அணிக்காக மோரிஸ் விளையாடி வருகிறார். இந்நிலையில் தனது அணியின் அணித்தலைவர் குறித்து கூறுகையில், உலகம் முழுவதும் உள்ள கிரிக்கெட் வீரர்களுக்கு டோனி தான் றோல் மொடலாகத் திகழ்கிறார்.


ஒவ்வொரு வீரரின் திறமையை வெளிக்கொண்டு வருவதுடன், இந்தியா உலக சம்பியனாகத் திகழ டோனியின் தலைமைப் பண்பு தான் காரணம்.

கடைசி லீக் ஆட்டத்தை வெற்றிகரமாக முடித்துவிட்டு, அரையிறுதிப் போட்டியில் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்துவோம். என்று தெரிவித்துள்ளார். (த)

## தினேஷ் கார்த்திக் நீக்கப்பட்டது ஆச்சரியம்

ஆஸ்திரேலியாவுக்கு எதிரான இந்திய அணியில் இருந்து தமிழக வீரர் தினேஷ் கார்த்திக் நீக்கப்பட்டது ஆச்சரியமானதாக உள்ளது என கிரண் மோரே தெரிவித்துள்ளார்.

ஆஸ்திரேலியாவுக்கு எதிரான இந்திய அணி தெரிவு செய்யப்பட்டது, இதில் நீண்ட காலமாக அணியில்இடம்பெறாமல் இருந்த யுவராஜ் சிங் இடம் பெற்றுள்ளார்.



இந்நிலையில் இந்திய அணியில் தினேஷ் கார்த்திக் நீக்கப்பட்டது ஆச்சரியமானது என முன்னாள் விக்கெட் காப்பாளரும் முன்னாள் தெரிவுக் குழு தலைவருமான கிரண் மோரே தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் கூறுகையில், துடுப்பாட்ட வீரர் என்ற முறையில் தினேஷ் கார்த்திக் இடம்பெறுவதற்கு தகுதியானவர்.


சம்பியன்ஸ் கிண்ணப் போட்டியில் அவரது ஆட்டம் சிறப்பாக இருந்தது. இருப்பினும் என்ன காரணத்துக்காக அவர் அணியில் இருந்து நீக்கப்பட்டார் என்று தெரியவில்லை.

அவர் அணியில் நிச்சயம் இடம்பெற்றிருக்க வேண்டும், உள்ளூர்போட்டியில் மாற்று விக்கெட் காப்பாளர் தேவையில்லை என தெரிவுக் குழுவினர் கருதி இருக்கலாம்.

இளம் வீரர் ஜெய்தேவ் உன்கட் தெரிவு மிக சரியானதே. அவர் கடந்த சில மாதங்களாக சிறப்பாக செயல்பட்டு வருகிறார்.

ஷேவாக், காம்பீர் ஆகியோரது எதிர்காலம் நிச்சயமாக முடிந்துவிடவில்லை. அதற்கு உதாரணம் யுவராஜ் சிங், அவரது வழியில் ஷேவாக்கும், காம்பீரும் மீண்டும் இடம் பெறுவார்கள் என்ற நம்பிக்கை உள்ளதாகத் தெரிவித்துள்ளார். (த)

## லுங்கியில் கலக்கும் டோனி



நீல நிறத்திலான லுங்கி, மஞ்சள் கலர் சட்டை மற்றும் பச்சைக் கண்ணாடி என அதிரடியாகத் தோற்றமளித்துள்ளார் டோனி.

இந்திய கிரிக்கெட் அணியின் அணித்தலைவர் டோனி உட்பட சென்னை சூப்பர் கிங்ஸ் வீரர்கள் அனைவருமே அசத்தலாக வந்துள்ளனர்.

நல்ல நீல நிறத்திலான லுங்கி, மஞ்சள் கலர் சட்டை மற்றும் பச்சைக் கண்ணாடி என அசத்தலாக இருந்தார் டோனி. இவருடன், அவரது மனைவி சாக்ஷியும் காணப்பட்டார். சுரேஷ் ரெய்னாவோ மஞ்சள் ரி-சேர்ட்டும், கீழே கட்டம் போட்ட பியாமாவும் அணிந்து இருந்தார்.

இதேபோன்றே அல்பி மோர்க்கலும் சுற்றித் திரிந்தார்.

ஆனால் அஸ்வினோ லுங்கி அணியாமல், பியாமாவில் வித்தியாசமாக காணப்பட்டார். இவருடன் துணைக்கு மைக்கல் ஹஸியும் இருந்தார்.

ரவீந்திர ஜடேஜாவுக்குத்தான் லுங்கி நல்ல பொருத்தம். முறுக்கி விட்ட மீசையும், உருட்டுப் பார்வையும், சிவப்பு, கறுப்பு, வெள்ளை கட்டம் போட்ட லுங்கியுமாகக் காட்சியளித்தார். சென்னை சுப்பர் கிங்ஸ் அணியினர் ஏன் இந்த புதுக் கோலத்தில் காணப்பட்டனர் என்று குழப்பம் வரலாம்.

அதாவது, பான்சி வாரம் என்று ஒன்றைக் கொண்டாடினர் சென்னை அணியினர். அதன் பொருட்டே இப்படி எல்லாம் மாற்றம். (த)



நல்ல நீல நிறத்திலான லுங்கி, மஞ்சள் கலர் சட்டை மற்றும் பச்சை கண்ணாடி என அசத்தலாக இருந்தார் டோனி. இவருடன், அவரது மனைவி சாக்ஷியும் காணப்பட்டார்.

# மரண அறிவித்தல்



## செல்லத்துரை மகேந்திரன்

(ஓய்வு பெற்ற நிர்வாக உத்தியோகத்தர் பிராந்திய சுகாதார திணைக்களம்,யாழ்ப்பாணம்.)

வடலியடைப்பைப் பிறப்பிடமாகவும், கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாக கொண்டவருமாகிய செல்லத்துரை மகேந்திரன் நேற்று (02.10.2013) புதன்கிழமை காலமாகிவிட்டார்

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை ஞானம்மா தம்பதியினரின் மகனும், நகுலேஸ்வரியின் அன்புக் கணவரும், பிரதீபன் (முகாமைத்துவ உதவியாளர், பிராந்திய சுகாதார திணைக்களம்,கிளிநொச்சி),விஜிதன் (சுவிஸ்), ஆகியோரின் அன்புத் தந்தையும்,வனிதா, சுதர்சினி (சுவிஸ்), ஆகியோரின் அன்பு மாமனாரும் கஜனி,ஜனுசன்,ஹர்விசன், அஸ்மிதா, அக்ஸாயினி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (03.10.2013) வியாழக்கிழமை பி.ப. 2 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும். தகவல்: குடும்பத்தினர்

## ஆங்கிலம்/ சிங்களம் வகுப்புக்கள்

க.பொ.த (சா/த) - ஆங்கிலம்
பரீட்சை எழுதும் மாணவர்களுக்கு Paper Class
சனி, ஞாயிறு மாலை 5 மணி
Spoken & Grammer சனி, ஞாயிறு மாலை 6 மணி
சிங்களம் அடிப்படையில் இருந்து/ பேச்சு
சனி, ஞாயிறு 4 மணி/ சனி, ஞாயிறு மாலை 6 மணி
சனி, ஞாயிறு மாலை 7 மணி
இடம்: சதாபொன்ஸ் கல்வி நிலையம்
அல்வாய். 021 226 3206 பதிவுகள் இன்று முதல்.

## Wanted Qualified English Lecturer

Apply on before 6th of october

Directors:
**BRITISH COLLEGE OF HIGHER STUDIES**
No 15, Sirambiyady lane, Off Stanley Road, Jaffna.

Contact: 0777730074
0212224550
(சி12187-23-14)

## COMPUTER COURSES

Diploma in Computerized
**Accounting** Tally, Quick Book, Accpac M.Y.O.B

Diploma in
**Video Editing** Premiere Pro CS4, particleIllusion, Pinnacle Studio, Adobe After Effe. Nuendo,

Diploma in
**AutoCAD** 2D & 3D Modeling

Adv. Dip. in
**Hardware & Networking**

புதிய பிரிவுகள் ஆரம்பம்.
DMI COMPUTER EDUCATION
DMI COMPUTER EDUCATION

யாழ்ப்பாணம் No.113, கஸ்தூரியார் வீதி, Tel.: 021-222 4403
நெல்லியடி. M.M.V.வீதி (மத்திய மகளிர்கல்லூரி முன்பாக) Tel. : 021-226 2470
சாவகச்சேரி No.174, கண்டி வீதி, HNB அருகில் Tel. :021-227 0775
சுன்னாகம் No.130 K. K. S. வீதி. ( NSB வங்கி அருகில்) .Tel.:021-224 1970

# மரண அறிவித்தல்

## திருமதி சிவசிதம்பரம் கந்தசாமி



அராலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவசிதம்பரம் கந்தசாமி நேற்றுமுன்தினம் (01.10.2013) செவ்வாய்க்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முத்தையா-பருபதவர்த்தினியின் மூத்த புதல்வியும், காலஞ் சென்ற கந்தசாமியின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்காளான விசுவநாதர்-சிதம்பரம் தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற சிவயோகம் மற்றும் தையல்நாயகி, திலகவதியார் ஆகியோரின் அன்புச் சகோதரியும், புஸ்பாதேவி, பாலசுப்பிரமணியம், சிவானந்தவல்லி (கனடா), கதிர்காம நாதன்(கனடா) ஆகியோரின் அன்புத் தாயும், காலஞ்சென்ற சபாநாய கம், புஸ்பராணி, கணேஸ்வரன்(கனடா), மீரா(கனடா) ஆகியோரின் அன்பு மாமியும், திவ்யா, ஜெகதீஸ்வரன், கரதன்(பிரான்ஸ்), சோபனா(பிரான்ஸ்), துர்யா, ராஜீவ், சத்தியன், கோபிகா, மயூரன்(கனடா), விதுசன்(கனடா), அபர்ணா(கனடா), அபிராம்(கனடா) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், காவேரி, மகிழன், கேதுரா ஆகியோரின் அன்புப் பூட்டியும் அவார்.

அன்னாரின் இறுதிக்கரியைகள் நாளை(04.10.2013) வெள்ளிக்கிழமை காலை 07.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பூனாவோடை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

ஞானியார் ஒழுங்கை, அராலிமத்தி, வட்டுக்கோட்டை. தகவல்: குடும்பத்தினர்.

## மிகப் பிந்திய அதிரடி

வெறும் 850000/= ரூபா மட்டும் செலுத்தி
ஐரோப்பிய நாடொன்றில் மாதம்
2 இலட்சம் உழைக்கலாம்

*உணவு,இருப்பிடம், ரிக்கற் இலவசம்
*இரண்டு வருட விசா
*படிக்க, உழைக்க சட்ட ஆலோசனைக்கு விரைந்து வாருங்கள்
*9பேருக்கு மட்டுமே அரியவாய்ப்பு

(32206)(4.3.6)

## திசைகாட்டி (பிறைவேற்) லிமிட்



175, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 221 9016, 021 568 9090

# மரண அறிவித்தல்

## முருகுப்பிள்ளை விஜயரட்ணம்



யாழ்ப்பாணம், மயிலிட்டி, திருப்பூரைப் பிறப்பிடமாகவும் கொழும்பு-13, கல்பொத்த வீதியை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட முருகுப்பிள்ளை விஜயரட்ணம் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற முருகுப்பிள்ளை - பொன்னம்மா தம்பதியரின் மூத்த புதல்வனும் பிரபல வர்த்தகரான வி.கே. ராசையா (வீ.கே.ஆர்), காலஞ்சென்ற தெய்வானை தம்பதியரின் அன்பு மருமகனும் நேசக்கிளியின் (சந்திரா) அன்புக் கணவரும் விஜயராணி (பிரான்ஸ்), விஜயகுமார் (பிரான்ஸ்), விஜிதா (பிரான்ஸ்), விஜயராஜ் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு அப்பாவும் சசிகரன் (பிரான்ஸ்), லோயனா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனும் அபிலாஷ், அக்ஷயா, சர்வின் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கல்பொத்த வீதியிலுள்ள அவரின் இல்லத்தில் நடைபெற்று நாளை (04.10.2013) வெள்ளிக்கிழமை மாலை பி.ப. 4 மணியளவில் தகனக்கிரியைக்காக பூதவுடல் மாதம்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் மகன் விஜயகுமார் (பிரான்ஸ்)
(சி12551-23-14) 0112459486 - 0033-651894406

# மரண அறிவித்தல்

## திருமதி மகேந்திரராசா பவளமணி



(ஓய்வு பெற்ற லிகிதர்- பிரதேச செயலகம், கரவெட்டி)

வரணி வடக்கு, வரணியைப் பிறப்பிடமாகவும், கரவெட்டி மேற்கு கரவெட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட மகேந்திரராசா-பவளமணி நேற்று (02.10.2013) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைத்தியர் நடராசா- இராசம்மாவின் அன்பு மகளும், மகேந்திரராஜாவின் (ஓய்வுபெற்ற கிராம அலு வலர்) அன்பு மனைவியும், ஆறுமுகம், இராசமலர் ஆகியோரின் அன்புச் சகோதரியும், ராஜதீபன் (N.S.B சாவகச்சேரி), ராஜீவன்(கச்சேரி, கிளிநொச்சி), ராஜினி (லண்டன்), ரஜிந்தினி, ரஜிந்தன் ஆகியோரின் பெரிய தாயாரும், தர்சினி(லண்டன்), தயாளினி, தயாபரன்(லண்டன்) ஆகியோரின் பாசமிகு மாமியும், செல்வராணி, சுமதி, யோகமங்களம், ரஞ் சினி, சுகிர்தராணி, விக்னேஸ் வரன், கமலேந்திரன் (லண்டன்) ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கரியைகள் இன்று(03.10.2013) வியாழக்கிழமை பி.ப. ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சோனப்பு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

தகவல்: கு.மகேந்திரராஜா(கணவர்-ஓய்வுபெற்ற கிராம அலுவலர் )
கரவெட்டி மேற்கு, கரவெட்டி. தொ.இல:0212264426

# மரண அறிவித்தல்



## சரவணமுத்து கதிரவேலு

வீரவாணி வாதரவத்தையைப் பிறப்பிடமாகவும் இராசவீதி, நீர்வேலி வடக்கு, நீர்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட சரவணமுத்து கதிரவேலு நேற்று (02.10.2013) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சரவணமுத்து- இளையபிள்ளை தம்பதியரின் மூத்த மகனும் காலஞ்சென்றவர்களான செல்லையா-நாகமுத்து தம்பதியரின் மருமகனும் காலஞ்சென்ற பரமேஸ்வரியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான நவரத்தினம், கமலவேணி மற்றும் கணேசலிங்கம் (தொழில்நுட்ப உத்தியோகத்தர்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஜெயதிலகராணியின் (லண்டன்) பாசமிகு தந்தையும் உதயகுமாரின் (லண்டன்) அன்பு மாமனும் கிருசாந் (லண்டன), உதயகீதா (லண்டன்), சசிந்தா (லண்டன்), கிரிசங்கர் (லண்டன்), சிவகரன் (லண்டன்), சசீந்திரன் (லண்டன்), தனுசியா (லண்டன்) ஆகியோரின் அன்புப் பேரனும் அக்சறா, லோஜித், ஆகாஷ், அஸ்விதா ஆகியோரின் பூட்டனும் கோபாலசூரியர் (பிரதேச செயலகம், கரைச்சி), ஜெகசூரியர் (மாகாணக் கல்வித் திணைக்களம்), காயத்திரி (நீர்வேலி), சாவித்திரி (விவசாயத் திணைக்களம், வவுனியா), நிவாஸ் (யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்), நிலானி, நிஷானி ஆகியோரின் அன்புப் பெரியதந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.10.2013) வியாழக்கிழமை பி.ப. 2 மணிக்கு அன்னாரின் இல்லமான நீர்வேலி வடக்கு, நீர்வேலியில் நடைபெற்று தகனக்கிரியைகள் வாதரவத்தை இந்து மயானத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
த.இலங்கேஸ்வரன் (மருமகன்)
0776062752 (32261-23-14)

## BRITISH COLLEGE OF HIGHER STUDIES

BCHS

சர்வதேச பாடத்திட்டத்தின் த்ராதரத்திற்கு அமைய நவீன தொழில் நுட்பத்துடன் வழங்கும்

**Spoken English with Grammar** 1 1/2 Months
(ஆங்கிலத்தில் பேசுவதற்கு 100% உத்தரவாதம்) (Quick Learning course)

**Diploma in English** 2 1/2 Months

* எமது கற்கை நெறிகள் Writing, Speaking, Reading, Listening என வகைப்படுத்தப்பட்டு ஒவ்வொரு பிரிவும் மிகச்சிறந்த ஆசிரியர்களினால் கற்பிக்கப்படுகின்றது.
* O/L, A/L பரீட்சை எழுதிய மாணவர்கள், தொழில் தேடுவோர், தொழில் புரிவோர் மற்றும் ஆங்கிலம் கற்க விரும்பும் அனைவருக்கும் ஏற்றது.
* Excellent Teachers' Panel & Individual Attention

Jaffna Branch:
No. 15, Sirambiyady Lane,
off Stanley Road, Jaffna. Tel: 021 222 4550

Vavuniya Branch:
No. 3, 6th Lane, Vairavarkovil Veethy,
Vairavarpulliyamkulam,
Vavuniya. Tel: 024 324 5287

Hot Lines: 0777 222 422 / 0777585913 / 071 4299935 / 0777730074

கிழமை நாட்கள், பிற்பகல் மற்றும் சனி, ஞாயிறு வகுப்புகளும் ஆரம்பிக்கப்படவுள்ளது
அனுமதிகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதால், உங்களின் அனுமதிகளுக்கு முந்துங்கள்

Batch1: 05.10.2013
Batch2: 07.10.2013
Batch3: 12.10.2013
Batch4: 14.10.2013




உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் உயர்ந்த சம்பளத்துடனான
வேலைவாய்ப்பை இலக்காக கொண்ட பயிற்சிநெறி
**WebDesigning,Multimedia,Networking**
பங்குபற்ற விரும்புவோர் உங்களது <NAME> Free என type செய்து
772 395 895 க்கு sms செய்யவும். மேலதிக விபரங்கள்
யாழ் பல்கலைக்கழகத்திற்கு அண்மையில் உள்ள MCS வளாகத்தில்.

## கார் விற்பனைக்கு

வைத்தியரின் பாவனையில் உள்ள
JX-xxxx இலக்கமுடைய மாருதி கார்
உடன் விற்பனைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு:
மெடிக்கல் கிளினிக் 125, பிரதான வீதி,யாழ்ப்பாணம்.
(32174) (4,6,3) (பார்வையிடும் நேரம் 8A.M-1P.M)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 3.10.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.